20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் TM
VLAMBARAM TM
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விசேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351 Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 08 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் APRIL 15, 2010

# அணு உபகரணங்களின் பாதுகாப்புப்பற்றிய மாநாடு




நன்றி - CBC

கனேடிய பிரதமர் உட்பட 47 உலக நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவில் உள்ள வோஷிங்டன் டிசியில் அணு ஆயுதம் மற்றும் அணு உபகரணங்களின் பாதுகாப்பு பற்றி ஆராய்ந்த மாநாடு ஏப்பிரல் 13, 2010இல் நிறைவு பெற்றது.

இம்மாநாடு பற்றி அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவிக்கையில் இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளால் உலகம் ஒரு பாதுகாப்பான இடமாக மாறியுள்ளது என்றார். இவ் இரண்டுநாள் மாநாட்டின் முடிவில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் இப்போது அணு ஆயுதங்களால் ஏற்படக்கூடிய பயங்கரவாதம் உலக நாடுகளின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. இம்மாநாட்டில் பங்குபற்றிய உலகநாடுகளின் தலைவர்கள் உலகிலுள்ள பாதுகாப்பற்ற அணு உபகரணங்களை அடுத்த நாலு வருடங்களில் ஒரு பாதுகாப்பான நிலைக்கு கொண்டு வருவதாக உறுதி யளித்துள்ளார்கள் என்றார்.

## Toyota Lexus SUV இன் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது

ரொயொற்றா நிறுவனம் ஏப்பிரல் 13 ஆம் திகதியன்று 2010 ஆம் ஆண்டிற்கான Lexus GX 460 வாகன விற்பனையை நுகர்வோர் அறிக்கை சஞ்சிகையின் (Consumer Report Magazine) 'வாங்க வேண்டாம்' "Don't Buy" என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்து நிறுத்தியுள்ளது. இச்சஞ்சிகை வழக்கமாக தாங்கள் நடத்தும் ஆய்வுகூடப் பரிசோதனையைத் தொடர்ந்து இவ் SUV வாகனங்கள் தெருவில் ஓடும்போது பிரளுவதற்கு (roll over) சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. ரொயொற்றா நிறுவனம் தாங்கள் இவ்வாகனத்தினை இச்சஞ்சிகை செய்த மாதிரி ஒரு பரிசோதனையை செய்து பார்க்கும் வரைக்கும் தனது முகவர்களை இவ்வாகன விற்பனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி கேட்டுள்ளது. இதுவரை கனடாவில் 149 இந்த வகையான வாகனங்கள் மட்டுமே விற்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் இதுவரை 6,000 இந்த ரக வாகனங்கள் தான் விற்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாகனம் ஒன்றின் அடிப்படை விலை $52,000.

## மே 02, 2010 இல் நாடு கடந்த அரசுக்கான தேர்தல்

மே 02 இல் 2010 ஆம் நாள் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான உலகளாவிய தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் 115 பிரதிநிதிகள் உலகம் முழுவதும் முதலாவது அரசவைக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட உள்ளார்கள். மேலும் 20 பிரதிநிதிகள் தேர்தல் நடத்த வாய்ப்பு குறைந்த நாடுகளின் அல்லது பிராந்தியங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 135 பிரதிநிதிகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாம் அரச அவையில் அங்கம் வகிப்பார்கள்.

கனடாவில் இருந்து தெரிவு செய்யப்படும் 25 உறுப்பினர்களும் கனடாவை 5 ஆகப் பிரிக்கப்பட்ட தொகுதியில் இருந்து ஒரு தொகுதிக்கு 5 உறுப்பினர்கள்படி தெரிவு செய்யப்படவுள்ளார்கள். அவ் 5 தொகுதிகளும் பின்வருமாறு.

**ரொறொன்ரோ பெரும் பாகத்தின்**

| | | |
|---|---|---|
| மத்திய பிரிவு | - | 5 |
| கிழக்கு ஒன்ராறியோ | - | 5 |
| மேற்கு ஒன்ராறியோ | - | 5 |
| கிழக்கு கனடா | - | 5 |
| மேற்கு கனடா | - | 5 |
| **மொத்தம்** | - | **25** |

ரொன்ரோ பெரும் பாகத்தின் மத்திய பிரிவு பின்வரும் இடங்களை உள்ளடக்கியுள்ளது.

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........
355 Admiral Blvd. Unit 5
Mississauga, ON, L5T 2N1
Tel: (905) 565 6555
Fax: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HOMELIFE
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# நான் அறிந்த ஆறுதிருமுருகன்

கவிஞர் வி.கந்தவனத்தினால் "சிவபூமிக் கனிகள்" என்ற தலைப்பில் பெப்ரவரி 1ம் திகதி எழுதப்பட்ட கட்டுரையில் முதியோருக்கு செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆற்றும் சேவையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு அடுத்த இதழில் அவர் அதிபர் என்ற வகையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எவ்வளவு சிறப்பாக தனது கடமையை ஆற்றுகின்றார் எனவும் கவிஞர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வகையில் செஞ்சொற்செல்வரின் சேவைகளைப் பற்றி சற்று அறிந்தவன் என்பதால் நான் அறிந்த சிலவற்றை வாசகர்களுக்கு தெரியப்படுத்தலாம் என எண்ணுகிறேன்.

> "செஞ்சொற்செல்வர் வலுவிழந்தோர் மீது எவ்வளவு இரக்கம் உடையவர் என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே. சென்ற ஆண்டு நடுப்பகுதியில் இவர் "சமயச் சடங்குகளை சுருக்க வேண்டாம்" என்று யாழ் பத்திரிகை களில் ஒரு அறிக்கையொன்றை விடுத்திருந்தார். அது பல சைவ சமய வழிபாட்டுத் தலங்கள் தமது உற்சவங்களை முழுமையாக நடத்துவதற்கு உதவியதென்று கூறலாம்."

நான் அரச சேவையிலிருந்து இளைப்பாறி 2005 - 2006 காலப்பகுதியில் டாக்டர் என். சிவராஜா தலைமையில் கொக்குவிலில் இயங்கும் "ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில்" நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றினேன். இக் காலகட்டத்தில் செஞ்சொற்செல்வரை பல சந்தர்ப்பங்களில் சந்திக்கவும் அவர் பற்றி அறியவும் வாய்ப்புக் கிடைத்தது. இவர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கட்டளைப் பணிப்பாளராகச் செயற்பட்டார். யாழ்நகரில் அமைந்துள்ள வலுவிழந்தோர் சங்கங்கள் தமது ஆண்டு விழாக்களைக் கொண்டாடும் போது அன்பளிப்பாக அளிக்கப்படும் இந்த நிதியத்தின் காசோலைகளில் இவரே கையெழுத்திட்டிருப்பார். சுன்னாகத்தில் றொட்டியாலடியில் இயங்கும் விழிப்புலனற்ற மாணவர்கள் தங்கிக் கற்கும் "வாழ்வகம்" என்றழைக்கப்படும் விடுதிக்கும் இவர் பல வழிகளில் உதவிகள் நல்கியுள்ளார்.

2006ம் ஆண்டில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் வழமை போல் சகல வலுவிழந்தோர் சங்கங்களையும் அரவணைத்து தமது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது, இவர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறந்த உரை-யொன்றை நிகழ்த்தினார்.

என் நினைவின் படி 2005ம் ஆண்டில் மூத்த எழுத்தாளரும் சமய சம்பந்தமான பேச்சாளருமாகிய சொக்கன் காலமானார். அதற்கு சில நாட்களுக்குப் பின் யாழ் இந்துவின் முன்னாள் ஆசிரியரும் உப அதிபருமாகிய க. சிவராமலிங்கத்தை சந்திப்பதற்கு குமாரசாமி வீதி யிலமைந்திருந்த அவரது இல்லத்திற்குச் சென்றேன். இவர் எனது ஆசிரியர். இவர் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து சிறிது காலத்திற்குப் பின் ஒரு காலில் "போலியோவின்" தாக்கம் ஏற்பட்டதால் அக்கால் வலுவிழந்தது. ஆரம்பத்தில் ஊன்றுகோலுடன் நடப்பார். பின்னர் முச்சக்கர வண்டியிலேயே நடமாடுவார். நான் அவருடனான சம்பாஷணையின் இடை நடுவில் "மாஸ்டர் உங்களுக்கு சொக்கனின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததா என வினாவினேன். அதற்கு அவர் போக்குவரத்து வசதிய-'ின்மையால் நான் போகவேன்றிருக்க வில்லை. ஆனால் எனது மாணவன் ஆறுதிருமுருகன் அந்த நாளில் இங்கு வந்து என்னிடம் அது பற்றி வினாவி "நான் அங்கு தான் போகின்றேன் நீங்கள் என்னுடன் காரில் வாருங்கள்" எனக் கூறினார். அவர் என்னை தனது காரில் தூக்கி இருத்தி கூட்டிச் சென்று நிகழ்வின் பின் பாதுகாப்பாகத் திருப்பிக் கொணர்ந்து விட்டார்" எனக் கூறினார்.

செஞ்சொற்செல்வர் வலுவிழந்தோர் மீது எவ்வளவு இரக்கம் உடையவர் என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே. சென்ற ஆண்டு நடுப்பகுதியில் இவர் "சமயச் சடங்குகளை சுருக்க வேண்டாம்" என்று யாழ் பத்திரிகைகளில் ஒரு அறிக்கையொன்றை விடுத்திருந்தார். அது பல சைவ சமய வழிபாட்டுத் தலங்கள் தமது உற்சவங்களை முழுமையாக நடத்துவதற்கு உதவியதென்று கூறலாம்.

இவரது குடும்பமும், இவரது மிக நெருக்கமான உறவினர்களும் கூடுதலாக மேன்மையான ஆசிரியத் தொழிலையே மேற்கொண்டவர்கள். அத்துடன் சைவர்கள். நான் அறிந்த வரை இவரது தாயார் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியை, சகோதரர் ஒரு பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர், அத்துடன் இவரது சகோதரியும் மருமகளும் ஆசிரியர்களாவர்.

இன்றைய கால கட்டத்தில் இவர் போன்றவர்களின் சேவை யாழ்ப்பாணத்திற்குக் கிடைப்பது வரப்பிரசாதமாகும்.



**சி. மார்க்கண்டன்**
(இளைப்பாறிய பிரதம தபாலதிபர் யாழ்ப்பாணம்)

## வாசகர்களின் எண்ணங்கள்



விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

## அன்பான, பண்பான விளம்பரம் வாசகர்களுக்கு,

விளம்பரம் பத்திரிகை கடந்த 20 ஆண்டுகளாக தமிழர் மத்தியில் மிகவும் சிறப்பாகவும், மதிப்பாகவும் மாதமிருமுறை, காலம் தவறாமல் வந்து கொண்டிருப்பதனை நீங்கள் அறிவீர்கள். இதுவே எமது பலம்.

முக்கியமாக எமது பத்திரிகையில் வரும் கட்டுரைகளில் அனேகமானவை எழுத்தாளர்களால் தமது சொந்த ஆக்கங்களால் எழுதப்படுபவை. அத்துடன் எமக்கு வரும் ஆக்கங்கள் மனித மனங்களை நோகடிக்காமலும் பத்திரிகை தர்மத்தை கடைப்பிடித்தும், வாசகர்களால் அனுமதிக்கக்கூடிய மொழிப்பிரயோகமும் இருந்தால் எதுவித திருத்தமும் இல்லாமல் பிரசுரித்துவருவதை எமது விளம்பரம் பத்திரிகையில் எழுதிவரும் முப்பதிற்கும் மேற்பட்ட (30) விளம்பர எழுத்தாளர்களுக்கு புரியும். மேற்குறிப்பிட்டவையை தாண்டிய வாக்கியங்கள், ஆக்கங்கள் பல தடவை பிரசுரிக்காமல் தவிர்க்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் அதற்கு பொறுப்பானவர்களுக்கு பலமுறை எமது பத்திரிகையின் நோக்கங்களும், கொள்கைகளும், ஏற்பாடுகளும் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. இதே நிலைமை எதிர்காலங்களிலும் தொடரும். மேலும் அண்மையிலும் பல ஆக்கங்கள், மறுப்பாக்கங்கள் எமது காரியாலத்திற்கு வந்துள்ளன, வந்து கொண்டிருக்கின்றன. சில ஆக்கங்கள், மறுப்பாக்கங்களின் வார்த்தைப் பிரயோகங்கள் எமது எதிர்பார்ப்பை மீறுவதாக உள்ளன. இவை போன்ற ஆக்கங்கள், மறுப்பாக்கங்கள் எமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதனை தெரியப்படுத்துகிறோம். இவ்வாறான ஆக்கங்கள், பதில்கள், மறுபதில்கள் எழுதுபவர்கள் கருத்தில் கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் எதிர்காலத்தில் உங்களுடைய சமூக நிகழ்வுகளை இலவசமாக பிரசுரிக்க விரும்பினால் எமது அலுவலகத்திற்கு தொலைநகல், மின்னஞ்சல், கடிதம் போன்ற முறையில் அனுப்பியபின் எமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு உங்களது நிகழ்வுகளை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பதிப்பாளர்,
விளம்பரம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா றெயிலஸ் & டிசைன்ஸ்
*Jenisha Tailors & Designs*
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON



# புதிய நாடாளுமன்றம் நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமா?

## - இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்

நடந்து முடிந்துள்ள இலங்கையின் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பலத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அரச கூட்டமைப்பு வெற்றி பெறும் என பலரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அது நடை- பெறவில்லை. எனினும் அதிக பெரும்பான்மையுடன் அந்தக் கட்சி இப்போது வெற்றி பெற்றிருக்கின்றது.

இலங்கைப் நாடாளுமன்றம் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் 196 உறுப்பினர்கள் நேரடியாக வாக்காளர்களினால் தெரிவு செய்யப்படுவார் கள். மிகுதி 29 பேரும் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறையில் தேசிய பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். இது தேர்தல் நடைமுறை.

கண்டி மற்றும் திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் வாக்களிப்பு தினத்தன்று இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகளையடுத்து, இந்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் மறுவாக்களிப்பு நடைபெற வேண்டும் என தேர்தல் ஆணையாளர் உத்தர விட்டிருக்கின்றார். இந்த மாவட்டங்களில் இருந்து 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏப்ரல் 20 ஆம் திகதி தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இதனைத்தவிர அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளுக்கமைய, 117 ஆசனங்களை ஆளும் கூட்டமைப்பாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றிருக்கின்றது. முக்கிய எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி 46 இடங்களை மட்டுமே இந்தத் தேர்தலில் கைப்பற்றியிருக்கின்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 12 இடங்களை மாத்திரமே பெற்றிருக்கின்றது. முன்னாள் இராணுவ தளபதியாகிய சரத் பொன்சேகாவின் தலைமையிலான, ஜேவிபி உள்ளடங்கிய ஜனநாயகத் தேசிய முன்னணி கிண்ணம் சின்னத்தில் போட்டியிட்டு 5 இடங்களையே கைப்பற்ற முடிந்திருக்கின்றது.

## தேர்தல் இலக்குகள்

இந்தத் தேர்தலில் அமோகமான வெற்றியைப் பெறுவோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சூளுரைத்திருந்தார். இத்தகைய வெற்றியின் பின்னர் போரினால் சீரழிந்துள்ள நாட்டை அபிவிருத்தி செய்து கட்டியெழுப்பப் போவதாக அவர் உறுதியளித்திருந்தார். அத்துடன் நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைத்து பிரதமருக்கும் நாடாளுமன்றத்திற்கும் அதிகமான அதிகார பலத்தை வழங்கப்போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்லாமல் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றுவதற்கு முன்வருமாறு நாட்டு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்திருந்தார். நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டிணைந்து இந்தத் தேர்தலில் போட்டியிட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான இந்த அரசாங்கம் குடும்ப ஆதிக்கத்தை உருவாக்கி வருவதாக ஐக்கிய தேசிய கட்சியினர் குற்றம் சுமத்தியிருந்தனர். அத்துடன் நாட்டில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து அரச பரம்பரை ரீதியிலான குடும்ப ஆட்சிமுறையின் மூலம் நாட்டில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தப் போகின்றார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி வந்தனர். எனவே இந்தப் போக்கை மாற்றியமைத்து நாட்டில் ஜனநாயகத்திற்குப் புத்துயிர் கொடுப்பதற்காக இந்தத் தேர்தலில் தாங்கள் போட்டியிட்டு வெற்றிபெறுவோம் என ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கூட்டமைப்பினர் உறுதியளித்திருந்தார்கள். விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து, அந்த அமைப்பினை அழித்ததன் மூலம் முப்பது வருடங்களாக நீடித்த யுத்தத்திற்கு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இணைந்து முடிவு கட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர் இராணுவ சதிப்புரட்சி யொன்றை ஏற்படுத்தப் போகின்றார் எனக் கூறி சரத் பொன்சேகாவைப் பதவி இறக்கம் செய்தார்.

இதனை ஓர் அவமானமாகக் கருதி, மகிந்த ராஜபக்சவை எதிர்த்து ஐக்கிய தேசியகட்சி மற்றும் தமிழ்த்தேசிய கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகளின் உறுதுணையோடு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா எதிர்பார்த்த விதத்தில் வெற்றி அடையவில்லை. அதற்குப் பதிலாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கடுஞ் சீற்றத்திற்கு ஆளாகி நாட்டின் கௌரவத்திற்கு கேடு விளைவித்ததுடன், விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் இரகசியத்தை வெளிநாடுகளுக்குக் காட்டிக் கொடுத்தார் என்ற குற்றஞ்சாட்டின் பேரில், இராணுவத்தினரால் கைது செய்யபப்பட்டு, குண்டுகட்டாகத் தூக்கிச் செல்லப்பட்டார். இராணுவ தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட அவருக்கு எதிராக இராணுவ நீதிமன்ற விசாரணையையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முடுக்கிவிட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையில் சரத் பொன்சேகாவின் தலைமையில் அணிதிரண்டிருந்த எதிர்க் கட்சிகள் உடைந்து, பிரிந்து சென்று வியூகம் அமைத்து தேர்தலில் போட்டியிட்டன. ஐக்கிய தேசிய கட்சியும் ஜேவிபியும் தேர்தலுக்காகக் கூட்டுச் சேர்ந்தன. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனியாகத் தேர்தலில் குதித்தது. இறுதியில் சரத் பொன்சேகாவும் ஜேவிபியும் மாத்திரமே தனித்து நின்று இந்தப் பொதுத் தேர்தலில் கிண்ணம் சின்னத்தில் போட்டியிட்டன.

> “ பொதுவாகவே நாடெங்கிலும் வாக்களிப்பு வீதம் இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே முதல் தடவையாக இம்முறை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. தேசிய வாக்களிப்பு வழமையாக 65 வீதத்திலிருந்து 75 வீதமாக இருந்து வந்துள்ள நிலையில் இம்முறை வாக்களிப்பு வீதம் 55 வீதமாகக் காணப்படுவதைப் பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ”

| | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - | 117 |
| ஐக்கிய தேசிய கட்சி கூட்டமைப்பு | - | 46 |
| தமிழ்த்தேசிய கூட்டமைப்பு | - | 12 |
| ஜனநாயகத் தேசிய முன்னணி | - | 5 |
| மீள் தேர்தல்(ஏப்ரல் 20 ஆம் திகதி) | - | 16 |
| தேசிய பட்டியல் உறுப்பினர்கள் | - | 29 |
| **மொத்தம்** | - | **225** |

சிறையில் இருந்தவாறு தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா நாட்டில் ஜனநாயத்தைப் பாதுகாப்பதற்காக மக்கள் தமது கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையை பெரும்பான்மையான மக்கள் நிராகரித்துள்ளதாகவே தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன. அவரது கட்சி ஆக 5 ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்திருக்கின்றது. எனினும் சரத் பொன்சேகா இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனது வேட்பாளர் பட்டியலில் பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம்கொடுக்கவில்லை. அத்தகையோரின் கடந்தகாலச் செயற்பாடு களே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முடிவுக்கு நேர்மாறாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான

தொடர்ச்சி 04ம் பக்கம்

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# உங்கள் சுமைகளை இங்கே போடுங்கள்



**சத்குரு வாசுதேவ்**

ஆன்மீகத்தில் சரணடைவதைப் பற்றி பேசிக் கொண்டே வந்திருக்கிறார்கள். ஆனால் தர்க்கரீதியாக, கல்வி பெற்ற மனங்கள் 'சரணா-கதி' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் தங்களைச் சுற்றி கோட்டைகளை எழுப்பிக் கொள்கின்றனர். ஆன்மீகத்தில் சரணாகதி என்ற சொல் எங்கே பயன்படுத்தப்படுகிறது என்றால், எவையெல்லாம் பொய்யோ அவற்றை சரணடையச் செய்ய வேண்டும் என்கிற பொருளில் தான். இதுவரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையே பொய்மயானது. 'நீங்கள்' என்று எதைக் குறிக்கிறீர்களோ, அவை அனைத்துமே வாழ்க்கையில் நீங்கள் கொண்டிருக்கிற அடையாளங்களின் தொகுப்பு தான். ஆனால் உங்களுடைய உள்நிலைத் தன்மையைப் பார்க்கிறபோது, நீங்கள் எதை சரணடையச் செய்ய முடியும்? சரணடையச் செய்வதற்கு எதுவுமில்லை. உங்கள் அடிப்படையான உயிர்த்தன்மை எப்படி இருந்ததோ அது அப்படியே இருக்கும். இதை நீங்கள் புரிந்து கொள்கிறபோது உங்களுடைய ஆன்மீகம் நிறைவு பெற்றிருக்கும். ஏனென்றால், ஏற்கனவே சரணடைந்து இருப்பீர்கள். நீங்கள் எதிர்த்திருக்கிற போலித்தன்மையின் சுவர்களை உடைக்கிறபோது எல்லாம் ஒன்றாகிறது. உண்மையில் எந்த சுவர்களும் இல்லை. அவை இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்கள். எனவே, உண்மையை நீங்கள் அரை குறையாகவும், குறுகிய எல்லையோடும் புரிந்து கொண்டதால் இந்த பிரிவுகள் நேர்கின்றன. முழுமையான விடுதலையைத் தேடுகிறபோது உங்கள் மாயைகளை நீங்கள் சரணடையச் செய்தால் போதும். மாயைகள் சரணடைகிற போது உண்மை உதிக்கிறது. உண்மையோ, நிதர்சனமோ இப்போ உங்கள் அனுபவத்தில் இல்லை. பல்வேறு பதிவுகள் காரணமாக உங்களைச் சுற்றி நீங்களே ஒரு உலகத்தை

> "உங்கள் குறுகிய புரிதலுக்கு அப்பாற்பட்ட எதுவுமே வெளியில் இல்லை என்பது போல் நீங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்."

உருவாக்கி இருக்கிறீர்கள். அந்த உலகம் உண்மையானது அல்ல. நிஜமானதும் அல்ல. இருப்பின் தன்மையோடு தொடர்பு கொள்ளாமல் உங்களால் இங்கு ஒரு விநாடி கூட வாழ முடியாது. ஆனால் உங்களைப் பொறுத்தவரை நீங்கள் முழுமையடைந்தவர் என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் குறுகிய புரிதலுக்கு அப்பாற்பட்டு உலகத்தில் எதுவுமே இல்லை என்பது போல் நடந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த போலியான எல்லைகளை விடுத்து வருவதுதான் ஆன்மீகப் பயிற்சி. குறிப்பிட்ட முறையில், குறிப்பிட்ட செயல்முறையில் தான் இது ஒரு மனிதருக்கு நிகழ வேண்டும் என்பதில்லை. உண்மையை உணர வேண்டுமென்று யார் கருதினாலும் அவர்களுக்கு எப்போதும் அவர்கள் துணை இருக்கிறது. அதற்கான சூழ்நிலையை ஆன்மீக குருமார்கள் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தச் சூழலில் ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய பந்தங்களிலிருந்து எளிதாக, இயல்பாக விடுபட முடியும். வாழ்க்கை முழுதுவம் இருக்கக்கூடிய அடையாளங்களை அகற்றுவது என்பது அந்தரத்தில் குதிப்பது போல் அச்சமூட்டுகிறது.

ஆனால் உங்களை விட ஒரு பெரிய சக்தியின் உடனிருப்பை நீங்கள் உணருகிறபோது, 'நீங்கள்' என்று எதைக் கருதியிருக்கிறீர்களோ, அதைத் தள்ளி வைப்பது இயல்பாக இருக்கிறது, எளிதாக இருக்கிறது. உங்களை முழுமையாகத் தள்ளி வைத்தாலே ஒழிய உண்மையை உங்களால் கண்டடைய முடியாது. குறுகிய அடயாளங்களை நீங்கள் விடுகிற போது, இந்த பிரபஞ்சத்தில் மற்ற தன்மையோடு உங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டியது, தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. விடுதலை தேடுகிற ஒரு மனிதருக்கு, உண்மையை கண்டடைகிற ஒரேவழி எல்லா சுவர்களையும் உடைப்பது. அங்கேதான் உங்கள் தனித்தன்மை கரைகிறது. அதுதான் சரணாகதி. முழுமையான சுதந்திரம், விடுதலை.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org / www.ishayoga.org

# புதிய நாடாளுமன்றம்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

சிவாஜிலிங்கம், சிறிகாந்தா ஆகிய இருவரும் இணைந்து ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டனர். சிவாஜிலிங்கம் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந் தார். இதனால் சிவாஜிலிங்கமும் சிறிகாந்தாவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் மட்டக்களப்பில் தங்கேஸ்வரி, வன்னியில் சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரத்தினம், யாழ்ப்பாணத்தில் பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செல்வராசா கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து தாங்கள் விலகுவதாகக் கூறினார்கள். தமிழ்த்தேசியத்தைக் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கைவிட்டு விட்டதற்காகவே தாங்கள் அந்தக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதாக அவர்கள் காரணம் தெரிவித்திருந்தனர்.

தங்கேஸ்வரி, கனகரத்தினம், கிஷோர் ஆகிய மூவரும் ஆளும் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் சேர்ந்து பொதுத் தேர்தலில் களமிறங்கினார்கள்.

பத்மினி சிதம்பரநாதன், பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செல்வராசா கஜேந்திரன் மூவரும் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டார்கள். சிவாஜிலிங்கமும், சிற-ிகாந்தாவும் புதிய கட்சியமைத்து குடை சின்னத்தில் போட்டியிட்டார்கள். இவர்கள் அனைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பொதுத்தேர்தலில் முற்றாகத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்பதே தமது நோக்கம் என தெரிவித்திருந்தார்கள். ஆனால் நடந்தது என்ன?

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கடந்த பொதுத்தேர்தலில் கைப்பற்றியிருந்த 22 ஆசனங்களில் 9 ஆசனங்களைக் கைநழுவ விட்டு இழப்புக்களுடன் வெற்றியடைந்திருக்கின்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற அனைவருமே இந்தத் தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளார்கள். உதிரியாக சில நூறு வாக்குகளையே அவர்களில் சிலர் இந்தத் தேர்தலில் பெற்றிருக்கின்றார்கள். தேர்தல் விளைவுகள் இந்தப் பொதுத் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் பல்வேறாகப் பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்தும், அரசாங்கத்தின் (நிதி) ஆதரவுடனும் பெரும் ஆரவாரத்துடன் களமிறங்கினார்கள். ஆயினும் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே அமைப்பின் கீழ் போட்டியிட மாட்டார்களா என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டது. பொதுமக்களின் இந்த ஆவலையும் எதிர்பார்ப்பையும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும், அவற்றின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள். ஆயினும் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக பிளவுகளே ஏற்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தா தமது சொந்தச் சின்னமாகிய வீணைச் சின்னத்தில் போட்டியிட முடியாத அரச தரப்பு நெருக்குதல் நிலையில் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியில் போட்டியிட்டு மூன்று இடங்களைக் கைப்பற்றியுள்ளார். எட்டு ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் ஐந்து இடங்களை மட்டுமே இம்முறை கைப்பற்ற முடிந்தது. வன்னியில் ஐந்து இடங்களைக் கைப்பற்றியிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இம்முறை இரண்டு ஆசனங்களை முஸ்லிம் பிரதிநிதிகளிடம் கோட்டை விட்டுள்ளது. மூன்று இடங்களை மாத்திரமே அது இப்போது தன்வசம் தக்க வைத்திருக்கின்றது. ஆயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் தலைவராகிய அமைச்சர் ரிசாட் பதியுதீன், அவரது கட்சியைச் சேர்ந்த யுனைஸ் பாரூக் ஆகிய இருவரும் வெற்றிபெற்றிருக்கின்றார்கள். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நூர்டீன் மசூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




இதன் மூலம் 70 வீதத்திற்கும் அதிகமான தமிழர்களைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் 3 தமிழர்களும், 3 முஸ்லிம்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகியிருக்கின்றார்கள். சிங்களவர்கள் தரப்பில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. இது இந்தத் தேர்தல் மாவட்டத்திற்குப் பெரும் பின்னடைவாகவே கருதப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஈபிடிபி 3 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்திற்குச் செல்கின்றது. இவர்கள் வெற்றிலைச்சின்னத்தின் கீழ் வெற்றிபெற்றிருப்பதனால் அரசாங்கத்திற்கே அது வெற்றியாகும். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் அங்கு போட்டியிட்ட திருமதி மகேஸ்வரன் பெற்றுள்ள வெற்றி ஐக்கிய தேசிய கட்சிக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து சென்றதையடுத்து யாழ்ப்பாணத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில், மூன்று புதிய முகங்கள் இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தமிழ்க்காங்கிரசின் தலைவராக இருந்த மூத்த சட்டத்தரணியாக-ிய அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி, யாழ் உதயன், கொழும்பிலிருந்து வெளிவருகின்ற சுடரொளி ஆகிய பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளராகிய ஈஸ்வரபாதம் சரவணபவன். பாடசாலை அதிபராகக் கிளி-நொச்சியில் கடமையாற்றிய சிவஞானம் சிற-ிதரன் ஆகியோரே இந்தப் புதியவர்களாவார்கள்.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 20 வீதமானவர்கள் மாத்திரமே வாக்களித்திருப்பதானது அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

பொதுவாகவே நாடெங்கிலும் வாக்களிப்பு வீதம் இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே முதல் தடவையாக இம்முறை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. தேசிய வாக்களிப்பு வழமையாக 65 வீதத்திலிருந்து 75 வீதமாக இருந்து வந்துள்ள நிலையில் இம்முறை வாக்களிப்பு வீதம் 55 வீதமாகக் காணப்படுவதைப் பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஏன் இந்த மந்த நிலை?
தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இணக்கப்பாட்டு அரசியல் எதிர்ப்பரசியல்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# நாடு கடந்த தமிழீழ அரசின் முதலாவது தேர்தல்
# எமது இறுதிப்போரின் முதற்படி - கலாநிதி ராம் சிவலிங்கம்

மே மாதம் 2ம் திகதி நடக்கவிருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசின் உலகளாவிய ரீதியிலான தேர்தல், உலகச் சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். இதுகண்டு, மனிதாபிமானத்துக்கு மதிப்பு கொடுக்கும் அத்தனை நாடுகளும் எமது சாத்வீகப் போருக்கு ஆதரவு தரவேண்டும். சாமர்த்தியமான எமது நகர்வு கண்டு உலகமே எம்மை மெச்சவேண்டும், உதவவேண்டும். இவை எல்லாம் நிறைவுபெற நாம் எல்லோரும் மறவாமலும், தவறாமலும் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

எம்மவர் உரிமைகளைப் பெற்றுத்தர, அவர்கள் வாழ்வை வளம்படவைக்க நாம் எடுக்கும் இறுதிப்போரின் முதற்படிதான் இந்தத் தமிழீழ அரசின் முதலாவது தேர்தல். இத்தேர்தலில் வாக்களிக்க நாம் ஒதுக்கும் நேரம் சொற்பமானதென்றாலும், நாம் போடும் ஒவ்வொரு வாக்கும் விலை மதிக்கமுடியாதவை. உயிர்களை மட்டுமல்ல எம் இனத்தின் உரிமைகளையும், உடமைகளையும் பேணவல்ல பிரதிநிதிகளைத் தேர்வு செய்யும் வாக்குக்களின் மதிப்புக்கு ஏது எல்லையப்பா?

வயிறார உண்டு பல மாதங்களான எமது உறவுகளின் நிலமையை ஒருதரம் நினைத்துப்பாருங்கள். அச்சமே வாழ்க்கை, வாழ்க்கையே அச்சம் என முள்ளிவேலிக்குள் முடங்கித் தவிக்கும் எம் அன்பு நெஞ்சங்களை ஒருமுறை எண்ணிப் பாருங்கள். எம் இனிய உறவுகளே! பாவம் செய்தால் மட்டும் பாவமில்லை, பாவம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதே பாவமல்லவா?

தனக்குத் தவறுசெய்த கணவனைத் தண்டிக்காது, கோவலன்மீது கொண்ட பாசத்தால், மதுரையை அழித்த கண்ணகியின் சந்ததியே! எங்கள் உறவுகளைக் காக்கும் உன்னதப்பணியை உரிமையுடன் செய்ய நாம்தானே முன்வர வேண்டும். வாக்காளர்களாக மட்டுமின்றி திறமையும், சாமர்த்தியமும், இராஜதந்திரமும் கொண்ட வேட்பாளர்களை இத்தேர்தலில் நிறுத்தி அவர்களை வெற்றிபெறச் செய்வதும் எமது கடமைகளில் ஒன்றல்லவா?

தமது உயிரையே தன் இனத்திற்கு தருவதை ஓர் வரமாக எண்ணிய உங்கள் உறவுகளின் ஆசை, விருப்பம், தியாகம், சிந்தனை எல்லாமே வீணாகலாமா? தேர்தல் நாள், உங்கள் வாக்குக்களை திறமையும், சாமர்த்தியமும், இராஜதந்திரமும் கொண்ட அறிவுள்ள வேட்பாளருக்கே இட்டு எமது பலத்தை உயர்த்த உங்களைத்தவிர வேறு யாரால் முடியும். அன்பும், கருணையும் கொண்டவர்கள் மனிதரூபத்திலான தெய்வங்களல்லவா?

இந்தத் தேர்தல் திருநாள் ஒவ்வொரு புலம்பெயர் தமிழரின் மனதிலும், சிந்தனையிலும் நன்றாகப் பதியவேண்டும், பதிந்த நினைவுகள் வாக்குகளாகமாறி எமது வாக்கின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இத்தேர்தலில் வெற்றி பெறும் பிரதிநிதிகளின் திறமையும், நாம் அவர்களுக்கு அளிக்கும் வாக்குகளின் எண்ணிக்கையும் தானே எமது வலு. இவைதானே உலகம் எம்மிடம் எதிர்பார்க்கும் பலம், சக்தி.

தேர்தலுக்கான இறுதிக்கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இதுவரை பங்கு கொள்ளாத அமைப்புக்கள், ஊர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கோவில்கள், தொழில் ரீதியான சபைகள் எல்லாமே இனிமேலும் பார்வையாளர்களாக இருக்காமல் பங்காளிகளாக மாறுங்கள். உங்கள் அனைவரது ஒத்துழைப்பும், பங்களிப்பும் கண்டு ஒட்டுமொத்தத் தமிழினமும் பெருமையும், மகிழ்ச்சியுமடைய வேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசு தமிழருக்காக தமிழரால் அமைக்கப்பட்ட, கட்சி சார்பற்ற, அமைப்பு சார்பற்ற, இயக்கம் சார்பற்ற ஓர் உன்னதமான உலகளாவிய தமிழர்களின்



கூட்டமைப்பு. இதன் பாராளுமன்றத்திற்கான பிரதிநிதிகளைத் தேர்வு செய்யவே இவ்வருடம் மே மாதம் 2ம் திகதி நாம் நடாத்தும் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான முதல் தேர்தல். இதில் பங்குகொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழரினதும் வரலாற்றுக் கடமையல்லவா?

நிலத்தில் புரளும் நம்மவர் நிமிர்ந்து நடக்க, அஞ்சிவாழும் எம்மவர் ஆடிப்பாட உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும், பங்களிப்பும் எமக்கு நிச்சயம் தேவை. உங்கள் திறமைமிக்க செயற்பாடும், அன்புமிக்க ஆதரவும் எமக்கு வலுவையும், உற்சாகத்தையும் தரும் என்பது திண்ணம். இதை உணர்ந்து, இனியும் தாமதிக்காமல், எல்லோரும் எம்முடன் சேர்ந்து செயற்படுமாறு அன்புடன் வேண்டுகிறோம், ஆவலுடன் அழைக்கிறோம்.


15 Years of EXPERIENCE

Maths - Science English

Classes in Progress

For All Grades

K.G, Gr.1 to Gr 12

Scarborough / Markham



Mr & Mrs Sharma - 416-666-5515 / 416.724.9996

# பாகிஸ்தான் தரும் கல்யாணப்பரிசு!

## விளையாட்டுத் தகவல்கள் 281

### ஐபிஎல்: 493 ரன் குவித்து கல்லிஸ் முதலிடம்

ஐ.பி.எல். போட்டியில் முதல் லீக் சுற்றில் அனைத்து போட்டிகளும் முடிந்து தற்போது 2 வது சுற்று போட்டிகள் நடந்து வருகின்றன. இதுவரை 41 போட்டிகள் முடிந்து உள்ளன. இதில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் வீரர் கல்லிஸ் 10 போட்டிகளில் ஆடி 493 ரன்கள் எடுத்து முதலிடத்தில் இருக்கிறார். மும்பை வீரர் தெண்டுல்கர் 10 போட்டிகளில் ஆடி 423 ரன்களுடன் 2 வது இடத்தில் உள்ளார். ராஜஸ்தான் வீரர் ஓஜா 352 ரன்களுடன் 3 வது இடத்தில் உள்ளார்.

பந்து வீச்சில் டெக்கான் சார்ஜர்ஸ் வீரர் பி.பி.ஓஜா 15 விக்கெட்டுகள் வீழ்த்தி முதலிடத்திலும், டெல்லி வீரர் மிஸ்ரா 14 விக்கெட்டுடன் 2 வது இடத்திலும், மும்பை வீரர் மலிங்கா 13 விக்கெட்டுடன் 3 வது இடத்தில் உள்ளனர். ஒரே போட்டியில் அதிக ரன் எடுத்த வீரர்களில் சென்னை வீரர் முரளி விஜய் முதலிடத்தில் உள்ளார். அவர் 3 ந்தேதி ராஜஸ்தான் அணியுடன் நடந்த மோதலில் 127 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் வீரர் ஜெயவர்த்தனே 110 ரன்களும், வார்னர் 107 ரன்களும் எடுத்துள்ளனர். இதுவரை விஜய், ஜெயவர்த்தனே, வார்னர், யூசுப் பதான் ஆகியோர் சதம் அடித்துள்ளனர்.

கல்லிஸ் அதிகபட்சமாக 6 அரை சதமும், தெண்டுல்கர் 4 அரை சதமும், கங்குலி, ஷேவாக், சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 3 அரை சதங்களும் அடித்து உள்ளனர். ராஜஸ்தான் வீரர் யூசுப் பதான் அதிகபட்சமாக 23 சிக்சர்களும், சென்னை வீரர் விஜய் 20 சிக்சர்களும், உத்தப்பா 17 சிக்சர்களும் அடித்து உள்ளனர்.

### முரளீதரனை சேர்க்காதது ஆச்சரியம் அளிக்கிறது : கில்கிறிஸ்ட்

சென்னை சூப்பர்கிங்ஸ் அணி டெக்கானிடம் தோல்வியை தழுவியது. சென்னை வீரர்களின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. கேப்டன் டோனி, ஹைடன், மைக்ஹஸ்சி, பத்ரிநாத் ஆகியோர் பேட்டிங்கில் சொதப்பினார்கள்.

இந்த மோசமான ஆட்டத்தால் ரசிகர்கள் வெறுப்படைந்தனர். வெற்றி குறித்து டெக்கான் சார்ஜர்ஸ் கேப்டன் கில் கிறிஸ்ட் கூறியதாவது:- முரளீதரன் சிறந்த சுழற்பந்து வீரர். எந்த ஆடுகளத்திலும் சிறப்பாக வீசக்கூடியவர்.

இந்த ஆடுகளம் அவரது பந்துவீச்சு மிகுந்த பலனை கொடுத்து இருக்கும். நாங்கள் சிரமபட்டு இருப்போம். அவரை சேர்க்காதது ஆச்சரியமான விஷயம். நாங்கள் இன்னும் சிறப்பாக ஆட வேண்டும். இனிவரும் ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றியை பெற வேண்டும்.

### மும்பை இந்தியன்ஸ் தொடர்ந்தும் வெற்றிப் பாதையில்

இந்தியன் பிரிமியர் லீக் டுவன்ரி - 20 கிரிக்கட் போட்டித் தொடரின் 45 ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 37 ஓட்டங்களால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வீழ்த்தியுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவரும் உலக நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சச்சின் டெண்டுல்கர் மிக அபாரமாக துடுப்பெடுத்தாடி அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார். ஜெய்ப்பூரின் சவாய் மனாசிங் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்தப் போட்டி நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ஷேன் வோர்ன் முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் ஐந்து விக்கட்டுகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் மிக அபாரமாக துடுப்பெடுத்தாடிய சச்சின் டெண்டுல்கர் 59 பந்துகளில் 2 சிக்ஸர் மற்றும் 10 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களையும், ஜே.பி. டொமினி 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சனத் ஜயசூரிய இந்தப் போட்டியில் ஒரு ஓட்டம் மட்டுமே பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஷேன் வொட்சன் மூன்று விக்கட்டுக்களையும் வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் எட்டு விக்கட்டுகளை இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் அடிட்டியா டோல் 30 ஓட்டங்களையும், அடம் வோஜஸ் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் எவரும் நீண்ட நேரம் ஆடுகளத்தில் நிலைத்திருக்கவில்லை. பந்து வீச்சில் சஹீர் கான் இரண்டு விக்கட்டுகளையும், தவால் குர்கல்கர்னி, ஹர்பஜன் சிங் மற்றும் கெவின் பொலார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர். மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சச்சின் டெண்டுல்கர் போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### உலகக் கிண்ண கால்பந்து : அல் கய்டா மிரட்டல்

தென் ஆப்பிரிக்காவில் வரும் ஜுன் மாதம் துவங்கவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளின் போது தாக்குதல் நடத்தப் போவதாக அல் கய்டா இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய அணி வீரர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப் போவதாக அல் கய்டா இயக்கத்தின் வட ஆப்பிரிக்கப் பிரிவு அறிவித்துள்ளது.

இதனையடுத்து, ஜுன் 11 ஆம் தேதி துவங்கி சுமார் ஒரு மாதம் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களுக்கு தென் ஆப்பிரிக்கா அரசு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

### ரியால் மேட்ரிட்டை வீழ்த்தியது பார்சிலோனா

மேட்ரிட்டில் நள்ளிரவு நடைபெற்ற ஸ்பானிய கால்பந்து லீக் போட்டியில் 2-0 என்ற கணக்கில் ரியால் மேட்ரிட் அணியை வீழ்த்தி பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பானிய கால்பந்து லீக் போட்டியில் நட்சத்திர கால்பந்து வீரர்கள் நிரம்பிய பார்சிலோனா, ரியால் மேட்ரிட் அணிகள் மோதின. இந்தப் போட்டி சாம்பியன் பட்டம் வெல்லும் அணியைத் தீர்மானிக்கும் போட்டி என்பதால் ரசிகர்களால் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ரியால் மேட்ரிட் அணியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ, அல்பாரோ அர்பெலோவா, லசானா டியாரா ஆகியோரும், பார்சிலோனா அணியில் அர்ஜென்டினா சிங்கம் லயோனல் மெஸ்ஸி, சார்ல்ஸ் புயோல், சாவி ஆகியோரும் குறிப்பிடத்தக்க வீரர்களாக களத்தில் இறங்கியதால் போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

அதே சமயம் இந்த "ஹை வோல்டேஜ்" கால்பந்தாட்டம் மேட்ரிட்டில் நடைபெற்றதால், போட்டி ரியால் மேட்ரிட் அணிக்கு சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு பார்சிலோனா அணி, ரியால் மேட்ரிட் அணியை 6- 2 என்ற கோல் கணக்கில் ஊதித் தள்ளியது இன்னமும் ரியால் மேட்ரிட் அணியினரிடம் காயமாக படிந்திருப்பதால் அதற்கு பழி வாங்கும் விதமாக ஆட்டத்தில் ரியால் வீரர்கள் ஆவேசமாக விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக பார்சிலோனா அதே ஆட்டத்தை வெளிப்படுத்தி, வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சியது.

போட்டியில், பார்சிலோனாவின் நட்சத்திர அர்ஜென்டினா வீரர் லயோனல் மெஸ்ஸியே அடுத்தடுத்து கோல்களை அடித்தார். இந்த வெற்றி மூலம் 17 போட்டிகளில் தோல்வி எதுவும் இல்லாமல் 13 வெற்றிகள் 4 டிராக்களுடன் பார்சிலோனா அணி 43 புள்ளிகள் எடுத்து முதலிடத்திற்கு முன்னேறியது. மற்றொரு நட்சத்திர அணியான ரியால் மேட்ரிட் 41 புள்ளிகள் பெற்று 2-வது இடத்திலும், வாலென்சியா அணி 35 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும், லா கொருனா 4-வது இடத்திலும், செவில்லா 5-வது இடத்திலும் உள்ளது.

### ஷோஷிப் மாலிக் தடை நீக்கப்படலாம் : பாகிஸ்தான் தரும் கல்யாண பரிசு?

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் நடப்பு முடிவின்படி ஷோயப் மாலிக் மீது விதிக்கப்பட்டிருந்த தடை விரைவில் நீக்கப்படலாம் என்று தெரிகிறது. ஷோஷிப் மாலிக் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் ஓராண்டு தடை விதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டு வீரர் ஷோயப் மாலிக்கும் ரென்ஸ் விளையாட்டு



வீராங்கனை சானியா மிர்சா வுக்கும் திருமணம் ஏப்ரல் 12 அன்று நடைபெற்றது.

தற்போது ஆயிஷா என்ற பெண்மணி ஷோஷிப்பை தான் ஏற்கனவே திருமணம் செய்து கொண்டதாகவும், தான் கர்ப்பமாக இருப்பதாகவும் புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டுள்ள நிலையில் அவர் முன் ஜாமீன் எடுக்க முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. காவல்துறையினர் ஷோஷிப் மாலிக்கை, சானியா மிர்சா வீட்டில் வைத்து சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தினர். அதில் குறிப்பாக ஐதராபாதில் 2005ஆம் ஆண்டு ஆயிஷாவுடன் டாஜ் ரெசிடென்சி விடுதியில் ஷோஷிப் மாலிக் தங்கினாரா என்று விசாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மேலும் அவரும் ஆயிஷாவும் துபாயில் சந்தித்தனரா?, ஆயிஷா கொடுத்த விருந்தில் அணி வீரர்களுடன் ஷோஷிப் மாலிக் பங்கேற்றது உண்மையா?, ஆயிஷா வாயை அடைக்க லஞ்சம் கொடுக்க முயற்சி செய்தாரா? தொலைபேசியில் நடந்த திருமணத்திற்கான சாட்சிகள் யார் யார்? என்ற கோணத்தில் போலீஸ் தங்களது விசாரணையை நடத்தியதோடு, அவரும் ஆயிஷாவும் இருந்த சில சி.டி. மற்றும் புகைப்படங்களையும் ஷோஷிப் மாலிக்கிடம்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



எஸ். கணேஷ்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# Plug In வசதியுள்ள புதியரக வீடு / மனைகள்

சந்திரனை கையில் பிடித்து காட்டி, சோறு ஊட்டியது ஒரு காலம். சந்திரனைக் கையில் பிடிக்கலாமா? சிந்தித்தது இன்னொரு காலம். நம்புவதற்கு இயலாத காலம். 1968 இல் சந்திரனில் முதலடி வைத்த நீல் ஆம்ரோங், தாயின் சொல்லை உண்மை ஆக்கியது. எதனை மனிதமனம் கற்பனை செய்யுமோ. அதனை வேறு ஒரு காலத்தில் உண்மையாக்குவது தான் இந்த விஞ்ஞான வளர்ச்சி. அதன் ஒரு படிதான் Plug In எதிர் காலம். Hybrid மகிழுந்து அடுத்தது Plug In மகிழுந்து.

எரிபொருளின் விலை அதிகரிப்பு, எலெக்றிக்கல் மகிழுந்துவின் பெருமையை யும், தேவையையும் அதிகரிப்பது இயல்பானதே, தேவையும் கூட.

அண்மையில் வெளிவந்த Toyota's Prius விரைவில் வெளிவர இருக்கும். Chevrolet Volt வாங்குனர்களின் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. இந்தவகை கார்கள் பகுதியாக மின்சாரத்தில் இயங்குவதனைக் காணலாம்.

ஆனால் இன்றைய நிலைமை Plug In தொழில்நுட்பம் சகல கார்களிற்கு போதுமானதா? அத்துடன் இவை போதியளவு வசதியுள்ளதாக காணப்படு கின்றதா? என்ற கேள்விகள் தோன்றுவது இயல்பானதே.

ஆனால் எதிர்காலத்தில் வெளிவர இருக்கும் 100% எலெக்றிக்கலில் இயங்கும் கார்களை Charge பண்ணுவதற்கான, போதியளவு Plug In காணப்படுகின்றதா?

எனவே எதிர்காலத்தில் நிர்மாணம் செய்யப்பட இருக்கும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள், உள்ளரங்க கட்டிடங்கள், சினிமாக் கொட்டகைகள் போன்றவை, வெகுவிரைவில் வெளிவர இருக்கும். Plug In மின்சாரக் கார்களை Charge பண்ணுவதற்கேற்ப அதிகமான Electrical Outlet களை நிர்மாணம் செய்யும் கட்டிங்களில் இணைக்க வேண்டும். அவ்வாறு செய்வதால், எதிர்வரும் காலங்களில் அவ்வாறான கட்டிடங்களிற்கு போதியளவு அனுகூலங்கள் காணப்படும்.

இன்றைய கணக்கின்படி, Ontario Power Grid இன் வலுவைக் கொண்டு கணக்கிடும்போது 10 மில்லியன்வரையான கார்களை Plug In செய்து Charge பண்ணக்கூடியதாகக் காணப்படல் வேண்டும். அத்துடன் After Hours, Off Peak Hours இல் கார்களை Charge பண்ணுவதால் மின்சாரத்தின் பாவனையை அதிகரிக்கலாம். 120V or 240V ஐக் கொண்டு Charge பண்ணக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

கனடாவில் தொழில் நுட்பத்திலும் சரி ஒரு விஞ்ஞானம் சம்பந்தமான விடயங்களை முதன்முதல் நடைமுறைபடுத்துவதில் முன்னோடி வன்கூவர் என்றே கூறவேண்டும்.

இதன்முதற்படியாக, வன்கூவரில் நிர்மாணம் செய்யப்படும் ஒவ்வொரு வீடுகளும் Plug In வசதிகள் கொண்டே அமைக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்துள்ளது. அடுத்து அடுக்குமாடி மனைகளில் உள்ள கார்தரிப்புகளில் (Parking) 20% ஆனவை Plug In வசதிகள் கொண்டு இருத்தல் வேண்டும். அத்துடன் ஒன்ராரியோ அரசு $10,000 வரை Rebate உம் வழங்கி வருகின்றது. இதனால் Building Code இல் மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள பழைய அடுக்கு மாடிக்கட்டிடங்களிற்கும் வீடுகளிற்கும் புதிய இணைப்புகள் செய்து Plug In இல் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. புதிய Electrical Car எதிர்காலத்தில் வேகம் எடுக்கும். அத்துடன் வீடு நிர்மாணம் செய்பவர்களும் மேலதிக விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பு -

1. 2018 இல் கிட்டத்தட்ட 500,000 Plug In ஆள் தேவைப்படலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

2. 240V பெறுமதியுடன் வீட்டிகு Outlet இணைக்க கிட்டத்தட்ட $750 தேவைப்படலாம்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 317**


## HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



1711 McCowan Rd. #206, Toronto - Tel.: 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - Tel.: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

## Land & Building for sale
## Only $119,900

- Land size - 46 x 198 ft.
- 4500 sqft Building
- Lindsay Town
- Highway Access, Public Transportation, High Traffic location,
- Fenced
- Very Motivated Seller

## Buying or Selling Through Us

You have a chance to Win...

a) 300 series brand new BMW car
b) Cuba trip to 2 for one week (full package)
c) 42" LCD and
d) 10 Consolation Prizes

your lucky draw date **Sunday August 29, 2010**

## Condo. for sale

- 2 bedrooms
- Laminated Floor
- Large Balcony
- 2 washrooms
- $159, 900 or Best Offer
- Flexible closing

### Exciting Commercial Plaza for Units for Sale

- 25,000 sqft. •Facing on Woodbine Ave.
- Retail , Restaurant, Professional Offices
- 38 Units Available • Price Starts for $168,888

### KENNEDY & STEELES

3 bedrooms 2 storey - Finished basement. Close to Pacific mall, school and walking distance to TTC. Asking only $369. 900.



## House for Sale

- Detached 3 Bedroom, Basement finished house for sale.
- 5 Appliances
- New paint
- Updated washroom
- Finch & Dixie (Pickering)
- Asking Only $289,990

## Condo. for Sale

### MCLEVIN & NEILSON (Mayfair Buildings)

- 2 Bedroom corner unit
- 1265 sqft
- Laminated, ceramic floor
- 2 parking, 1 locker included.
- Laminated floor, Ceramic floor
- Price $184,900
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....

### Commercial unit for sale - Markham

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft. • Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail

(Currently running as a bakery business.
- Asking $349/sqft

### Commercial/Retail for Lease

- GTA Square Mall
- Rent $950 Gross Lease
- Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss this chance.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

## Buying or Selling

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# புதிய நாடாளுமன்றம்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற இரண்டு வகையான அரசியல்களுக்கிடையிலேயே தமிழ்க் கட்சிகள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. டக்ளஸ் தேவானந்தா மற்றும் அரசாங்கத்துடன் (அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக அல்லது அவர்களின் சுய அரசியல் இலாபத்திற்காக) இணைந்து செயற்பட விரும்புகின்ற அரசியல் கட்சிகளும், அரசாங்கத்தை எதிர்த்து அல்லது அதற்கு அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் என்ற இருவகை அரசியல் கட்சிகளில் எதற்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டில் முடிவெடுப்பதற்குத் தமிழ் மக்கள் இம்முறை சங்கடமான ஒரு நிலைமைக்கே தள்ளப்பட்டிருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். உதாரணமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து வெற்றிலைச் சின்னத்தில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட சதாசிவம் கனரகத்தினமும், அரசாங்கக் கட்சியில் போட்டியிட்ட வவுனியா சர்வதேச ஆங்கில பாடசாலையின் அதிபாரகிய திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரனும் மனிக்பாம் முகாம் மக்களிடையே சென்று வாக்கு கேட்ட போது, "அரசாங்கத்திற்கு வாக்களிக்கா விட்டால், நீங்கள் இந்த முகாம்களிலேயே கிடந்து சாக வேண்டியதுதான். உங்களை மீள் குடியேற்றத்திற்கு அனுப்ப மாட்டோம்" என்றும், "நீங்கள் அரசாங்கத்திற்கு வாக்களிக்காவிட்டால் தடுப்பில் உள்ள உங்களது பிள்ளைகளும் கணவன்மாரும் அந்தத் தடுப்பு முகாம்களிலேயே கிடந்து சாக வேண்டியதுதான்" என்று மிரட்டியிருக்கின்றார்கள். இவர்களே இப்படி யென்றால் அமைச்சர் ரிசாட் பதியுதீனும் அவரது ஏஜென்டுகளும் தமிழ் மக்களை என்னென்ன வகைகளில் மிரட்டியிருப்பார்கள் என்பதை இங்கு விவரித்து கூறவேண்டிய தில்லை. மறு பக்கத்தில் சாதாரண தமிழ் வாக்காளர்களைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்திற்கு வாக்களிப்பதன் ஊடாக இணக்கப்பாட்டு அரசியலில் என்ன இலாபத்தை அடைய முடியும் என்ற கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும். இணக்கப்பாட்டு அரசியலை வலியுறுத்தி வருகின்ற ஈபிடிபி கட்சியும் சரி, அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவும் சரி, இதுகால வரையில் எதனைச் சாதித்துள்ளார்கள்? அடுத்ததாக என்ன சாதனைகளைப் புரியப்போகின்றார்கள்? இதுபோன்ற நியாயமான கேள்விகளுக்கு விடையளிக்கத்தக்க வகையில் அரசாங்கத் தரப்பிலிருந்து சமிக்ஞைகள் இதுகால வரையிலும் கிடைக்கவில்லை.

சரி அரசாங்கத்தை ஆதரித்து நிற்கின்ற கட்சிகளை விடுத்து, நேரடியாக அரசாங்கத்தையே ஆதரித்து வாக்களிக்கலாம் என்றால், தமிழ் மக்களின் உடனடி தேவைகள் எதனையும் அரசாங்கம் இதுவரையில் தீர்த்து வைத்ததாகத் தெரியவில்லை. எனவே இந்த நிலையில் அவர்களுக்கு வாக்களிப்பதனால் என்ன பயன் என பலரும் சிந்திக்கத் தொடங்கியிருந்தார்கள். எதிர்ப்பரசியல் நடத்துவதாகக் கூறப்படுகின்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிக்கலாம் என்றால், நாளாந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத நிலையிலேயே அவர்கள் இருக்கின்றார்கள். அதுதான் போகட்டும் - தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கத்தக்க அரசியல் வலு அவர்களிடம் இல்லை என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. தமிழர் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர்கள் தயாராக இருந்த போதிலும், அரசாங்கம் அதற்கு இன்னும் தயாராகவில்லையே. இனப்பிரச்சினை குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்வந்ததில்லை.

அதுமட்டுமன்றி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரை அவர்கள் ஒரு பொருட்டாகக்கூட மதிப்பதில்லை – மதித்ததில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதனால் பயனேதும் கிடையாது என்பதையும் மக்கள் புரிந்து வைத்திருந்தார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசாங்கத்திற்கோ வேறு எவருக்கும் வாக்களிப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது, ஆகவே வாக்களிக்கச் செல்லாமல் விடுவோம். இந்த வேலை எமக்கு வேண்டாம் என்ற சலிப்புடன் கூடிய மனப்பாங்குடன் பெரும்பான்மையான மக்களும் இருந்ததனாலேயே தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் வாக்களிப்பு வீதம் குறைவடைந்திருந்தது. எல்லோருக்குமே வெற்றி. அதனால் வன்முறைகளும் இல்லை. மற்றொரு வகையில் இந்தத் தேர்தலைப் பார்த்தால் வடக்கைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு முதல் தடவையாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் 5 இடங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த 5 இடங்களுக்கும் தமிழர்களும் முஸ்லிம் களுமே தெரிவு செய்யப்பட்டிருந்தாலும்கூட, வெற்றிலைச் சின்னத்திற்கு அரசாங்கக் கட்சிக்கு மக்கள் அங்கு வாக்களித்திருக்கின்றார்கள் என்று அரசாங்கம் திருப்தி அடைந்திருக்கின்றது. ஏனென்றால், ஜனாதிபதி தேர்தலிலும் அதற்கு முன்னதாக யாழ் மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபை தேர்தல்களில் அரசாங்கம் படுதோல்வியைச் சந்தித்திருந்தது. இந்த நிலையில் இந்தப் பொதுத் தேர்தலில் வெற்றிலைச்சின்னத்திற்குக் கிடைத்த வெற்றி. ஒரு வரலாற்று ரீதியான வெற்றியாகவே கருத வேண்டும்.

மறுபக்கத்தில் இழப்புகளுக்கு மத்தியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றிபெற்றிருப்பதனால் அவர்களும் மகிழ்ச்சியடையும் நிலையிலேயே இருக்கின்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

> "தமிழர் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர்கள் தயாராக இருந்த போதிலும், அரசாங்கம் அதற்கு இன்னும் தயாராகவில்லையே. இனப்பிரச்சினை குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்வந்ததில்லை."

# விளையாட்டுத்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

காண்பித்து விளக்கம் கேட்டதாகவும் தெரிகிறது. இதற்கிடையே இந்த விவகாரத்தில் இந்தியா வில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் ஷோயப் மாலிக்கிற்கு சட்ட உதவி அளிக்கவும் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## கிம் கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வி

சோனி எரிக்சன் ஓபன் டென்னிஸில் சாம்பியன் பட்டம் வென்ற பெல்ஜியம் நட்சத்திரம் கிம் கிளிஸ்டர்ஸ், மார்பெல்லாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் தொடர் இரண்டாவது சுற்றில் அதிகம் அறியப்படாத விதாகனி என்ற வீராங்கனையிடம் அதிர்ச்சித் தோல்வி தழுவினார். ஆனால் 3 ஆண்டுகள் கழித்து மண்தரை டென்னிஸ் களத்தில் விளையாடினார் கிம் கிளிஸ்டர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகம் அறியப்படாத வித்கானி என்ற ஸ்பானிய வீராங்கனை 7- 5, 4- 6, 6- 4 என்ற செட்களில் கிளிஸ்டர்ஸை வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு அதிர்ச்சித் தோல்வி ஆட்டத்தில் இத்தாலியின் சாரா எர்ரானி, 7ஆம் தரவரிசை ஸ்பெயின் வீராங்கனை அனபெல் மெதினா காரிக்ஸ் என்பவரை வீழ்த்தினர்.

மற்றொரு ஆட்டத்தில் இத்தாலி வீராங்கனை பிளாவியா பன்னெட்டா வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# Plug In வசதியுள்ள...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

3. மக்கள் நடமாடும் இடத்தில் இணைக்கப்படும் Public Charging Unit ஐ இணைக்க $3500 வரை தேவைப்படலாம்.

## பணக்காரர்களின் வாழ்விடங்கள்



ஏறக்குறைய 7 பில்லியன் மக்களை கொண்ட இப்பூமிப்பந்தில் பெரிய வீடு, மிகக்குறுகிய வீடு, தெரு வீடு இவ்வாறாக மக்கள் வாழும் போது சிலரின் வீடுகளின் அளவு நினைத்து பார்க்கமுடியாத அளவிற்கு மிகப் பெரியதாக காணப்படுகின்றது. இதுவே வாழ்வின் முறை.

பொதுவாக சிந்திக்கும்போது உலகின் பெரிய வீடு யாருடையதாக இருக்கலாம் என விவாதித்தால் பலருடைய கருத்து உலகின் அதிசிறந்த பணக்காரராக இருந்த பில்கேற்றின் (Bill Gates) பெயரே முன்வரும். ஆனால் அது உண்மை அல்ல. அதற்குரிய பதில் வேறு.

உலகின் மிகப்பெரிய வீடாக 1788 அறைகளையும் 257 குளியல் அறைகளையும் கொண்ட மத்தியகிழக்கு நாட்டில் அமைந்துள்ள வீடாகும். இந்த வீட்டின் அறை 2,152,782 சதுர அடிகளைக் கொண்டது. Brunei நாட்டின் சுல்தானின் வீடே மிகப்பெரிய உள்ளது.

கனடாவின் மிகப்பெரிய வீடாக கருதுவது 65,000 சதுர அடியும் 25 மில்லியன் டொலர் பெறுமதியும் கொண்ட வீடு. இந்த வீடு ரொன்ரோவிலோ, வன்கூவரிலோ, அல்லது கல்கேரியிலோ அமையவில்லை. இந்த வீடு ரொறொன்ரோ நகரின் வடக்கு பகுதியில் இருக்கும் North Bay நகரத்திலிருந்து 140 கிலோமீற்றர் வடக்கில் இருக்கும் Haileybury என்ற இடத்தில் அமைந்துள்ளது. இதுவே கனடாவின் பெரிய வீடாக இப்பொழுது கருதப்படுகின்றது.

இதுவரை கனடாவில் விற்கப்பட்ட வீடுகளில் அதிகூடிய விலை 45 மில்லியன் கனடியன் டொலர். இந்த வீட்டின் அறை 48,000 சதுரஅடி. விற்கப்பட்ட இடம் ஓக்வீல் (Oakville) ஒன்ராரியோவில் அமைந்துள்ளது. விற்கப்பட்ட வருடம் 2006.

## சில பணக்காரர்களின் வீடுகள்

| உரிமையாளர் | வீட்டின் அடி | அறைகள் |
|---|---|---|
| Sultan of Brunei | 2,152,782 சதுர அடி | 1788 |
| Queenஇன் தங்குமிடம் | 484,000 சதுர அடி | 1000 |
| Estate in Sagaponack | 66,395 சதுரஅடி | 29 |
| Bill Gates | 66,000 சதுரஅடி | 7 |
| Dimitpy Ryboloviev | 60,000 சதுர அடி | 18 |

# வட்டி வீதங்கள்! தேர்ந்தெடுப்பது எப்படி?

## பகுதி -1

நிலையான வட்டி வீதத்துக்கும், மாறும் வட்டி வீதத்துக்கும் இடையில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று எப்போதாவது யோசித்தது உண்டா? அப்படியானால் இந்தக் கட்டுரை உங்களுக்குத்தான். தொடர்ந்து படியுங்கள்.

வாழ்வில் மிகப் பெரிய சொத்தாகவும், கடனாகவும் இருப்பது 'வீடு' தான். வங்கிகள் வாடிக்கையாளர்களை ஐந்தாண்டு நிலையான வட்டி வீதத்தைத் தேர்ந்தெடுக்க ஊக்குவிக்கின்றன. நிலையான வட்டிக்கு ஆதாரவாகச் சொல்லப்படும் விளக்கம் 'மனநிம்மதி'. எதிர்கால வட்டி வீதங்களை அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல முடியாது. உண்மை என்றாலும் சந்தையில் எப்போதுமே பலவிதமான ஊகங்கள் இருந்து கொண்டே இருக்கும். ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு அப்பால் வட்டி வீதங்கள் எப்படி இருக்கும் என்று சொல்வது மிகமிகக் கடினம். அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்குள் எப்படி இருக்கும் என்று ஓரளவுக்குச் சரியாகக் கணிக்கப்படும். சமீபத்தில் வங்கிகள் ஐந்து வருட நிலையான வட்டி வீதங்களை 60 புள்ளிகள் அல்லது 0.6 சதவீதம் உயர்த்தின. செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சி மற்றும் வானொலியிலும் வட்டி வீதங்கள் கூட போகின்றன என்பதாக விவாதிக்கப்பட்டது. மேலும் நிலையான வட்டி மாற தருணம் இதுவா என்றும் ஆராயப்பட்டது.

சரித்திர ரீதியாக மாறும் வட்டிகளில் இருந்திருப்போரே வட்டியில் லாபம் அடைந்திருக்கின்றனர். இவர்களே குறைந்த வட்டியைச் செலுத்தியிருக்கிறார்கள். பல ஆய்வுகளின் முடிவும் இதுவே. இதில் குறிப்பிடத்தக்கது Moshea Milevsky என்ற ரொறொன்ரோ பேராசிரியரின் ஆய்வாகும். இவர் 1950 முதல் 2000 வரையான காலகட்டத்தை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தார். 70களிலும் 80களிலும் வட்டி வீதம் கூட இருந்தது என்பது பலபேருக்கு நினைவில் இருக்கலாம். இந்த ஐம்பதாண்டு காலகட்டத்தில் மோசேயின் ஆய்வின் படி மாறும் வட்டி வீதத்தில் வீட்டுக்கடனை வைத்திருந்தவர்களே இலாபம் அடைந்தனர். இன்றைய காலகட்டத்திலும் இவர் இதே கருத்தையே கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

வங்களின் இணையதளத்தில் பார்க்கும் வட்டி வீதங்கள் Posted Rate எனப்படும். ஆளுக்குத் தகுந்த மாதிரி இந்த Posted Rate இலிருந்து நிலையான வட்டியில் தள்ளுபடி (Discount) கொடுப்பார்கள். சாதாரணமாக ஓராண்டு வட்டி வீதத்தை விட ஐந்தாண்டு வட்டி வீதம் கூடுதலாக இருக்கும். அந்தக் கூடுதலை ஒருவகை இன்சூரன்ஸ் பிரிமியமாகக் கருதலாம். கூடிய காலத்துக்கு உங்களுக்கு வட்டி வீதங்களைப் பொறுத்தவரையில் உறுதியான ரேட் தருவதற்கான பிரீமியமே இது. சந்தையில் வட்டி வீதங்கள் கூடினாலும் குறைந்தாலும் உங்கள் வட்டி வீதங்கள் மாறாது. நிலையான வட்டிக்கும், மாறும் வட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் இத்தகைய மனநிம்மதி இன்சூரன்ஸ் பிரிமியமாகக் கருதலாம்.

ஐந்தாண்டு நிலையான வட்டி வீதங்கள் Bond எனப்படும் கனடிய அரசின் கடன் பத்திரங்களின் வட்டி வீதங்களை அனுசரித்து இருக்கும். அரசின் கடன் பத்திரங்கள் பாதுகாப்பானவை. ஆபத்து அற்றவை. அதனுடன் இலாபம், மற்றும் ஆபத்துக்கு உண்டான விலை இவற்றைக் கூட்டினால் கிடைப்பதே 5 ஆண்டு நிலையான வட்டி வீதங்கள் எனலாம்.

மாறும் வட்டி வீதங்கள் வங்கிகளின் பிரைம் ரேட்டை அடிப்படையாகக் கொண்டவை. பிரைம் ரேட் Bank of Canada வின் வட்டி வீதங்களை அனுசரித்தே இருக்கும். Bank of Canada வட்டி வீதங்களை மாற்றும் போதெல்லாம் பிரைம் ரேட்டும் மாறுகின்றது. ஒரு காலத்தில் வீட்டுக்கடன் சந்தையில் பிரைம் ரேட்டிலிருந்து 0.95 சதவீதம் வரை தள்ளுபடி கொடுக்கப்பட்டது. பிறகு வட்டி வீதங்கள் அடி மட்டத்தைத் தொட்ட போது பிரைம் ரேட்டிலிருந்து 1 சதவீதம் வரை பிரிமீயத்தில் (கூடுதலாக) கொடுக்கப்பட்டது. இப்போது மீண்டும் பிரைமிலிருந்து கழித்துக் கொடுக்கும் சூழ்நிலை சந்தையில் தென்படுகின்றது. 40 புள்ளிகள் (0.4சதவீதம்) 50 புள்ளிகள் (0.5சதவீதம்) வரை கூட பிரைமிலிருந்து வட்டி வீதங்களைத் தற்சமயம் குறைத்து எடுக்கலாம்.

மாறும் வட்டி வீதங்களுக்கும், நிலையான வட்டி வீதங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். பல சந்தர்ப்பங்களில் மாறும் வட்டி சற்றே குறைந்திருக்கின்றது. ஆனால் நிலையான வட்டியோ கூடி உள்ளது. ஏறத்தாழ அத்தகைய நிலைமையே தற்சமயம் காணப்படுகின்றது.

தற்சமயம் ஒருவர் மாறும் வட்டியை 1.85 சதவீதத்துக்கு எடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இவருக்கே நிலையான வட்டி வீதத்தில் கடன் வேண்டும் என்றால் கிடைக்கும் வட்டி வீதம் 4 சதவீதம் என்று வைத்துக் கொள்வோம். இன்றைய திகதியில் இரண்டு வட்டி வீதங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் 2.15 சதவீதம். அவரின் வீட்டுக் கடன் 300,000 டொலர்கள் என்று வைத்துக் கொண்டால் ஓராண்டில் மட்டும் அவர்

## - துறவி -

கூடக்கொடுக்கும் 'மன நிம்மதிக்கான' வட்டி டொலரில் 6,000 டொலர்களுக்கும் மேல். இல்லையா? அடுத்தது இரண்டு வருடங்களில் வட்டி வீதங்கள் 2 இலிருந்து 3 சதவீதம் உயரும் என்று ஏறத்தாழ எல்லா வங்கிகளும் கணிப்புத் தெரிவித்துள்ளனர்.

### இது சாத்தியமா?

பல சமயங்களில் அத்தகைய கணிப்புகள் சரியில்லாமலும் போயிருக்கின்றன. இது பூவா தலையா நிலைதான். வாய்ப்பு 50 சதவீதம். எல்லாவற்றிற்கும் அடிப்படை Bank of Canada வின் வட்டி வீதங்களே.

கனடிய டொலரின் மதிப்பு உயர்வது Bank of Canada மகிழ்ச்சி தரும் விடயம் அல்ல. பல தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. காரணம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய இயலவில்லை. பெரும்பான்மையான கனடிய ஏற்றுமதி அமெரிக்காவுக்கு செய்யப்படுகின்றது. தொழிற்சாலைகள் மூடப்பட்டால் பலபேர் வேலை இழக்கிறார்கள். இந்த நிலையில் Bank of Canada எவ்வளவு சுறுசுறுப்பாக ரேட்டை உயர்த்தும் என்று ஆருடம் சொல்ல இயலாது.

விலைவாசி உயர்ந்தால் Bank of Canada வட்டி வீதத்தை உயர்த்தும். அமெரிக்காவில் வட்டி வீதங்கள் உயர்ந்தால் கனடாவிலும் உயர வாய்ப்பு உள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் மேம்பட்டால் அமெரிக்காவில் வட்டி வீதங்கள் உயரத் தொடங்கும். அமெரிக்காவில் எப்போது பொருளாதாரம் உயரத்தலைப்படும்? யாருக்குத் தெரியும்? மேதாவிகளுக்கே சவால் விடும் கேள்வி இது.

ஆக எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால்..... நிலையான வட்டிகள் உங்கள் தவணைத் தொகை மாறாமல் ஒரு நிம்மதியைத் தரலாம். மாறும் வட்டியோ அத்தகைய நிம்மதியைத் தராது. ஆனால் 85 சதவீதம் கடந்த காலத்தில் பண மிச்சத்தைத் தந்திருக்கின்றது. எதிர்காலத்திலும் தரலாம். ஆனால் உத்தரவாதம் கிடையாது. யார் யாருக்கு எத்தகைய வட்டிகள் சிறந்தது என்று அடுத்த கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care
Over 65 years old with Property
100 Acres Farm with Income North of Markham
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.


## நீண்ட பல மாதங்கள் சிறைத்தண்டனை தீர்க்கப்பட்ட அந்த மதுபோதை வாகன சாரதி

கடந்த யூன் 02, 2009, பிரம்ரன் நகரில் டிக்ஸி & போவெயர்ட் ரைவ் (Dixi & Bovaird Drive) சந்திப்பில் பாரிய வாகன விபத்து நடந்தது. ஒரு ராக்ஸி உட்பட மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி தீப்பிடித்து எரிந்தது. ஐம்பது வயதான சீக்கிய இனத்தினை சேர்ந்த அந்த ராக்ஸி சாரதி அந்த இடத்தில் விபத்தில் மரணமானார்.

20 வயது நிரம்பிய திரு. ஜெய்கர் கில் என்னும் இளைஞன் மதுபோதையில் சிவப்பு நிறுத்துகையில் வாகனம் செலுத்தியதே இவ் வாகன விபத்துக்கு காரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டு அந்த இளைஞனுக்கு இருபத்தி மூன்று மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இங்கு இந்த விபத்திற்கு காரணமான இளைஞன் அந்த நேரம் மதுபோதையில் இருந்திருக்காவிட்டால் பணத்தண்டனை + புள்ளி மதிப்பீட்டு இழப்பு + சாரதி அனுமதிப்பத்திரம் ரத்து + தொடர்ந்து காப்புறுதி கட்டண உயர்வு என சில தண்டனைகளையே நிச்சயம் எதிர்கொண்டிருப்பார்.

ஆனால் இங்கு மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை உருவாக்கியதால் இவற்றுடன் மேலதிகமாக சிறைத்தண்டனையும் கிடைத்தது.

# தனது ஊழியர்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வதனால் வியாபார நிறுவனம் ஒன்று எவ்வாறு நன்மையடைகின்றது?

வியாபார நிறுவனம் ஒன்றின் நோக்கம் வியாபார போட்டிச்சந்தையில் நிலைத்திருந்து இலாபம் ஈட்டவதாகும். அதுவே அந்த நிறுவனத்தின் வெற்றியாகும். நிறுவனத்தின் வெற்றியானது ஊழியர்களிலேயே தங்கியுள்ளது. எந்தவொரு நிறுவனமும் ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது திறமை, கல்வித்தகைமை, ஊக்கம் வேறு சிறப்பான செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊழியர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட ஊழியர்கள் எந்தளவிற்கு திறமையுடன் செயற்படுகின்றார்களோ அந்தளவிற்கு நிறுவனம் தனது நோக்கத்தை அடைந்துகொள்ளவும், தரமான பொருட்கள் சேவையை வாடிக்கையாளருக்கு வழங்கவும் முடியும். இந்த வெற்றியை ஈட்டுவதற்காக ஊழியர்களின் செயற்றிறன் தொடர்பாக நிறுவனங்கள் கூடிய கவனம் செலுத்துகின்றன.

அதாவது ஊழியர் ஒருவரினால், நிறுவனத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்யும் நடவடிக்கையானது "ஊழியர்களின் செயல் திறன் மதிப்பீடு" எனப்படுகின்றது. பொதுவாக இம்மதிப்பீடானது குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும் இம்மதிப்பீட்டுச் செயற்பாடானது பயனுறுதி மிக்க முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பயனுறுதிமிக்க செயல் திறன் மதிப்பீடானது பல செய்முறைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. முதலாவதாக செயல் திறனை வரையறை செய்தல் வேண்டும். அதாவது எவ்வாறான செயல் திறன் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் என்பது பற்றி முன்கூட்டியே வரையறை செய்தல் வேண்டும். நிறுவனத்தின் வெற்றிக்கு எக்காரணிகள் அவசியம் என்பதனை அவதானிப்பதன் மூலம், அதன்



அடிப்படையில் செயல் திறனை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் நிறுவனம், சிறப்பான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதில் ஊழியர் களின் பங்களிப்பினை மதிப்பீடுசெய்தல் மிகப்பொருத்தமானதாக இருக்கும்.

இரண்டாவதாக செயல் திறன் அளவீடு செய்யப்படல் வேண்டும். அதாவது செயல் திறன் வரையறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது எவ்வாறு அளவீடு செய்யப்படல் வேண்டும் என்பது தொடர்பாக நோக்கப்படல் வேண்டும். எவ்வாறான அளவீடுகள் மூலம் செயல் திறன் அளவிடப் படவேண்டும் என்பது தொடர்பாக ஆராயப்படும்.

> "மதிப்பீடு செய்பவர் ஊழியர்கள் பற்றிய போதிய தகவல்களைக் கொண்டிராத போது சகல ஊழியர்களையும் ஒரே மாதிரியாக மதிப்பீடு செய்வாராயின் அம் மதிப்பீடானது தவறான மதிப்பிடலுக்கு இட்டுச்செல்லும். மிகக் கடுமையாக அல்லது மிக எளிமையாக மதிப்பீடு செய்யும் போதும் மதிப்பீடானது தவறானதாக அமையலாம்."

இறுதியாக செயல் திறனை மதிப்பீடுசெய்தல் வேண்டும். அதாவது செயல் திறன் அளவீடு மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் தொடர்ந்து விருத்தி செய்யவும், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தல் வேண்டும். எனவே செயல் திறன் மதிப்பீடானது தனியாக ஒரு செயற்பாடன்றி பல செய்முறைகளை உள்ளடக்கிய ஒரு செற்பாடாகும்.

நிறுவனம் தனது இலாபத்தை ஈட்டுவதற்காக அபிவிருத்தி நோக்கியதாகவும், நிர்வாக செயற்பாடு நோக்கியதாகவும் தனது செயல் திறன் மதிப்பீட்டினை வகைப்படுத்துகின்றது. அபிவிருத்தி நோக்கியதாக ஊழியர்களின் பலம், பலவீனம் என்பவற்றை நன்றாக அவதானித்து அவர்களுக்கு வேண்டிய பயிற்சிக்கான தேவையினையும் கண்டறிந்து பொருத்தமான பயிற்சிகளை வழங்குவதை எடுத்துக்காட்டும்.
ஊழியர்களின் சம்பளம், பதவி உயர்வு, பதவி நீக்கம் போன்ற தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது நிர்வாகம் நோக்கிய செயல் திறன் மதிப்பீடாகவமையும்.

- அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் நோக்கிய-தான செயல் திறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர்களுக்கு வேண்டிய பயிற்சிக்கான தேவையினை கண்டறிந்து பொருத்தமான பயிற்சியினை வழங்கமுடியும்.
- திறமையானவர்களைக் கண்டறிந்து சரியான-வர்களுக்கு பொருத்தமான பதவிகளையும், பதவி உயர்வினையும் வழங்கமுடியும்.
- திறமை குறைந்தவர்களை கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.
- ஊழியர்களின் விசேட திறமையினை அடையாளம் கண்டு பொருத்தமான சம்பள உயர்வினை வழங்கமுடியும்.
- வேலைகளை திறமையாக மேற்கொள்வதற்கான தடைகளைக் கண்டறிந்து அவற்றினை நீக்கமுடீயும்.
- ஊழியர்கள் தமது செயல் திறனை அறியுமுகமாக அவர்களை ஊக்குவிக்க முடியும்.
- ஊழியரின் வேலை தொடர்பாக மேற்பார்வையாளர் வழங்கும் சிறந்த பின்னூட்டியினுடாக ஊழியருக்கும், மேற்பார்வையாளருக்கும் இடையே சிறந்த தொடர்பாடலுக்கு வழிவகுக்கும்.

செயல் திறன் மதிப்பீட்டு முறையானது தொகை ரிதியான மதிப்பீட்டு முறை எனவும், பண்பு ரீதியான மதிப்பீட்டு முறை எனவும் இரண்டு வகையாக வகுக்கமுடியும்.
உதாரணமாக எண்ணிக்கையின் அடிப்படையில் செயல் திறன் மதிப்பீடு செய்யும் போது அது தொகைரீதியான மதிப்பீடு எனப்படும். விற்பனைப்பிரதி நிதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட விற்பனையின் பெறுமதியின் அடிப்படையில் அது தொகை ரீதியான மதிப்படலாக கொள்ளப்படும்.

ஊழியரின் தனிப்பட்ட பண்புகளும், அவரது வெளியீடு தொடர்பான பண்புகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதன்மூலம் ஊழியரின் வேலை தொடர்பான நடத்தையினை சரியாக அவதானித்து மதிப்பீடு செய்யும் போது அம்மதிப்பீடானது பண்புரீதியான மதிப்பீடு எனப்படுகின்றது. பண்புரீதியான மதிப்பீட்டு முறையில் தனிப்பட்ட ஊழியரின் செயல் திறனானது ஏனைய ஊழியர்களுடன் ஒப்பிடப்படுகின்றது. ஊழியர்கள் தமது செயல் திறன் தொடர்பாக வரிசைப்படுத்தப்படுகின்றனர்.

பண்புரீதியான செயல் திறன் மதிப்பீட்டில் வரிசைப்படுத்தல் (Ranking), ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிடல் (Person to Person Comparison), வகைப்படுத்தல் (Grading) ஆகிய முறைமைகளினுடாக செயல் திறன் மதிப்பிடப்படுகின்றது.

செயல் திறன் மதிப்பிடும் போது தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறான தவறுகள் ஏற்படுவதற்கு மதிப்பீடு செய்பவர் இடமளித்தல் ஆகாது. அதாவது மதிப்பீட்டுக்கு உட்படும் ஊழியர் ஒருவரது பண்பானது,ஏனைய பண்புகளை மதிப்பீடு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும். உதாரணமாக ஒரு ஊழியர் குறிப்பிட்ட ஒரு அம்சத்தில் சிறந்து காணப்படுவார். அதை அடிப்படையாகக் கொண்டு ஏனைய அம்சங்களிலும் அவர் அவ்வாறே சிறந்து விளங்குவார் என்ற தவறான

**தொடர்ச்சி 12ஆம் பக்கம்**



**குமா. ஜெயகுமார்**
(B.A;Dip.in.Mgt;Dip.in.HRM-Srilanka)
aojeyakumar@yahoo.com



# ஒரு நாளில் உள்ள நேரம் குறைந்தது!

பெப்பிரவரி 27, 2010ஆம் திகதி சிலியில் ஏற்பட்ட பூகம்பத்தால் பூமி தன்னைத் தானே சுற்றும் நேரம் குறைந்துவிட்டதாக JPL ஆய்வு கூடத்தைச் சேர்ந்த Richard Gross என்ற விஞ்ஞானி கூறியுள்ளார். சிலியில் நடைபெற்ற இந்த பூகம்பத்தால் பூமியின் ஒரு நாள் 1.26 மைக்குரோ செக்கன்களால் குறைவடைந்ததாம். ஒரு மைக்குரோ செக்கன் (Microsecond) எனப்படுவது ஒரு செக்கனை 10 இலட்சத்தால் பிரித்தால் வரும் அளவு நேரமாகும்.

Richard Gross என்னும் இந்த விஞ்ஞானி ஆராய்ச்சி நடத்திய JPL (Jet Propulsion laboratory) என்ற ஆய்வுகூடம் கலிபோர்னியாவிலுள்ள Pasadena எனும் இடத்திலுள்ளது. Richard மேலும் தெரிவிக்கையில் இந்த நேரமாற்றமானது நிரந்தரமானது என்றார். பூகம்பத்திற்கும் பூமி தன்னைத்தானே சுற்றும் நேர அளவிற்கும் உள்ள தொடர்பு பற்றி அறிய நாம் எமது பூமியை பற்றி சிறிது அறிந்திருக்க வேண்டும்.

பூமி தனது வட - தென் துருவங்களுக்கூடாக செல்லும் அச்சு பற்றி சுழல்கின்றது. இது இவ்வாறு ஒரு தரம் சுழர அதற்கு 24 மணித்தியாலங்கள் (86,400 செக்கன்கள்) எடுக்கிறது. பூமி இவ்வாறு சுழலும் வேகம் கிட்டத்தட்ட மணித்தியாலத்திற்கு 1,000 மைல்களாகும். பூமி இவ்வாறு தனது வட - தென் துருவங்களுக்கு ஊடாக செல்லும் அச்சு பற்றி சுழன்றாலும் அதன் திணிவுமையம் இந்த அச்சில் இருந்து 33அடி விலகியுள்ளது.



பெரிய பூகம்பங்கள் அதிகளவு பாறைகளை அசையச் செய்து அவற்றின் இடத்தை மாற்றுகின்றன. இதனால் பூமியில் திணிவு மையம் இடம் மாறுகின்றது. சிலியில் ஏற்பட்ட இந்த 8.8 அளவு பூகம்பம் பூமியில் திணிவு மையத்தை 3 அங்குல தூரத்தால் மாற்றி விட்டது. இது பூமி தன்னைத் தானே சுற்றும் வேகத்தை கூட்டிவிட்டது. இதனால் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரம் 1.26 மைக்குரோ செக்கன்களால் குறைந்துவிட்டது.

பூகம்பத்தால் ஒருநாளில் நேரம் குறைவது இதுதான் முதந்தடவை அல்ல. 2004 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட 9.1 அளவு பூகம்பத்தால் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரம் 6.8 மைக்குரோ செக்கன்களால் குறைந்தது. பூமியில் எங்காவது மிகப்பெரிய பூகம்பங்கள் வரும்போது எல்லாம் அவை பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரத்தை கூட்ட அல்லது குறைக்கச் செய்கின்றன.

Richard மேலும் கூறுகையில் பூகம்பங்கள் மட்டும் அல்ல வேறு இயற்கை நிகழ்வுகளும் பூமி தன்னைத்தானே சுற்றும் நேரத்தை பாதிக்கின்றன. பூமியில் ஏற்படும் காலநிலை வேறுபாட்டால் சமுத்திரங்களில் ஏற்படும் சுழற்சியும் (Ocean Currents) ஆகாயத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் சுழற்சியும் (Atmosphere's jet stream) ஒரு நாளில் நேர அளவை பாதிக்கின்றன. பனிக்காலங்களில் வடதுருவத்திலிருந்து தெற்குநோக்கி பாயும் காற்று (Jet stream) பூமி தன்னைத்தானே சுற்றும் நேரத்தை பனிக்காலங்களில் குறைக்கின்றது. இவ்வாறு பனிக்காலங்களில் குறையும் நேரம் கோடை காலத்தில் மீண்டும் சரி செய்யப்படுகின்றது.

இவ்வாறு இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் ஒரு வருடத்தில் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரம் 1,000 மைக்குரோ செக்கன்களால் மாற்றப்படுகிறது. 1,000 மைக்குரோ செக்கன் என்பது ஒரு மில்லி செக்கன் ஆகும்.



காலநிலை வேறுபட்டால் சமுத்திரங்களில் ஏற்படும் அதாவது இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் வருடம் ஒன்றிற்கு பூமியின் ஒரு நாளை ஒரு மில்லி செக்கனால் (ஒரு செக்கனை ஆயிரத்தால் பிரித்தால் வரும் அளவு நேரம்) மாற்றுகிறது. இம்மாற்றம் சிலவேளைகளில் ஒரு நாளில் நேர அளவை குறைக்கும் அல்லது கூட்டும்.

பூமியில் நடைபெறும் இயற்கை நிகழ்வுகள் எவ்வாறு பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரத்தை பாதிக்கின்றது என்று பார்த்தோம். மனிதனால் செய்யப்பட்ட செயற்கை நிகழ்வுகள் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரத்தை பாதிக்காதா? என்ற கேள்வி உங்களுக்கு எழுகிறதா? ஓம் பாதிக்கும். மனிதனால் செய்யப்படும் சில செயற்கை நிகழ்வுகளும் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரத்தை மாற்றுகின்றன.

சீனாவிலுள்ள Three Gorges அணைக்கட்டு நீரைத்தேக்கி வைக்க பயன்படுகிறது. இது நிறைந்திருக்கும் போது 100 கோடி கலன்கள் நீரை கொண்டிருக்கும். இவ் அணைக்கட்டில் நீர் நிறைந்திருந்தால் அது பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரத்தை 0.06 மைக்குரோ செக்கன்களால் அதிகரிக்கும்.

நன்றி. Nasa



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca






# தனது ஊழியர்களின்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

முடிவிற்கு வருதல் தவறான மதிப்பிடலுக்கு இட்டுச்செல்லும்.

மதிப்பீடு செய்பவர் ஊழியர்கள் பற்றிய போதிய தகவல்களைக் கொண்டிராத போது சகல ஊழியர்களையும் ஒரே மாதிரியாக மதிப்பீடு செய்வாராயின் அம் மதிப்பீடானது தவறான மதிப்பிடலுக்கு இட்டுச்செல்லும். மிகக் கடுமையாக அல்லது மிக எளிமையாக மதிப்பீடு செய்யும் போதும் மதிப்பீடானது தவறானதாக அமையலாம்.

மதிப்பீட்டினை மேற்கொள்பவர் பால், இனம் போன்ற காரணிகளுக்கூடாக மதிப்பிடலை மேற்கொள்ளக்கூடாது. அதே நேரம் மதிப்பீடு செய்பவர் மதிப்பீடு தொடர்பான சரியான, போதுமான பயிற்சியினைக் கொண்டிராது விடின் அம்மதிப்பிடலும் தவறானதாக அமையும். சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட அல்லது தொழில் ரீதியான போட்டிகாரணமாக மதிப்பீட்டாளர் தவறான மதிப்பிடலை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு.

நிறுவனங்கள் தமது வசதிக்கேற்ப செயல்திறன் மதிப்பீட்டினை மேற்கொள்ளு கின்ற போதிலும், பொது வாக பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் திறன் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது பொதுவான நடைமுறையாகவுள்ளது. அதாவது வருட ஆரம்பத்தில் அல்லது ஊழியர் தனது ஒருவருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யும்போது மேற்கொள்ளப்படுகின்றது. இவை தவிர ஊழியர்கள் வேண்டப்படும் போதும் செயல் திறன் மதிப்பீடு செய்யப்படலாம்.

பொது வாக நிறுவனங்களில் ஊழியர்களின் செயல் திறன் மதிப்பீடானது ஊழியர்களது நேரடி மேற்பார்வையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அதே வேளையில் வேறு முறைகளிலும் செயல் திறன் மேற்கொள்ளப்படலாம். அதாவது ஊழியர்கள் தம்மைத்தாமே மதிப்பிட்டுக்கொள்வதைக் குறிப்பிடலாம். இம் மதிப்பீடானது சுயமதிப்பீடு (Self Evaluation) எனப்படும். மேற்பார்வையா-ளர் ஒழுங்காக மதிப்பீட்டினை செய்யமுடியாத போது சுயமதிப்பீடு சிறந்ததாக காணப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் சகவூழியர் மூலமும் மதிப்பீடு செய்யப்படுவதை காணலாம். இம்மதிப்பீடானது சக ஊழியர் மதிப்பீடு (Peer Evaluation) எனப்படுகின்றது. இவற்றினை விட மேற்பார்வையாளர் தன்கீழ் பணிபுரியும் வேறொரு பணியாளர் மூலம் மதிப்பீடு செய்வதையும் சில நிறுவனங்களில் காணலாம். இம்மதிப்பீட்டு முறையானது பணியாளர் மதிப்பீடு (Subordinate Evaluation) எனப்படும்.

முக்கியமாக வாடிக்கையாளர் மூலமாகவும் ஊழியரின் செயல் திறன் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும். உதாரணமாக சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஊழியர்களுக்கும் வாடிக்கை யாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.சிறந்த ஊழியர் ஒருவரே சிறந்த சேவையினை வாடிக்கையாளருக்கு வழங்கமுடியும். இதனால் வாடிக்கையாளர் மூலமான ஊழியர்களின் செயல் திறன் பற்றிய மதிப்பீடு சிறந்த மதிப்பீடாக மேற்கொள்ளப்படுகின்றது. இம் மதிப்பீட்டு முறையானது வாடிக்கைளாயர் மதிப்பீடு (Customer Evaluation) எனப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவற்றினை விட இன்று கணினிகள் மூலமாகவும் செயல் திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

முடிவாக ஒரு நிறுவனத்தின் வெற்றி ஊழியர்களிலேயே தங்கியுள்ளது. திறமை மிக்க ஊழியர்களை கொண்டுள்ள நிறுவனமே இலாபமீட்டும் தமது நோக்கத்தினை அடைந்துகொள்வதுடன் போட்டிச்சந்தையில் நிலைத்திருக்கவும் முடியும். எனவே ஊழியரின் திறமையினை அளவிடுவதும், அவர்களது திறமையினை தொடர்ந்து விருத்தி செய்வதும் மிகவும் அவசியமானதாகும். இவற்றினை மேற்கொள்வதற்கு செயல் திறன் மதிப்பீடு மிகவும் அவசியமானதாகும். சரியான முறையில் செயல் திறனை மதிப்பிடுவதன் மூலம் ஊழியர்களுக்கு பொருத்தமான பயிற்சி, சம்பளவுயர்வு, பதவி உயர்வு என்பவற்றை வழங்கவும் ஊழியர் தொடர்பாக தொடர்ச்சியான அபிவிருத்தியினை மேற்கொள்ளவும் முடியும்.

எனவே, சிறு முதலீட்டுடன் கூடிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் எம்மவர்கள் தமது நிறுவனங்களில் கடமைபுரியும் ஊழியர்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வது தொடர்பான சகல முகாமைத்துவக் கோட்பாடுகளையும் நன்கு விளங்கிக்கொள்வதனூடாக ஊழியர்களை சரியானமுறையில் மதிப்பிட்டு தமது இலாபத்தை ஈட்டிக் கொள்வதுடன் போட்டி மிகு வியாபாரச் சந்தையில் நீடித்து நிலைத்திருக்கவும் முடியும்.


## யாழ். விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம் பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

## TALENT SHOW - 2010

எமது இளம் சந்ததியினரிடம் உள்ள திறமைகளை வெளிக்கொண்டு வந்து வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்வு எதிர்வரும் April மாதம் 18 ஆம் திகதி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கலந்து கொள்ள விரும்பும் கல்லூரி மாணவ சந்ததியினர் April 10 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யும்படி கேட்கப்படுகின்றனர்.

நிகழ்வு திகதி - April 18, 2010 (Sunday) காலம் - மாலை 3.00 தொடக்கம்

நடைபெறும் இடம் - ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபம்

*200 Advance Blvd, Brampton, ON L6T 4V4 (Dixie and Steeles* சந்திக்கு அருகில்)

முன்பதிவுகளிற்கு இணையத்தளத்தில் - http//ttrive.com/jvc/

தொலைபேசி - 416.801.3863, 416.627.4335, 416.910.1287, 416.567.6209



## "ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"




எனும் அரிய நூல்

மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய

அருமையான நூல்

**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**

**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**

***GTA Square - 5215 Finch Ave. E., #201***

***Middlefield & Finch***



## விற்பனையாகின்றது குறமகளின்

- கூதிர்காலக் குலாவல்கள்
- அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்

தொலைபேசி இலக்கம்: 416.282.8059

**GTA Square - 5215 Finch Ave. E., #201**

**Middlaefield & Finch**


# தமிழகத்தில் பலம் மிக்கவர்கள்

தமிழகத்தில் தங்கள் துறைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டு தாக்கத்தை ஏற்படுத்திய செல்வாக்கு மிக்கவர்களின் - பலம் பொருந்தியவர்களின் பட்டியலை வருடம் தோறும் வெளியிட்டு வருகிறது இந்தியா டுடே பத்திரிக்கை.

இந்த வருடமும் அப்பட்டியலை வெளியிட்டுள்ளது இந்தியா டுடே.

தமிழகத்தின் பலம் மிக்கவர்கள்- செல்வாக்கு படைத்தவர்கள்-2010 பட்டியலில் 10 பேர் அடங்கியிருக்கிறார்கள். பத்து பேர் அடங்கிய அப்பட்டியலில் நக்கீரன் ஆசிரியர் கோபால் இடம் பெற்றுள்ளார்.

இப்பட்டியலில் இடம் பிடித்துள்ள நக்கிரன் கோபால் குறித்து இந்தியா டுடே, 'ஒரு சாதாரண லே அவுட் ஆர்ட்டிஸ்டாகத் பத்திரிகை வாழ்க்கையை தொடங்கிய கோபால் இன்று பதிப்பாளராக ஜொலிக்கிறார். பெரும் அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் நடுவில் வளர்ந்த நக்கீரன் தமிழ் புலனாய்வு இதழியலின் முதலும் முடிவுமாகத் திகழ்கிறது.

வாரமிருமுறை இதழ், இணையதளம், பதிப்பகம் என இவரது குழுமம் கிளை பரப்பியுள்ளது. அரசியல் செய்திக்கு நக்கீரன் என்று அடையா-ளம் பெற்றிருக்கிறது. இவரது நக்கீரன் இணையதளம் மூலம் தமிழகத்தின் பரபரப்புச் செய்திகள் உலகெங்கும் பரவுகிறது.

வீரப்பன் புலனாய்வு குறித்தும், சந்தித்த பிரச்சனைகள் குறித்தும் முதல் முறையாக நக்கீரன் கோபால் எழுதும் "யுத்தம்" தொடர் நக்கீரனின் சமீபத்திய பரபரப்பாக உள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளது. மேற்கண்டவாறு நக்கீரன் குறித்தும், நக்கீரன் ஆசிரியர் குறித்தும் குறிப்பிட்டுள்ள இந்தியா டுடேயின் பட்டியலில் மேலும்,

டி.வி.எஸ். மோட்டார்ஸின் எம்.டி. வேணு ஸ்ரீனிவாசன், இந்தியா சிமெண்ட்ஸின் எம்.டி. என்.ஸ்ரீனிவாசன், பாப்பீஸ் ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனத்தை நடத்தி வரும் ஏ.சக்திவேல், அப்போலோ குழுமத்தின் எம்.டி. ப்ரீத்தா ரெட்டி,

திரைப்பட தயாரிப்பாளர்கள் உதயநிதி ஸ்டாலின் மற்றும் துரை தயாநிதி அழகிரி, நடிகர் கமல்ஹாசன், அடையாறு ஆனந்தபவன-்ன் எம்.டி. கே.டி.ஸ்ரீனிவாச ராஜா, சந்திராயன் திட்டத்தின் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை, உயிர்மை பதிப்பகத்தின் ஆசிரியர் மனுஷ்ய புத்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**நன்றி - நக்கீரன்**




SMILE....

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

# ஆசீர்வதிக்கப்படும் குடும்பம்

குடும்பம் ஒரு அமைப்பாகும். ஒன்றுக்கு மேற்பட்டவர்களது கூட்டாக அமைவது குடும்பம். தனிமரம் தோப்பாகாதது போல் தனிமனிதன் குடும்பமாவதில்லை. தனிமனிதன் குடும்பமாவதில்லை எனக் குறிப்பிடுவதன் அடிப்படைநோக்கம் ஒரு கூட்டு அமைப்புக்குள் ஒரு தனிமனிதனது தனியுரிமை அகற்றப்பட வேண்டும் என்பதே.

அமைப்புக்கள் என நாம் கருதுவது தொழில் அமைப்புக்களைத்தான். இந்த அமைப்புக்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களது கூட்டுமுயற்சியினால் செயற்படுத்தப்படுபவையாக இருக்கும். இவை இலாப நோக்கம் உடையவையாக அல்லது சேவைநோக்கம் கொண்டவையாக இயங்கும். இந்த இயக்கத்தின் அடிப்படையாக அமைவது திட்டமிடப்பட்ட செயற்பாடுகள். ஒரு அமைப்பின் நோக்கத்தை அடைவதற்கு தேவைப்படும் கால அளவை நிர்ணயித்து அந்தக் கால அளவுக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைத் தெளிவுபடுத்தி அந்த நோக்கத்திற்கு ஒத்துழைப்புத் தரக்கூடியவர்களது கூட்டு முயற்சியின் மூலம் இயக்கப்படுவது ஒரு தொழில் அமைப்பு.

குடும்பமும் ஒரு அமைப்பே. ஆனால் இந்த அமைப்பின் நோக்கம், அதன் பெறுபேறுகள், கால அளவு, அதன் அங்கத்தவர்களது தகுதி, திறமை என்பவற்றை நாம் ஒரு தொழில் அமைப்பில் வரையறுப்பது போன்று வரையறுக்க முடியாது. ஏன் முடியாது என்பது ஒரு ஆக்க பூர்வமான ஆய்வாகும். ஒரு குடும்பமும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களது கூட்டு முயற்சியால் நகர்த்தப்படுவது தான். ஆனால் இந்தக் கூட்டுமுயற்சி என்பது தொழில் நிறுவனங்களின் செயற்பாடுகளைப் போன்று ஏற்கனவே திட்டமிடப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுவதில்லை. இன்னொருவகையில் கூறுவதாயின் அவ்வாறு மேற்கொள்ளவும் முடியாது என்பதாகும். ஏன் முடியாது? இதுவும் ஒரு சிறந்த கேள்வி தான். ஒரு தொழில் நிறுவனத்தில் நோக்கம் அறுதியிடப்பட்டு அதற்கேற்றவாறு அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவைப்படும் ஆளணிகளை தெரிவுசெய்யும் செயற்பாடுகளும் இடம்பெறும். அதாவது அமைப்பின் நோக்கத்துக்கு தேவையான, தகுதியானவர்களை ஏற்கவும் மறுக்கவும் அந்த அமைப்புக்கு முடியும்.

ஆனால் குடும்பத்தில் அதன் நோக்கம் ஒரு எல்லைக்கு உட்பட்டதல்ல. அதுமட்டுமன்றி குடும்பத்துக்கு குடும்பம் அதன் எதிர்பார்ப்புக்களில் வேறுபடுகின்றன. குடும்ப அங்கத்தவர்களது தெரிவு நேர்முகப்பரீட்சையால் மேற்கொள்ளப்படுவதில்லை. ஒரு தொழில் நிறுவனம் தனது நோக்கத்துக்கு ஏற்றவாறு அதன் அங்கத்தவர்களை ஏற்கவும் மறுக்கவும் முடிவதுபோல் குடும்பத்தில் முடியாது. குடும்பத்தின் அங்கத்தவர்கள் எப்போதும் அங்கத்தவர்கள் தான், இங்கே அதன் அங்கத்தவர்களது இணைப்பு தகுதியையோ அல்லது திறமையையோ அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒரு குடும்பத்தின் நோக்கம் சிறந்த குடும்பமாக அமைய வேண்டும் என்பது தான். ஆனாலும் இந்த 'சிறந்த' என்பதன் வெளிப்பாடு என்ன? சிறந்த குடும்பம் என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் வெவ்வேறான விளக்கத்தைக் கொடுப்பதாகவே அமைகின்றது. அதாவது இரண்டு குடும்பங்கள் ஒரே நோக்கத்தை அடிப்படையாக வைத்து வாழ்க்கையை நகர்த்துவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதே. ஏனெனில் குடும்பம் என்பது அதன் நோக்கங்களில் நெகிழ்ச்சியையும் தொடர்ச்சியையும் கொண்டிருக்க வேண்டியதாக இயல்பாகவே அமைந்து விடுகின்றது. அதுமட்டுமல்ல அமைக்கப்பட வேண்டியதாகின்றது.



அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
நன்றியுடன் KG Master

## ஓடும் நீர் உறைவதில்லை 99

இதுவரையில் ஒரு தொழில் அமைப்பையும் குடும்ப அமைப்பையும் ஒப்பீடு செய்து இவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைக் கண்டோம். இங்கே ஒரு முக்கியமான விடயத்தை நாம் மனதில் பதித்துக் கொள்ளல் வேண்டும். அதாவது குடும்ப அமைப்பு அல்லது குடும்பம் என்பது ஒன்றுக்கு மேற்பட்டவர்களது கூட்டுமுயற்சியல்ல. ஏனெனில் முயற்சி என்பது ஒரு இலக்கை மையமாக வைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இங்கே இலக்கு தெளிவுபடுத்தப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அந்த இலக்கு அல்லது நோக்கு அந்தக் கூட்டுமுயற்சியின் கால அளவைத் தீர்மானிக்கின்றது. நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் அந்தக் கூட்டுமுயற்சியும் முடிவுக்கு வந்து விடும். ஆனால் குடும்பம் அப்படியானதல்ல. அதற்கு எல்லை கிடையாது. இடையில் அறுந்து போகாது. இதற்கான அடிப்படைக்காரணம் குடும்பம் என்பது கூட்டு முயற்சியல்ல. கூட்டு வாழ்க்கையே. இங்கே கூட்டு வாழ்க்கையைக் கூட்டுக்குடும்பத்துடன் தொடர்புபடுத்தி தடுமாறாதீர்கள். கூட்டுவாழ்க்கை வேறு கூட்டுக் குடும்பம் வேறு.

**KG Master**-*kgmaster@rogers.com*

குடும்பம் என்பது கூட்டுவாழ்க்கை மட்டுமே. ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களாக அமைபவர்கள் அந்த அமைப்பில் காலவரையறையற்ற சந்தாதாரர்களாகி விடுகிறார்கள். ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்களாக இருப்பினும் தனியுரிமையுடையவர்களல்ல. சிறப்பாக வாழ்தல் என்ற அடிப்படையில் அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணித்தல், வழிநடாத்தல், பின்பற்றுதல் எனும் நடவடிக்கைகள் மூலம் ஒன்று சேர்ந்து வாழ்தலே குடும்பமாகும்.

இதுவரையில் குடும்பம் என்பது என்ன எனப்பார்த்தோம். அதாவது கூட்டுமுயற்சியல்ல, கூட்டுவாழ்க்கை என அறிந்தோம். அடுத்து ஆசீர்வதிக்கப்படும் குடும்பம் எது என்பது பற்றிப் பார்ப்போம். ஒரு குடும்பத்திற்கான ஆசீர்வாதம் என்றவுடன் எல்லோர் மனதிலும் உடனடியாக எழுவது குழந்தைச் செல்வங்கள் என்பது தான். அதாவது குழந்தைகளே அந்தக் குடும்பத்திற்கான ஆசீர்வாதமாகக் கருதப்படுகின்றனர். உண்மையில் இக்கருத்து முற்றுமுழுதான ஆசீர்வாதத்துக்குரிய விடயம் அல்ல. என்ன! குழந்தைகள் குடும்பத்துக்கான முழுமையான ஆசீர்வாதமில்லையா? ஒரு வேளை இவருக்குக் குழந்தைகள் இல்லாததால் தான் இப்படி கூறுகிறாரோ என்று கோபப்படுகிறீர்களா? கோபப்படாதீர்கள். எனக்குப் பேரக்குழந்தையும் உண்டு.

"குடும்பம் என்பது கூட்டுவாழ்க்கை மட்டுமே. ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களாக அமைபவர்கள் அந்த அமைப்பில் காலவரையறையற்ற சந்தாதாரர்களாகி விடுகிறார்கள். ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்களாக இருப்பினும் தனியுரிமையுடையவர்களல்ல. சிறப்பாக வாழ்தல் என்ற அடிப்படையில் அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணித்தல், வழிநடாத்தல், பின்பற்றுதல் எனும் நடவடிக்கைகள் மூலம் ஒன்று சேர்ந்து வாழ்தலே குடும்பமாகும்."

குழந்தைகளை ஆசீர்வாதமாகக் கருதுவதற்கு அடிப்படைக்காரணமாக அமைவது அக்குழந்தைகள் அந்தக் குடும்பத்தின் விரிவாக்கத்துக்கு வித்தாக அமைவதால் தான். அதாவது கூட்டுவாழ்க்கையின் விரிவாக்கமாக அமைவதால் தான். குழந்தைகள் குடும்ப அங்கத்துவத்தின் அதிகரிப்பு (Addition to the Family) இந்த அதிகரிப்பு ஏற்படும் போது நாம் அளவு கடந்த மகிழ்ச்சியடைகிறோம். குடும்பவிருத்தி சந்ததியின் வளர்ச்சி என்றெல்லாம் ஆனந்தமடைகிறோம். ஆனால் துரதிஷ்டவசமாக இந்தக் குடும்ப விருத்தியைக் குழந்தைகளை மட்டுமே மையமாக வைத்து ஆனந்தமடைவதுதான் நம்மில் பெரும்பாலனவர்கள் மேற்கொள்ளும் மிகப்பெரிய மானிடத் தவறு. இந்த மனநிலையில் இருந்து நாம் மாற வேண்டும் என்பது மானுடத்தின் அடிப்படைத் தேவை என்பதை விளம்பரம் வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

ஒரு குடும்பத்தின் விருத்திக்குக் குழந்தைகள் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு முன்னர் கணவன், மனைவி என்ற பந்தத்துக்குள் இணையும் ஒரு ஆணும் பெண்ணும் அவரவரது குடும்பத்தின் குழந்தைகளாவர். பெற்றோர்கள் என்ற குடும்பத்தில் இருந்து வரும் இவர்கள் இப்போது அந்த இருகுடும்பங்களுக்கும் இணைப்பை ஏற்படுத்துவதுடன் அந்தக் குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் அதன் விருத்திக்கும், விரிவடைந்த கூட்டுவாழ்க்கைக்கும் காரணமாகிறார்கள்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000
- MAHARAJI -
மஹராஜியின் உரைகள்
On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# மறுக்கப்பட்ட நீதி



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு உதவியதாகக் கைது செய்யப்பட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வரும் நளினியை விடுதலை செய்ய இயலாது என தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் கூறியுள்ளது. 'நளினியை விடுதலை செய்வது எங்கள் கையில் இல்லை. மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்' என நேற்று வரை சொல்லிவந்தது தமிழக தி.மு.க. அரசு. ஆனால், சட்டப்படி நளினி விவகாரத்தில் மாநில அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்லிவிட்ட நிலையில், இப்போது, "நளினியை விடுதலை செய்ய முடியாது" என்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது, தமிழக அரசு. அதனைக் கேட்டு நீதிமன்றமும் நளினியை விடுதலை செய்ய முடியாது என அறிவித்துள்ளது. அரசின் இந்த கைவிரிப்பு, நளினி விடுதலைக்காக போராடி வரும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு பெரும் அதிர்ச்சி.

1991, ஜுன் மாதம் கைது செய்யப்பட்ட நளினிக்கு இன்னும் இரண்டு மாதங்களைக் கடந்தால் 19 ஆண்டுகள் சிறை வாழ்க்கை முழுமையாகிறது. '14 ஆண்டுகள் ஆயுள் தண்டனை' என்கிற நடைமுறை கூட நளினியின் விஷயத்தில் காலாவதியாகி விட்டது. 'ஓர் ஆயுள் தண்டனைக் கைதி அனுபவிச்ச தண்டனைக் காலம், அவரது நன்னடத்தை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு விடுதலை செய்ய சட்டத்தில் இடம் உண்டு. ஆகவே, முன்விடுதலை கோரும் உரிமையை நளினிக்கு சட்டமே வழங்கியிருக்கு. நளினியை தமிழக அரசு கருணை அடிப்படையில் விடுதலை செய்யணும்' என்று மனித உரிமை அமைப்பினர் தொடர்ந்து வலியுறுத்திட்டிருக்காங்க. இதனால், நளினியை விடுதலை செய்வது குறித்து ஆலோசிக்க ஒரு அறிவுரைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு, 'நளினியை விடுதலை செய்ய பரிந்துரைக்கும்' என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன்பு, தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன், 'அதிக நாட்கள் அவர் சிறையில் இருக்கத் தேவையில்லை' என்று உயர்நீதிமன்றத்தில் கூறியதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாயின. ஆனால், இப்போது ஆலோசனைக் குழுவின் பரிந்துரையோ அதற்கு மாறாய் உள்ளது.

நளினி விடுதலைக்கு ஆதரவு திரட்டுவதற்காகக் கவிஞர் தாமரை 2008இல் ஒரு கையெழுத்து இயக்கம் நடத்தினார். தமிழகம் முழுவதும் உள்ள பிரபல படைப்பாளிகள், கலைஞர்கள் உள்பட ஐநூறு பேரின் கையெழுத்துகளுடன் கூடிய கோரிக்கை மனுவை முதல்வர் கருணாநிதியிடம் நேரடியாகவே கொடுத்தார். "நளினி விடுதலையில் எனக்கும் விருப்பம்தான். ஆனால், மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. மத்திய அரசைக் கேட்கணும்"னு முதல்வர் கருணாநிதி, தாமரையிடம் தெரிவித் திருக்கிறார். "மாநில அரசு நினைத்தால் நளினியை விடுதலை செய்யலாம். முடிவு உங்கள் கையில்தான் இருக்கு"னு தாமரை முதல்வரைக் கேட்டிருக்கிறார். அதன்பிறகும், பல்வேறு அமைப்பினர் இதுபோல் கையெழுத்து இயக்கம் நடத்தி, லட்சக்கணக்கான தமிழர்களின் கையெழுத்துடன் முதல்வர் கருணாநிதியிடம் கோரிக்கை மனு அளித்தார்கள். அப்போதெல்லாம், "நளினி விடுதலையில் எனக்கும் விருப்பம்தான். ஆனால், மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. மத்திய அரசைக் கேட்கணும்" என்று ஒரே பாட்டை திரும்ப திரும்ப பாடி வந்த இதே முதல்வர் அரசுதான் இப்போது நளினியை விடுதலை செய்ய முடியாது என்று நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செஞ்சிருக்கு. எவ்வளவு பெரிய முரண்பாடு?

நளினியை விடுவிக்க முடியாதுங்கிறதுக்கு தமிழக அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிற காரணங்கள் அனைத்துமே பெரிய அபத்தங்கள். அரசு நியமித்த சிறை ஆலோசனைக் குழு சொல்ற கருத்துக்களின் அடிப்படையில் நளினி விடுதலையை அரசு மறுப்பதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் சொல்லியிருக்கார். அரசு தரப்பின் காரணங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

சிறை ஆலோசனைக்குழு சொல்லும் முதல் கருத்து, 'ராஜீவ் கொலை சம்பவம் மிகவும் கொடூரமான குற்றம்ங்கிறதால அதில் தொடர்புடைய நளினிக்கு விடுதலை கொடுக்க முடியாது.' அது கொடூரக் குற்றம்ங்கிறதால்தானே நளினி 19 வருடங்களா சிறையில் இருக்கார். நளினி இருந்தாலும் இறந்தாலும் ராஜீவ் கொலை கொடூரக் குற்றமாகத்தான் கருதப்படும். அந்தக் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்குற நளினி கருணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட தகுதி உள்ளவரா, இல்லையாங்கிறதை பரிசீலிக்கத்தான் சிறை ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. நளினி சிறைக்கு வர காரணமான குற்றம் எப்படிப்பட்டதுனு ஆராய்வது இந்தக் குழுவின் வேலை இல்லை. நளினி கொடூரமான குற்றத்தில் தொடர்புடையவர்ன்னா, அவரது விடுதலை கோரிக்கையை அரசு பரிசீலிச்சிருக்கவே வேண்டியதில்லையே. சிறை ஆலோசனைக் குழுவைப் போலவே ராஜீவ் கொலை பயங்கரவாதச் செயல்னு பலர் சொல்லிட்டிருக்காங்க. ஒட்டுமொத்த சமூகத்தையும் தேசத்தையும் அச்சுறுத்தும் நோக்கில் செய்யப்படுற குற்றமே பயங்கரவாதச் செயல்னு தடா சட்டம் வரையறை செஞ்சிருக்கு. 'ராஜீவ் கொலை பயங்கரவாத செயலோடு தொடர்புடையது அல்ல. அது இந்திய அமைதிப்படை 1987இல் இலங்கையில் செய்த அத்துமீறல்களுக்கு பழிவாங்கும் விதமாகவே நடத்தப்பட்டது'னு உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெளிவாக சொல்லி யிருக்கிறது. நளினியை பயங்கரவாதின்னோ, தீவிரவாதின்னோ சொல்றது உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கே எதிரானது.

சதித் திட்டத்தின் ஓர் அங்கமாகவே ராஜீவ் கொலையில் நளினி செயல்பட்டார்னும் சிறை ஆலோசனைக் குழு சொல்லுது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 42 பேரில் 16 பேர்தான் நேரடியாக ராஜீவ் கொலையில் தொடர்புடையவங்க. அந்த 16 பேரும் இப்போது உயிரோடு இல்லை. 'ராஜீவைக் கொலை செய்யப்போறாங்கங்கிற விஷயம் சம்பவம் நடந்த இடத்துக்குப் போகும் வரையில் நளினிக்கு தெரிஞ்சிருக்கலை. தெரிஞ்ச பிறகும், தாணு, சுபா, சிவராசன் ஆகியோரை மீறி நளினியால் எதுவும் செஞ்சிருக்க முடியாது'னு வழக்கை விசாரிச்ச நீதிபதிகளில் ஒருவரான தாமஸ் சொல்லியிருக்கார். மேலும், ராஜீவ் கொலைக்குக் காரணமானதாகச் சொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு விட்டது.

சிறையில் நளினி படித்து நிறைய பட்டங்களை வாங்கியிருப்பதை வைத்தே அவர் திருந்திட்டார்னு சொல்ல முடியாது என்பது சிறை ஆலோசனைக் குழுவின் இன்னொரு கருத்து. சிறையின் அடிப்படை நோக்கம் கைதிகளின் சீர்திருத்தம்தான். சிறைவாசிகள் படிப்பதே மறுவாழ்க்கைக்கு தயாராகும் நடவடிக்கையில் ஒண்ணுதான். பொதுவா சிறைக்கைதிகள் படிப்பதை அரசும் சிறை நிர்வாகமும் ஊக்குவிக்கும்போது, நளினியின் கல்வித் தகுதியை மட்டும் ஆலோசனைக் குழு ஏன் அலட்சியப்படுத்தணும்?

நளினியின் தாயாரும் தம்பியும் இதே கொலை வழக்கில் கைதாகி, விடுவிக்கப்பட்டவங் கங்கிறதையும் ஆலோசனைக்குழு நளினியின் விடுதலை மறுப்புக்குக் காரணமா சொல்லுது. அவங்க ரெண்டு பேரும் எந்தத் தவறும் செய்யாதவர்கள்னு வழக்கிலிருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவங்க. நளினி யின் விடுதலையை மறுக்க அவர்களையும் காரணமாகச் சொல்றது என்ன நியாயம்? ஆலோசனைக்குழு சொல்றபடி ஒரு வழக்கில் கைதாகி, விடுவிக்கப்படுறவங்க பிரச்சினைக் குரியவங்கன்னா, இன்று நம்மிடம் உள்ள பல அரசியல் தலைவர்கள் சந்தேகத்துக்குரியவங்க தான்!

இவை எல்லாவற்றையும்விட, அமெரிக்கத் தூதரகம் செயல்படுற, பல வி.ஐ.பிகள், அரசி யல் கட்சித் தலைவர்கள் வசிக்குற ராயப்பேட்டையில் நளினியின் தாயார் வசிப்பதால், நளினியை விடுதலை செய்தால் அங்கே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும்ங்கிற ஆலோசனைக்குழுவின் கண்டு பிடிப்புதான் உச்சக்கட்ட காமெடி! கைதிகளின் விடுதலை விஷயத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணமா காட்டக்கூடாதுனு உச்ச நீதிமன்றம் பல முறை காவல் துறைக்கு சொல்லியாச்சு. ஓர் ஆயுள் கைதி முன் விடுதலை செய்யப்பட்டால், அவர் மூன்று வருடம் நன்னடத்தை அதிகாரியால் கண்காணிக்கப்படுவார் என்பதும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவரது முன்விடுதலையை ரத்து செய்து மீண்டும் சிறையில் அடைக்க முடியும் என்பதும் தமிழக அரசுக்குத் தெரியாதா? மதுரை மாநகராட்சி கவுன்சிலர் லீலாவதி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளா இருந்த தி.மு.க.வினர் முன்விடுதலை செய்யப்பட்டப்போ, சட்டம் ஒழுங்கு பிரச்சினை பற்றி காவல் துறை யோசிச்சதா? நளினி விடுதலையாகி ராயப்பேட்டையில் வசிப்பார்ங்கிறதுதான் பிரச்சினைன்னா, அவரைத் தண்டையார்பேட்டையில் வசிக்கச் சொல்லுங்க. இதெல்லாம் ஒரு பிரச்சினையா?

**- கிருஸ்ணன் -**

நளினியை விடுதலை செய்யலாம்னு பரிந்துரைத்த மனநல மருத்துவர் விடுதலைக்கான காரணத்தை சொல்லலையாம். ஆனால், ஆரோக்கியமான மனநிலையில் இருப்பதால் நளினியை விடுவிக்கலாம்னு அறிக்கையில் அந்த மருத்துவர் சொல்லியிருக்கார். இதைவிட ஒரு மனநல மருத்துவரால வேறென்ன சொல்ல முடியும்? நளினியோட குடும்ப சூழ்நிலையைக் காரணம் காட்டி, அவரை விடுதலை செய்யணும்னு ஓராயிரம் முறை பேசியாச்சு. 'என் குழந்தைகளுக்கு ஏற்பட்ட நிலைமை நளினி யின் மகளுக்கு ஏற்படக் கூடாது'னு சோனியா காந்தியே சொல்லியிருக்கார்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. நளினியை விடுதலை செய்ய தமிழக அரசுக்கு மனம் இல்லை. அதனால் நளினியை விடுதலை செய்ய மார்க்கமே இல்லைனு காரணங்களைத் தேடிப்பிடிச்சு சொல்லுது. அரசின் மனம் அறிந்து சிறை ஆலோசனைக் குழு அறிக்கை

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# கருந்துளைகள் -14

சென்ற தடவையில் இருண்ட சடங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தேன். இனி, இவ்விருண்ட சடங்களில் இருந்து எவ்விதமாகப் பேரண்டத்தின் தோற்றத்தின் விளைவுகள் வரத் தொடங்கின என்று விஞ்ஞானிகள் கூறுவதைப் பார்ப்போம். இவை நிரூபிக்கப்படாதவை எனினும் சில விஞ்ஞானிகளால் ஏற்புடையவை எனக் கருதப்படுவை என்பதை மீண்டும் கூறிக் கொள்ளுகிறேன்.

பேரண்டமானது பிக்பாங்குடன் தோன்றிய சில கணத்தில் பேரண்ட வீக்கத்துக்குள்ளாக, பேரண்டத்தினுள் சடங்களும் சக்தியும் தோன்றின. அவை இரண்டுவகையின. ஒன்று சாதாரண சடங்கள், அவற்றுடன் இணைந்து வந்தது நாமறிந்த சாதாரண சக்தி. மற்றயவை இருண்ட சடங்களும், அவற்றுடன் சேர்ந்ததான இருண்ட சக்தியும். அந்நிலையில் பேரண்டமானது சிறியதாகவும், வேகமாக விரிவடைந்து கொண்டும் இருந்தது. இச்சிறிய பேரண்டத்தினுள் சடங்கள் (சாதாரண சடங்களும், இருண்ட சடங்களும்) ஈர்ப்பினால் ஒன்றை ஒன்று நெருங்கி வரத் தொடங்கின. பேரண்டத்தினுள் முதலில் தோன்றிய விசை (அல்லது விளைவு) ஈர்ப்பு என்பது விஞ்ஞானிகளின் அனுமானம். அதிலும் பெருமளவில் இருந்த இருண்ட சடங்களே இந்த ஈர்ப்பினை ஊக்குவித்தன.

## பேரண்டம் - 62

ஈர்ப்பானது, சாதாரண சடங்களின் முதல் விண்மீன்களைத் தோற்றியது போலவே இருண்ட சடங்களினது இருண்ட விண்மீன்களையும் உண்டாக்கியது. எமது முதல் விண்மீன்களுக்கு ஐதரசன் அணுக்களின் திரட்சி காரணமாக இருந்தது போலவே இருண்ட முதல் விண்மீன்களுக்கு 'நியூற்றிலியினோ"கள் என்ற இருண்ட இயல்புகளைக் காட்டும் பாரமான சடங்கள் காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இந்த நியூற்றிலியினோக்கள் இன்னமும் இனம் கண்டு கொள்ளப்படவில்லை. வெறும் ஊகத்தின் அடிப்படையிலேயே சில விஞ்ஞானிகள் இதனைக் கூறுகின்றார்கள். முதல் விண்மீன்கள் தோன்றுகையில் ஐதரசன் அணுக்கள் உருகலுக்குள்ளாகி ஈலியம் அணுக்களையும் வெப்பத்தினையும் ஒளியையும் கூடவே நியூற்றினோக்களையும் வெளித்தர, முதல் விண்மீன்கள் உறுதியாக சிலகாலம் பெரிய விண்மீன்களாக ஒளிவீசிக் கொண்டு இருந்தன.

இருண்ட விண்மீன்கள் எமது கதிரவனையும் விட இலச்சம் மடங்கு பெரியனவாகவும், இலச்சம் மடங்கு திணிவுடையவைகளாகவும் இருந்திருக்கும் என்பது ஆய்வாளர்களது கணிப்பு. இங்கு இருண்ட சடங்களுக்கு காரணமான நியூற்றிலியினோக்களும் அடிப்படைத் துகள்கள் ஆகும். இவை அருகருகே வந்து ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கையில் தம்மை அழித்துக் கொள்ளுகின்றன. இவ்விதம் இரு நியூற்றிலியினோக்கள் மோதுண்டு தம்மை



அழித்துக் கொள்கையில், பெருமளவு வெப்பத்தையும் நியூறினோக்களையும், பொசித்திரோன் எனும் முரண் இலத்திரன் களையும், முரண் புரோத்தோன்களையும் ஆக்கிவிடுகின்றன. இங்கு பிறப்பிக்கப்பட்ட வெப்பமானது இருண்ட விண்மீனை ஈர்ப்பினாலே மேலும் சுருங்கிச் சிறியதாகாமற் சமநிலைப்படுத்திவிடுகின்றது ஆக, முதல் விண்மீன்களில் அணுக்கரு உருகலில் பிறப்பிக்க்பட்ட சக்தியானது அதனைச் சமநிலையில் பேணியது போலவே இருண்ட விண்மீன்களிலும் நியூற்றிவியினோக்கள் அழிந்து போகையில் பிறப்பிக்கப்பட்ட வெப்பமானது இருண்ட விண்மீன்களை உறுதியாக இருக்கச் செய்தது.

இருண்ட விண்மீன்களில் இருந்தும், முதல் விண்மீன்களில் இருந்தும் நியூற்றினோக்கள் வெளிவிடப்பட்டதினாலேயே பேரண்டத்தினுள் அதிக அளவில் அவை காணப்படுகின்றன. இதனையே இருண்ட விண்மீன்கள் கோட்பாட்டைக் கூறும் ஆய்வாளர்கள் தமக்கு ஆதரவான சான்றாக இப்போதைக்குக் கூறுகின்றார்கள்.

முதல்விண்மீன்களின் நடுப்பகுதியில் ஐதரசன் அணுக்கள் தீர்ந்து போய் அங்கு ஈலியம் அணுக்களின் செல்வாக்கு அதிகமாகி, முதல் விண்மீன் உருப் பொருத்து பாரமான அணுக்களை சுப்பநோவா போன்ற மகாநோவா வெடிப்பில் அண்டவெளியினுள் தள்ளிவிட, அவை இரண்டாம் தலைமுறை விண்மீன்களுக்கு வித்திட்டன. இருண்ட சடங்களின் மத்தியிலும் நியூற்றிலியினோக் கள் தீர்ந்து போக, அங்கே வெப்பம் பிறப்பிக்க முடியவில்லை. தோன்றிய முரண் புரோத்தோன்களும் வெப்பமாகினவே தவிர உருகலுக்கு உள்ளாக முடியவில்லை. அதனால் இருண்ட விண்மீன்களின் முடிவானது முதல் விண்மீன்களின் முடிவுக்கு மறுதலையாக நடக்கத் தொடங்கியது. இருண்ட விண்மீனானது சுருங்கிக் கொண்டு வர, முரண் புரோத்தோன்கள் ஒளிர்வடையத் தொடங்கின. ஆனால் ஈற்றில் எல்லா இருண்ட சடங்களும் ஒன்றாக நெருக்கமடைய, அவ்விடத்தில் எமது கதிரவ-னின் திணிவினைப் போல் சில இலச்சம் மடங்கு திணிவுடைய கருந்துளையானது உருவாகியது. இவ்வாறு இருண்ட விண்மீன்களின் ஒடுக்கத்தால் தோன்றிய சில பெருந்திணிவுக் கருந்துளைகள் ஒன்றிணைய, பல மில்லியன்கள், பில்லியன்கள் திணிவுடைய கருந்துளைகள் கலக்சிகளின் மையத்தில் வந்து விட்டன. அத்துடன் இக்கருந்துளைகளின் வலிமையான ஈர்ப்புப்புலம் சிறியதாக இருந்த பேரண்டத்தின் பெருந்தொயையான விண்மீன்களை இழுத்து தம்மை வலம்வரச் செய்துவிட, அங்கே கலக்சிகள் தோன்றிவிட்டன. இப்படியாக, பேரண்டத்தின் ஆரம்ப காலங்களில் தோன்றிய பெரும் திணிவுக் கருந்துளைகள் ஒன்றிணைந்து கலக்சிகளையும், கலக்சிகளின் மத்தியில் உள்ள பிரமாண்டமான கருந்துளைகளையும் தோற்றுவிப்பதற்கான காலமும் பொருத்தமாக இருக்கின்றது என்பதும் இக்கோட்பாட்டை முன் வைக்கும் விஞ்ஞானிகளின் கணிப்பு.

கலக்சிகளின் மையங்களில் காணப்படும் பிரமாண்டமான கருந்துளைகளுக்கான விளக்கம் இந்தவகையில் சிலரால் கூறப்படுகின்றது. இக் கோட்பாடு (அல்லது எடுகோள்) விஞ்ஞானத்தைப் பொறுத்தலை-ரயில் மிகப் புதியது. இன்னமும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை அல்லது அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் எங்களுக்கு இப்படியாக ஒரு கருத்தும் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளதல்லவா! அடுத்தமுறையில் பெரும் திணிவுக் கருந்துளைகள் பற்றி இன்னமும் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம்.

- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



# ஆசீர்வதிக்கப்படும்... ஆம் வாசகர்களே!

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரு குழந்தை எவ்வாறு ஒரு குடும்பத்தின் விருத்திக்கு அடிப்படையாகின்றதோ அதேபோன்று தான் அந்தக் குடும்பத்தின் அங்கத்துவத்தை அதிகரிக்கும் அனைவரும் காரணமாகிறார்கள்.

இந்த அங்கத்தவர்கள் மருமகன், மருமகள், பேரக்குழந்தைகள் தத்தெடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் என எந்தவிதத்தில் அமைந்தாலும் அது அந்தக் குடும்பத்துக்கான ஆசீர்வாதமே.

குடும்பம் என்பது கூட்டுவாழ்க்கை. அதன் அங்கத்துவத்தின் அதிகரிப்பு ஒவ்வொன்றும் மிகச் சிறந்த ஆசீர்வாதம். பெற்றெடுத்த குழந்தைகள், தத்தெடுத்த குழந்தைகள், மாமா, மாமி, மருமகன், மருமகள் என்ற வேறுபாடின்றி குடும்பத்தின் அங்கத்துவத்தையும், கூட்டுவாழ்க்கையை யும் விரிவுபடுத்தும் ஒவ்வொருவரது அதிகரிப்பும் எமது குடும்பத்துக்குக் கிடைக்கும் அதிசிறந்த ஆசீர்வாதம் என முழுமனதுடன் ஏற்று வாழும் குடும்பங்களே ஆசீர்வதிக்கப்படும் குடும்பங்களாகும்.

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்
DIPLOMA முடித்தவர்கள்
ACCOUNTS CLERK PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT BOOK KEEPER
போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்
INSTRUCTORS
★ PUSHPA ★ SP ★ RAM
CERTIFICATE COURSES
Buy One Get One Free
WINDOWS, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK
PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
$-2 = 1/g \ h^2 \ dh/dt$ $\quad$ -2 = 1/g (3)2 dh/dt
$-2 = 1/g \ (3)^2 \ dh/dt$ $\quad$ dh/dt = -2/

(4) Area of APB = XY $\quad$ X+2Y = 10 or x +10 - 2y
A(y) = (10 - 2y)y $\quad$ =10y - 2y2
$A^1(y) = 10 - 4y$ $\quad$ For max or min $A^1(y) = 0$ $\quad$ y +2.5
A(2.5) = (10 - 5) (2.5) = 12.5
A(5) = 0 The largest area is 12.5 units and it occurs when pis at the point (5,2.5)

(5) A is (-x,y) and B(x,y) Area = 2xy where $y = k^2 - x^2$ $\quad$ $A(x) = 2x(k^2 - x^2)$
$= 2k^2x - 2x^3 \quad -k \le x \le k$

$A^1(x) = 2k^2 - 6x^2$ $\quad$ For max or min Let $A^1(x) = 0$ $\quad$ $6x^2 = 2k^2$
x = ±k3√ when x = ± k/√3 $\quad$ $y = k^2 - (k/\sqrt{3})^2 = 2/3k^2$
Max. are $= 2k/\sqrt{3} \times 2/3 \ k^2 = 4k^2/3\sqrt{3} \times \sqrt{3}/\sqrt{3} = 4k^2/9$

**Tutorial 258** **Questions**

(1) **For grade 7**
(a) sum of two number is 0 and their product is - 64. what are those numbers?
(b) Sum of two number is 8 and their product is 0. what are those numbers?

(2) A glass is full of milk. The total weight is 370g. When the glass is half full of milk, the weight is 290g. Find the weight of the glass? (For Gr 7 to 8)

(3) Two cottages without electrical service are situated 20m and 40 from a buried electrical power line. Lines drawn from the cottages that meet the power line at right angles are 30m 20m apart. Where should the function box be located on the power line to minimise the length of connecting cable to the cottages? (For Gr 12)

(4) Find the dimensions of the largest rectangle that can be inscribed in a circle of radious K? (For grade 12)

(5) Find the dimensions of the largest right - circular cylinder that can be inscribed in a sphere of radius K? (For Gr 12)

# Innocent Voices

20ஆம் பக்கத்தொடர்ச்சி

வீதமானோரிடம் இருந்தது. போரின் பின்னர் 82 வீதமான கோப்பித் தோட்டங்கள் சிறு உற்பத்தியாளர்களிடமுள்ளது. 25 வீதமான எல் சல்வடோர் பிரசைகள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். (ஈழப் போரின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்களின் தொகை அங்கு வாழ்வோரின் தொகையை விட அதிகம்).

3. எல் சல்வடோர் யுத்தத்தில் சிறார்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். FMLN மற்றும் அரச படைகள் சிறார்கள் யுத்தத்தில் ஈடுபடுத்திய-தாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இலங்கை, பாலஸ்தீனியம், மத்திய ஆபிரிக்கா, லைபீரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற பல நாடுகள் யுத்தத்தில் சிறுவர்களை ஈடுபடுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆப்கானில் கொல்லப்பட்ட முதல் அமெரிக்க அதிகாரியை தை 4-2002ல் (Sergeant First Class (SFC) Nathan R. Chapman) கொன்றவர் ஒரு சிறுவன். பர்மாவில் கடவுளின் இராணுவம் என அழைக்கப்படும் Karen National Army ன் முக்கியஸ்தர்கள் 12 வயது இரட்டையர்கள் Luthur and Johnny Htoo.

4. குழந்தை போராளிகளைப் பற்றி பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில Invisible Children, documentary film from Uganda on child soldiers done in 2003 by 3 young Americans (2007)
- Blood Diamond, illustrates how child soldiers are used in West African conflicts (2006)
- Soldier Child, a documentary about child soldiers in Uganda (2005)
- Born into Brothels: Calcutta's Red Light Kids (2005)
- Fields of Mudan, a 23 minute film about child sex slavery in Asia (2004)



- Human Trafficking, the 4-hour Lifetime miniseries on European women trafficked into the USA for prostitution (2005)
- Amazing Grace, the inspiring true story of William Wilberforce who demanded abolition of the African slave trade in the UK in the 1800s (2007)
- Modern-Day Slavery: Sierra Leone and Liberia, a 10 minute video by World Hope and World Relief? on trafficking and our programs in these countries
- Sex Trafficking in Cambodia, a 23 minute World Hope video documenting the lives of victims in Cambodia (2003)
- Cargo: Innocence Lost
- Svetlana's Journey

Haskell Wexler's "Latino" (1985)
Ezra (Nigeria)

5. எல் சல்வடோரில் நடைபெற்ற உள் நாட்டு யுத்தத்தில் நடைபெற்ற கதையே Innocent Voices. யுத்தம் ஆரம்பிக்க முன்னரே தனது மனைவி கெலாவையும் மூன்று குழந்தைகளையும் விட்டு விட்டு தந்தை அமெரிக்கா சென்று விடுகின்றார். சவா இக் குடும்பத்தின் மூத்த பிள்ளை. வயது 11. தாய் கெலா தைப்பதுடன், மாலை நேரங்களில் வேலைக்கும் சென்று குடும்பத்தை காப்பாற்றுகின்றார். சவா பாடசாலைக்கு செல்வதுடன் பகுதி நேர வேலையும் செய்கின்றான். இரவில் தாய் வேலை விட்டு வர முன்னர் பல நேரங்களில் இரு பகுதிகளும் சண்டையில் ஈடுபடுகின்றனர். இவர்களது வீட்டு யன்னல்களை துளைத்து சன்னங்கள் பாயும். தனது சகோதரியையும், கைக்குழந்தையும் அணைத்து கட்டிலின் கீழே பதுங்கி ஒருவாறு மூன்று உயிர்களும் தப்பி பிழைத்து வருகின்றன. அந்த வீட்டின் ஆண் மகன் (man of the house) என தாய் அவனை அழைப்பார். ஒரு வருடத்தின் பின்னர் அவன் இராணுவத்தில் சேர வேண்டும். இதற்கிடையில் தனது வகுப்புத் தோழியுடன் இவனுக்கு முதல் காதலும் அரும்புகின்றது.

12 வயது வந்தவுடன் இவர்கள் இராணுவத்தில் சேர வேண்டும். சவா இதனை பல தடவைகள் சந்தித்துள்ளான். பாடசாலைக்கு வரும் இராணுவ அதிகாரிகள், அதிபரிடம் பிள்ளைகளின் வயதினை அறிந்து 12வயது வந்தவர்களை இராணுவ பயிற்சிக்கு அழைத்துச் செல்வார்கள். சில சமயங்களில் உருவ மாறுபாட்டாலும், இராணுவ அதிகாரிகள் முன்பு நடக்கும் நடவடிக்கைகளாலும் 12வயதுக்கு குறைந்தவர்களையும் இராணுவ வீரர்கள் அழைத்துச் செல்வார்கள்.

சவாவின் குடும்பம் வாழும் பிரதேசம் கடும் மழைபெய்யும் பிரதேசம். இக் கிராமத்தில் உள்ள பாதிரியாரும் இச்சிறுவர்களுக்காக குரல் எழுப்புவார். பல நேரங்களில் இராணுவத்தின் அடி, உதைகளை

தொடர்ச்சி 27ம் பக்கம்

MATH, SCIENCE & ENGLISH TUITION

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

CONTACT: 647.340.9490 / 647.831.0070

$100 $250 $100

$250 $250

நீங்கள் Welfare, ODSP பணத்தில் வாழ்பவர்களாக இருந்தால் எமது நிறுவனத்துடன் இணைந்து தொண்டு செய்யும் பொழுது மேலதிகமாக $250.00 டொலர்களையும் அத்துடன் $100.00 டொலர்களையும் தொடர்ந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை பெற்றுக் கொள்ளலாம்.

$100 $100

**Ontario Vegetarian Food Bank**

**தொண்டர் சேவை**

$250 $250

2370 Midland Ave, Scarborough,
2400 Finch Ave., North
www.Vegefoodbank.ca
416.744 (Help).4357

$250 $100 $250 $100 $250

**வீடு விற்பனைக்கு**

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. 31, 12th district, Kadukkaiadi Lane, Nallur, Jaffna. The extend of the land is 4.5 Parappu. Within Jaffna Municipality limits. This is the 3rd piece of land behind a land with an old house on the main rd ,that is 122, Chemmani Road. Opposite to Old education department and a church and very closer to Nallur Temple( about 3/4 mile). It has some producing coconut trees and a well.Education Department) முன்பாக உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

மேலும் பக்கங்கம் 24, 25

**COMPUTER REPAIR**

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

**Commercial Business Space for Rent.**
**Midland & Silverstar**
Unit இன் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு.
416.669.3094 / 416.332.2126

**WANTED**

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

## *SCHOLARSHIP FOR C$1000*

The Tamil Literary Garden will offer an annual scholarship to an undergraduate full-time student enrolled in a Tamil language or Tamil Studies course offered by a university in Canada. The conditions of the scholarship are as follows:

All full-time undergraduates currently (2009-2010) enrolled in a Tamil language or Tamil studies course offered by a university in Canada are eligible. All students wanting to participate should submit an essay on the topic given below by 30 April 2010.

**Topic:** "Canadian Multiculturalism - A Tamil Perspective." The essay should not exceed 3000 words. It should be double spaced, and a hard copy should be sent to Scholarship Essay, c/o Chelva Kanaganayakam, Trinity College, 6 Hoskin Avenue, University of Toronto, Toronto, Ontario, M5S 1H8 together with an electronic version to appatlg@gmail.com. The essay should be an original contribution, written for the purpose of competing for this scholarship and should not have been published elsewhere.

**Scholarship:** The award of C$1000 will be given to the student who wrote the best essay. The award ceremony of Tamil Literary Garden will be held in July 2010 and the essay published in Kalam magazine.

**COMPLETE MAINTENANCE SERVICES**

Cleaning - We come to your home door

(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug

உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்

***416.829.0970***

***Complete Basement Works***

Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.

குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்

***416.666.5627/647.269.0912***

**Complete Painting Works**

Interior & Exterior - Houses, Basement, Offices

***416.666.5627 / 416.319.1106***

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

# *Innocent...*

**26ஆம் பக்கத்தொடர்ச்சி**

இப்பாதிரியாரும் சந்தித்துள்ளார்.

தாய் கெலாவின் சகோதரன் பீற்றோ ஒரு பல்கலைக் கழக மாணவன். பீற்றோ, சவாவை தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்புகின்றான். பீற்றோ தீவரவாதிகளுடன் தொடர்புள்ளவன். கெலா, சவாவை பீற்றோவுடன் அனுப்ப மறுத்துவிடுகின்றாள். 'நீங்களும், இராணுவத்தைப் போல் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகின்றீர்கள்' என குற்றஞ்சாட்டுகின்றாள். பீற்றோ சவாவ-ிற்கு பல விடயங்களை கூறுவதுடன் ஒரு வானொலியையும் கொடுத்துவிட்டு செல்கின்றான். தடைசெய்யப்பட்ட வானொலி-யை இதில் கேட்கலாம்.

சவாவிற்கு இப்பொழுது இராணுவம் வரும் போது ஒளியும் தந்திரமும் தெரிகின்றது. ஒரு கடுமையான போரின் பின்னர், சவாவும், அவனது சில நண்பர்களையும் இராணுவம் பிடித்துவிடுகின்றது. கைகளை பின்னே கட்டியபடி அவர்களை இராணுவம் அழைத்துச் செல்கின்றது. சவா மாத்திரம் தப்பிவிடுகின்றான். மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். தப்பிய சவா பாதிரிகள் மூலம் அமெரிக்கா செல்கின்றான்.

சிறுவர்களினதும், வறுமைக் கோட்டின் கீழ் வசிப்பவர்களது குரலாகவும் இப் படம் ஒலிக்கின்றது. இந்த இராணுவத்திற்கே அமெரிக்கா உதவியும், உபசரணையும், ஆலோசனையும் வழங்குகின்றது. Director Luis Mandoki மெக்சிக்கோவைச் சேர்ந்தவர். சிறுவர்களது வலியை சிறுவர்களது பார்வையிலேயே வழங்கியுள்ளார். மக்கள் தமது 'நலனுக்காக போராடும் போராளிகளையும் விமர்சனக் கண்கொண்டே பார்க்கின்றார்கள். ஒரு பக்கம் போரையும் தூண்டி விட்டு மறு புறம் சிறுவர்களையும் ஏற்றுக் கொண்டு அமெரிக்கா நல்ல பிள்ளையாக வலம் வருகின்றது. இந்த போரின் பின்னர் செல்வந்தர்களின் பண்ணைகள் சிறு உற்பத்தியாளர்களுக்கு கைமாறிய போதும், இன்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் மொத்த சனத் தொகையில் 42 வீதமானோர். இப்படத்தின் திரைக்கதையாசிரியர் Oscar Torres ன் வாழ்க்கைச் சம்பவங்களே இப்படம்.

# நீரிழிவும் உணவும்

# Diabetes & Food

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

ஏப்பிரல் 15, 2010 இதழின் தொடர்ச்சி...

இந்நோயின் அறிகுறிகளைப் பற்றிப் பார்ப்போம். அதாவது, பகல், இரவு சிறுநீர் அடிக்கடி கழியும். நாவரட்சி, தாக நிலை, களைப்பு, இளைப்பு காணப்படும். உரியவருக்கு உடம்பில் புண் ஏற்பட்டிருந்தால் அது மாறாத தன்மையாக இருக்கும். இனிப்புபொருட்களில் விருப்பம் உள்ளவராகவும், அதிக உணவு உண்பவராகவும் நேரம் கவனியாது கண்ட கண்ட நேரத்தில் சாப்பிட விருப்பம் உடையவராகவும், கோபம் ஓரளவு வருபவராகவும் காணப்படுவார். சில சமயம் தலை சுற்றும் வரலாம். கண் பார்வை மங்கலாக இருக்கும் அல்லது கண்ணில் வெண்படை (Cataract) படர்ந்து காணப்படலாம். அத்துடன் நின்றுவிடாமல் கை கால் விறைப்பு, உள்ளங்கால் எரிச்சல், சிறுநீர் கழியும்போது எரிவுத் தன்மை, தோல் பகுதியில் சில சமயம் அரிப்புத்தன்மையும் ஏற்படலாம்.

நடுத்தர வயதினருக்கு தோள்பட்டைப் பகுதியில் உளைவு, பிடிப்பு போன்றவையும் காணப்படலாம். கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்நோய் ஏற்பட்டிருந்தால் பிறக்கும் சிசுவின் நிறை கூடிக் காணப்படும். பிரசவ வேளையில் சிசு வெளியெறுவதற்கு சிரமமாகவும் இருக்கும். சிலவேளையில் அறுவைச் சிகிச்சை செய்து பிரசவம் நிகழ இடம் உண்டு. சிலரின் ஆய்வின்படி சிறுநீரில் சர்க்கரைச் சத்து இருந்தால்தான் இந்நோயான மதுமேகம் ஏற்படும் எனக்கூற முடியாது எனவும் அறியக் கிடக்கின்றது. உயிர்ச்சத்து ‘சி’ சில மருந்துகள் அல்லது Renal Glycosuria Loctasuria போன்றவற்றிலும் பரிசோதனைகள் தவறான முடிவாலும் வரவழியுண்டு எனவும் கூறப்படுகின்றது. எனவே, இரத்த பரிசோதனையே சாலச்சிறந்தாகும் எனவும் அறிய முடிகின்றது. இதையிட்டு சிந்திக்க வேண்டாம். தங்கள் வைத்தியர்கள் சகல பரீட்சைகளையும், பரிசோதனைகளையும் செய்து நன்கு சுகம் பெற்று வாழ வழி செய்து கொள்வார்கள். நாம் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாமே நமக்கு வழியமைத்துக் கொள்ள வேண்டும். சமசீர் உணவை நோய்க்கு ஏற்றபடி அளவாக நேரத்திற்கு அமைவாக எடுத்து வருதல் வேண்டும். எண்ணெய் வர்க்கத்தினால் ஆன கரியல் பொரியல் தவிர்க்கப்படல் வேண்டும். தாம்பத்திய உறவை தடுப்பதுடன் கட்டுப்பாடாக நடந்து கொள்வது நன்று. அடுத்தடுத்து கருத்தரித்தல் நன்றுயன்று. பெண்களுக்கு நீரழிவு நோய் இருந்தால் கருத்தரிப்பது கடினம். அப்படி கரு உருவாகினாலும் கருச்சிதைவு நிகழ இடமுண்டு. அல்லது கருப்பையில் சிசு இறந்து (Stillbirth) அல்லது சிசு பிறந்த பின் இறப்பு நிலை ஏற்படலாம் எனவும் அல்லது சிசுவின் அவயங்களில் குறைபாடு நிகழலாமெனவும் அறிய முடிகின்றது.

எனவே, இந்நிலைகள் ஏற்படாது எம்மை நாம் பாதுகாக்க வைத்தியர்களின் உதவிகள் முக்கியமாகும். தவறின் இதனால் மாரடைப்பு, பாரிசவாதம், இருதய வியாதி, சிறுநீர் கோளாறு போன்றவை ஏற்படலாம். இப்படி ஏற்பட்டோரை நாம் நன்கு பார்த்து கேட்டு அறிய முடிகின்றது. இந்நோய் உள்ளோரில் கை கால்களில் புண் ஏற்பட்டு மாறாது தீங்கு விளைவிக்கும் நிலையில் அங்கங்களை அறுவைச் சிகிச்சை மூலம் துண்டிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். இந்நீரழிவு என்கிற சர்க்கரை நோயை மாற்றுவது கடினமாக இருந்தாலும் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உணவுக் கட்டுப்பாடும் நோய்க்கும் எடுக்கும் மருந்தின் ஒழுங்கான பாவனையும் முக்கியமாகும். வேறு வியாதிகளுக்கு மருந்துகள் எடுத்தாலும் நீரழிவுக்குத் தரும் மருந்துக்களை எடுக்காமல் மறந்து விடாதீர்கள். இவற்றைத் தங்கள் வைத்தியர்கள் கூறிக் கொள்வார்கள் எனக் கருதுகின்றேன். இந்நோய்க்கு விஞ்ஞானம் விருத்தியான தற்காலத்தில் பல ஆய்வுகள் செய்து நோயுள்ள உரியவர் உயிருடன் நீண்ட காலம் அங்கங்களைத் துண்டிக்காமல் வாழ்ந்து வருபவர்களையும் நாம் நன்கு அறிவோம். இவர்கள் தங்களுக்குத் தேவையான இன்சுலின் ஊசி மூலமோ அன்றி குளிகைகள் மூலமோ பாவித்து வருகின்றார்கள் என்றும் சுகமான உடல் நிலை உள்ளவர்கள் போல் காட்சியளிக்கின்றனர். எதற்கும் உணவுக்கட்டுப்பாடு மிக முக்கியம்.

கிருமியால் உரிய உறுப்பு தாக்கப்பட்டு நோய் ஏற்படும் போது இந்நீரழிவு நோய் அதிகரித்துக் காணப்படலாம். இவ்வேளையில் தங்கள் வைத்தியர்கள் நீரழிவுக்குரிய மருந்தைக் கூட்டி எடுக்கும்படியும் கூறுவதுண்டு. எனவே, அவர்கள் சொற்படி நடந்து கொள்வது மிக நன்று.

இந்நோய் ஏற்பட்டிருப்போர் தங்கள் கை, கால்களில் காயங்கள், புண்கள் ஏற்படாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்நோயின் போது வியர்வை, நடையில் மாற்றம், கடும்பசி, கோப நிலை ஏற்படும்போது அவதானமாக இருக்க வேண்டும். இவை பெரும்பாலும் இரத்தத்தில் சர்க்கரையின் குறைபாட்டில் வருவதற்கு இடம் உண்டு. இந்நிலையை Hypoglycemia என அழைக்கப்படுகின்றது. இந்த வேளையில் ஏதாவது இனிப்புச்சுவையுள்ள பொருளை எடுப்பது நன்று. (குளுக்கோஸ் சீனி) தவறின் மயக்கம் (Coma) ஏற்படலாம். நீங்கள் எங்கு பயணம் செய்யும்போது உங்களின் மருத்துவ அட்டை (Health Card) நோயின் பாவனைக்குரிய குளிகைகள் நோய்க்குறிப்பு இருந்தால் கொண்டு செல்ல வேண்டும். சடுதியாக ஏதும் தங்களுக்கு நிகழ்ந்தால் உடன் சிகிச்சை செய்து எம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும். குளுக்கோஸ் எந்நேரமும் கைவசம் இருப்பது நன்மை பயக்கும். தாங்கள் பயணம் செய்யும் வேளை ஏதும் மயக்க நிலை, தலைசுற்று ஏற்படும்போது இனிப்பு பொருளைப் பாவிப்பதினால் ஓரளவு பயன் கிடைக்கும். அத்துடன் நின்று விடாமல் உடன் வைத்தியசாலைக்கு செல்வதே சிறந்ததாகும்.

மேலும், இரத்தத்தில் குளுக்கோஸ் அதாவது சர்க்கரை கூடினால் பாதிப்பு உண்டு. எதுவும் உரிய அளவே எமக்கு நன்றாகும். இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடியிருந்தால் அதனை Hyperglycemia என அழைப்பர். மயக்க நிலையும் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் உரியவருக்கு அதிக தாகம், தூக்கம், அடிக்கடி சலம் கழிதலும் வாந்தியும் இருக்கும். எனவே, எதற்கும் யோசிக்காமல் நாளாந்த சமச்சீர் உணவுடன் இந்நோய்க்கு கண்டிப்பான உணவையும் சேர்த்து எடுத்து வருதல் மிக நன்று.

நமது உணவில் மாப்பொருள் 60 வீதமும், புரதப்பொருள் 20 வீதமும், கொழுப்புப்பொருள் 20 வீதமும் இருப்பது நல்லதென நீரழிவு ஆய்வாளர்கள் கணக்கில் அறிய முடிகின்றது. மேலும், உணவு முறையை எடுத்துக் கொண்டால் மாச்சத்து உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். புரதச்சத்து, நார்ச்சத்துப் பொருட்களை அதிகம் எடுக்க வேண்டும். அதாவது நாட்டுக் கைக்குத்தரிசி, குரக்கன், கோதுமை, வரகு, தவிட்டுப்பாண் போன்றவற்றையும், புரதச்சத்தில் உழுந்து, பயறு, துவரை, கடலை, பருப்பு, சோயா, இறைச்சி (கோழி தோல் நீங்கியது), மீன் (சுறா, திரளி, விளை), முட்டை போன்றவற்றைப் பாவித்து வருதல் நன்று.



அத்துடன் நீரழிவு ஏற்படாது பாதுகாக்க வந்த வியாதியை அடக்க மணிச்சம்பா அரிசி சாதம் மிக நன்மை பயக்கும். இதனை எம்முன்னோர் கையாண்டு பயன் பெற்றுள்ளனர்.

“நல்ல மணிச்சம்பா நாடுகின்ற
நீரிழிவைக் கொல்லும் மிகுந்த சுகங்
கொண்டளிக்கும் - மெல்லப்
பசியளிக்கும் மூத்தோரைப் பாலர்களை
நாளும் முசியாமலே நன்கு
வளர்க்குமுன்”

என மிக அழகாக அடிகள் கூறுவதைப் பாருங்கள். மேலும், மலச்சிக்கல் ஏற்படாது இருக்க கீரை வகையில் பொன்னாங்கனி, வல்லாரை, குறுஞ்சாயிலை போன்றவற்றை சமச்சீர் உணவுடன் சேர்த்துக் கொள்வது மிக நன்று. காய்கறி வகையில் போஞ்சி, பாவற்காய், அவரை, பயற்றங்காய், முருங்கைக்காய், கறி மிளகாய், கரட், லீட்ஸ், பூசணி, வெள்ளரி, வாழைப்பூ, கோவா போன்றவற்றையும் விரும்பிய கீரை வகைகளையும் உணவுடன் சேர்ப்பதினால் நன்மைகள் பலவுண்டு. அத்துடன் இஞ்சி, உள்ளி, நற்சீரகம், வெந்தயம் நித்தம் சேர்ப்பது மிக நன்று.

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013





# அதிக உடல் பருமலும் தீமைகளும் அதன் தீர்வுகளும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

### உடல் எடை பருமல் தீமைகள்

1. உடல் எடைகூடுவதால் உடலும் முகமும் விகாரம் அடைகிறது. அதனால் நடையிலும் விகாரம் ஏற்படுகிறது.

2. மார்பில் அதிக தசை கூடுவதால் ஆழமாகச் சுவாசிக்க முடிவதில்லை. அதனால் இரத்ததில் தேவையான உயிர் வாயு (Oxygen) போய்ச் சேருவதில்லை. அதேமாதிரி கரியமில வாயு (Carbon dioxide) வெளியேற்றப்படுவதில்லை. இவ்வாறு நுரையீரல் (Lungs) உறுதித் தன்மை குறையும்போது அதன் ஆரம்ப நோயின் அறிகுறிகளை காது, மூக்கு, தொண்டை மூலமாக வெளிப்படுத்துகின்றது.

3. உடலின் நோய் எதிர்ப்பு சக்தி வெகுவாகச் குறைந்து அடிக்கடி நோய் உண்டாகும்.
4. அதிக இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி, இருதய பலயீனம், மாரடைப்பு போன்ற வியாதிகள் அதிகம் வர வாய்ப்பு உள்ளது. அதுவே அவர்களின் வாழ்வை முடிக்கும் எமனாக அமையக்கூடும்.
5. ஆண்மைக்குறைவு, உடல் சோர்வு, பலயீனம் என்பன ஏற்படும்.
6. மூட்டுவாத நோய்கள் வர அதிகம் வாய்ப்புண்டு.
7. இவர்களால் பசி உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மனோபலம் குறைந்து விடும். அதனால் அதிகமாக உண்பார்கள். அதனால் உடல் எடை மேலும் அதிகரிக்கும்.
8. அதிகம் உணர்ச்சி வசப்படுதல், கோபம் ஏற்படுதல்.
9. அடிக்கடி பெருமூச்சு வாங்குதல்.



10. கால்களில் வீக்கமும் கால்களிலுள்ள நரம்புகள் பலயீனமடைந்து அவர்களில் இரத்த தேக்கம் (Varicose veins) என்னும் நோய் உண்டாகும்.
11. அதிகமான கொழுப்புச் சத்து வயிற்றுப்பகுதியில் சேர்ந்து தொப்பையை உண்டாக்கும்.
12. முதுகு எலும்பு பாதிக்கப்பட்டு அடி முதுகு வலி, தோள்பட்டைப் பகுதியில் வலி, முதுகுத்தண்டு நழுவிவிடுதல் அல்லது தேய்ந்து விடல், கூன்முதுகு என்பன ஏற்படும்.
13. மலச்சிக்கல், செரியாமை,



வாயுக்கோளாறுகள் என்பன ஏற்படும்.
14. சர்க்கரை நோய் உடையவர்கள் அந்த நோயின் காரணத்தால் இறப்பதைவிட அதிக கொழுப்பு சேர்ந்த போது 25% அதிகமாகவும், இருதயநோய் உடையவர்கள் 70% அதிகமாகவும் இறக்கின்றனர் என்கிறது ஒரு புள்ளிவிபர கணக்கீடு.
15. உடல் பருமலால் கணவன், மனைவி உறவால் முழு இன்பம் கிடைக்காது போகும். அப்போது குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.
16. அதிக உடல் பருமலால் பார்வை இழப்பு ஏற்படலாம். காரணம் உடல் எடை கூடும்போது குளுக்கோஸின் அளவும் கூடுகிறது. இந்த நிலை சர்க்கரை நோய்க்கு வித்திடுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு கண்பாதிப்பு ஏற்படுகிறது.
17. உடல் பருமல் மிகுந்தவர்களின் ஆயுட்காலம் மற்றவர்களைவிட குறைவானதே என்பதுதான் அனுபவவாயிலான நியதி.

### நடைமுறைத் தீர்வுகள்

1. நோய்க்கு மருந்தானது எவ்வாறு, எந்த நேரம், எந்த அளவு என்று உட்கொள்ளப்படுகிறதோ அதேபோல் பசிக்கு உணவு இருக்க வேண்டும்.

2. மிருகங்களின் கொழுப்பானது உணவாக உட்கொள்வதை குறைக்க வேண்டும்.
3. இடைநேரங்களிலும் நேரம் தவறியும் உண்பதைத் தவிர்ப்பதுடன் இடையிடையே உண்ணும் நொறுக்குப் பண்டங்களைத் தவிர்க்க வேண்டும்.
4. பகல் தூக்கத்தையும் அதிக நேரத்தூக்கத்தையும் தவிர்க்க வேண்டும்.
5. மலச்சிக்கல், செரியாமை என்பன ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
6. வருடம் ஒரு தடவையாவது மருத்துவ பரிசோதனை செய்து தைராய்டு (Thiroid) சுரப்பதை சமநிலையில் வைத்திருக்கும் வழிவகைளை பயிற்சிகளை அதாவது ஒருவருக்கு தைராய்டு சுரப்பது குறையுமானால் உடல் பருத்து எடை அதிகரிக்கும். அதை சமப்படுத்தும் பயிற்சிகள் உதாரணமாக யோகாசனத்தில் சர்வாங்க ஆசனம் என்பது இக்குறைபாட்டை நீக்குகிறது.
17. போதிய உடல் உழைப்பு இன்மை, மனஅழுத்தம் (Stress) என்பன உடல் எடையை அதிகரிக்கச் செய்கின்றன.
18. மருந்து மாத்திரைகளை உபயோகித்து உபயோகிப்பதை குறைப்பதுடன் பொருத்தமான உணவுத் திட்டத்தைக் கடைப்பிடித்து வியாதிகளை குணப்படுத்த வேண்டும். உணவே மருந்தாக அமைய வேண்டும்.

### யோகாசனமும் உடல் பருமலும்

தினமும் 20 நிமிடமாவது யோகாசனப் பயிற்சி செய்பவர்களுக்கு அவரவர் வயதிற்கும் உயரத்திற்கும் தகுந்தவாறு உடல் எடையை தகுந்த அளவில் வைத்திருக்க முடிகிறது. பொருத்தமான ஆசனங்களைத் தேர்ந்தெடுத்துப் பழகும்போது கொழுப்புச்சத்து கரைந்து கலோரி பிரமாணங்களும் தகுந்த முறையில் எரிக்கப்படுகிறது. அத்துடன் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்கு வழி பிறக்கிறது.

### பொருத்தமான யோகாசனங்கள்

1. பட்ஸிமொத்தாசனம் - Forward Bend
2. தனுராசனம் - Bow
3. ஹலாசனம் - Ploogh
4. திரிகோணாசனம் - Triangle Pose
5. சக்கராசனம் - Wheel Pose

மேற்கூறப்பட்டதை ஒரு ஆசிரியரின் வழிகாட்டலின்படி பழகி வரவேண்டும்.






416.289.2033 after 7:00pm


**Computer Repair** Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

919 Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*

Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)
( Contact : *Niruthan Nadarajah* )
Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm





**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# புதிய தலைமுறைக்கு ஓர் அறிமுகம்

## ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் - 3

சென்ற இதழ் தொடர்ச்சி

தியாகராஜ பாகவதர், தன் நடிப்புத் திறனால் 'தமிழின் முதல் சூப்பர் ஸ்டார்' ஆக உச்சத்தைத் தொட்டார் என்றாலும், இன்று, இந்த நூறாவது ஆண்டில் பாகவதர் நினைக்கப்படுவதற்கு காரணம் அவரது குரல் இனிமைதான். அவரது திரைப்படங்கள் சிலவற்றுக்கு இன்று பிரதிகளே இல்லை, இருப்பவற்றையும் இன்றைய தலைமுறையினர் பார்த்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். ஆனால், அவரது பாடல்களை நிச்சயம் அனைவரும் கேட்டிருப்பார்கள், லயித்திருப்பார்கள். பல கோடி தமிழ் மக்களின் இதயத்தில் அவருடைய பாட்டுகள் இன்றும் எதி-ரொலித்துக் கொண்டு இருக்கின்றன.

மனதை இசைய வைப்பது தான் இசை. உன்னதமான இசையில் மனிதன் கடவுளை காண்கிறான். கடவுள், ஆன்மாவைத் தொடும் இசையில் மனிதனின் பக்தியைக் காண்கிறார். அப்படியொரு அற்புத சங்கீதம், எம்.கே.தியாகராஜ பாகவதருடையது. காந்தம் இரும்புத் துகள்களை இழுப்பது போல் பாகவதரின் இசைப்புலமை, பல தரப்பட்ட மக்களை வசீகரித்தது.

பாகவதரின் சங்கீத பரிணாமத்தை கவனிக்கும் போது அவர் பிறவியிலேயே ஒரு தெய்வாம்சம் பொருந்திய மகாமேதை என்பதும், பிறகு தான் அவருடைய மற்ற மேன்மைகளும் பிரதான அம்சங்கள் என்பதும் புரிகிறது எனப் பலரும் கூறியிருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குருகுலவாசம் செய்து கர்நாடக சங்கீதம் பயில்வது என்பது மிக முக்கியமாக இருந்தது. குறிப்பிட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அப்பியாச முறைதான் சிறந்ததென்று கருதி இசை பயின்று வந்தார்கள். அப்படி பயின்றவர்கள்தான் வித்வான்கள் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டு வந்தார்கள். ஆனால், ஏழ்மை காரணமாக சிறு வயதிலேயே நாடகம் மற்றும் சினிமா துறைக்கு வந்துவிட்ட பாகவதருக்கு குருகுல வாசம் செய்து இசை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு சிறு வயதில் கிட்டவில்லை. அக்காலங்களில், எஸ்.ஜி.கிட்டப்பாவின் பாடல்களை விரும்பிக் கேட்டு ராக நுணுக்கங்களை கற்றார். கேள்வி ஞானம் மூலமாக மிக சிறப்பாகப் பாடி வந்த பாகவதரின் பாடல்களைக் கேட்ட ஐயங்கார், பாகவதருக்கு இலவசமாக சங்கீத அப்பியாசம் அளித்து பாகவதரை மேடைக் கச்சேரிக்கு தயார் செய்தார், அரங்கேற்றினார். பின்னாளில் பாகவதர், இலக்கண சுத்தமாக சாஸ்திரிய சங்கீதத்திற்குப் பெயர் போன ஆலந்தூர் வெங்கடேச ஐயர், ஆலந்தூர் சகோதரர்கள், பாபநாசம் சிவன் போன்ற மேதைகளிடம் கர்நாடக இசையைப் பயின்றார். நிறைய கச்சேரிகளும் செய்தார், ஆனால், எதனாலோ பாகவதர் தான் பாடிய கச்சேரி பாடல்களை இசைத்தட்டுகளாக வெளியிட கொடுக்கவில்லை. இதனால், அவருடைய கர்நாடக சங்கீத இசை தட்டுக்கள் இல்லாமையால், பாகவதருடைய கர்நாடக இசைப்புலமை வெளிஉலகிற்கு தெரியாமலேயே போய்விட்டது.

ஆனால், அவருடைய கர்நாடக சங்கீத மேன்மையைப் பற்றி அந்தநாளில் வந்த செய்திகளை பார்த்து நமக்கு அவரது மேன்மையைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அதி-லொன்று: 1939ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையம் திறக்கப்பட்டவுடன் பாகவதரின் இசைக் கச்சேரி இரவு 7.30மணி முதல் நடுஇரவு வரை நடைபெற்றது. அந்த கச்சேரியில் நாக காந்தாரி ராகத்தில் தீட்சிதர் கிருதியான 'ஸரசிஜ நாப சோதரி' என்ற பாடலைமிக அற்புதமாகப் பாடினார் பாகவதர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சங்கீத கலாநிதி நீதி அரசர் டி.எல்.வெங்கடராம ஐயர், பாகவதர், அந்தப் பாட்டிற்கு போட்ட ஸ்வரங்களைக் கேட்டு பிரமித்தார். இந்த ஸ்வர குறிப்புகள் வெங்கடராம ஐயருக்கு பரிச்சயமில்லாதால், உடனே பாகவதரை சந்தித்து அந்த ஸ்வரபிரயோகங்களைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்தார்.

1941ஆம் வருடம் தமிழிசை வளர்ச்சியின் முதல் மாநாடு சிதம்பரம் அண்ணாமலை நகரில் செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியார் முன்னிலையில் நடந்தேறியது. 14.08.1941 முதல் 17.08.1941. முடிய நான்கு நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இசை உலகிலிருந்து அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, பழனி சுப்பிரமணிப்பிள்ளை, ஹரிசேசநல்லூர் முத்தையா பாகவதர், முசிறி சுப்பிரமணி ஐயர், பாபநாசம் சிவன், எம்.கே.தியாகராஜ பாகவதர், எம்.எம்.தண்டபாணி தேசிகர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, சிதம்பரநாத முதலியார், இசைத் தமிழ் செல்வர் இலக்குமணப்பிள்ளை, மகாவித்வான் ராகவ ஐயங்கார் கீவளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சரஸ்வதி பாய் போன்ற பலர் கலந்துகொண்டனர். இந்த முயற்சியைப் பாராட்டி அந்நாளில் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, சுதேசமித்ரன், ஆனந்த விகடன், கல்கி, நாரதர் குமரன், மற்றும் செட்டி நாடு பத்திரிகைகளில் மிக சிறப்பாக கட்டுரைகள் வந்திருக்கின்றன.



- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

அக்கால செய்திகளைப் படிக்கும் போது, தியா-கராஜ பாகவதரின் வளமான நாட்களில் தமிழர்களின் நெஞ்சத்தில் மூல விக்கிரகமாகவே எம்.கே.டி. கொலுவிருந்தார் என்பதை அறிய முடிகிறது. அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு தெரிந்திருக்கும். அவரை நேரில் பார்த்தவர்களுக்கு அவருடைய தோற்றம் தெய்வீகப் பொலிவுடன் திகழ்ந்தது. மெருகேற்றப்பட்ட பொன்னாய் ஒளிர்ந்த அவருடைய நிறத்திற்குப் பொருத்தமாய் அணிந்திருந்த வெண்பட்டு ஜிப்பாவும் மின்னும் வைரக் கடுக்கன்களும் வைர மோதிரங்களும் அவருக்கே உரித்த தோளைத் தொடும் 'பாகவதர் கிராப்'பும் அக்காலத்திய ஆண்களுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்திருந்ததாம். அதுவரை தமிழ் மக்கள் ஒரு முகமாக அத்தகைய கவர்ச்சிகரமான ஆண் மகனைக் கண்டதில்லை, வெண்கல மணி-யொலி போன்ற குரலைக் கேட்டதுமில்லை.

தமிழிசையில் பாகவதர் பாடிய சில பாடல்களை கவனித்தோமானால் அவரது இசைப்புலமை நன்கு புலப்படும். பல கீர்த்தனைகளை தமிழ் கீர்த்தனைகளுடன் பாடிய பாகவதர், தான் பிறமொழி கீர்த்தனைகளுக்கு எதிரி அல்ல என்பதையும் பாடல்களில் தனக்கிருந்து புலமையையும் காட்டினார். பல்லவி என்பது கர்நாடக சங்கீதத்திற்கு அணிகலன் போன்றது. இதை சிறந்த வித்வான்கள் தான் பாடமுடியும். ஆனால், அதை எல்லாம் தாளங்களுடன் பாகவதர் பாடி சிறப்பித்திருக்கிறார். இப்பேற்பட்ட இசை மேதைக்கு திருவையாறு தியாகராஜ ஸ்வாமி ஆராதனையில் பாட அனுமதி முதலில் மறுக்கப்பட்டது என்பது ஆச்சரியமானது. ஆத்மதிருப்திக்காக ஒரு முறை பாட அனுமதிக்குமாறு பாகவதர் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிறகு, வேண்டா வெறுப்பாக ஒரே ஒரு கீர்த்தனை பாட கால் மணி நேரம் மட்டும் அனுமதிக்கப்பட்டது. சம்மதித்து பாடிய பாகவதிரின் கச்சேரி பிறகு இடைவிடாது மூன்று மணி நேரங்களுக்கு மேல் ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நடந்தேறியது.

அந்த நாட்களில் கர்நாடக இசை உலக ஜாம்பவான்களான அரியக்குடி, செம்பை, மஹாராஜபுரம், முசிறி, ஜி.என்.பி.ஆலந்தூர் சகோதரர்கள் செம்மங்குடி, தண்டபாணி தேசிகர், கேபி சுந்தரம்பாள், எம்.எஸ்.டி.கே.பி. எம்.எல்.வி. போன்றவர்களுடன் பாகவதரும் தவறாமல் கர்நாடக இன்னிசைக் கச்சேரி செய்திருக்கிறார். தமிழிசை சங்கத்திலோ, ராமநவமி விழாவிலோ ஒரு சினிமா பாட்டுக்கூட அவர் பாடியதில்லை என்பது குறிப்பிட்டத்தக்கது.

'நவீன சாரங்கதரா' படத்தில் வரும் 'சிவபெருமான் கிருபை' என்ற பாடலே எம்.கே.டி. முதல் முதலாக ஒலித்தகட்டில் பதிவு செய்த பாடலாகும். பெரும்பாலான வித்வான்கள் தம் இசைக் கச்சேரிகளின் முடிவில் 'சுருட்டி' ராகத்தைப் பாடுவது வழக்கம். ஆனால், இதற்கு நேர்மாறாக எம்.கே.டியின் முதல் பாடல் சுருட்டி ராகத்தில் அமைந்தது. சங்கீதக் கச்சேரிகளில் பாடிய சில பாடல்களை அதே ராகங்களில் திரை இசையில் எம்.கே.டி. புகுத்தியிருக்கிறார். எம்.கே.டிக்கு சிந்து பைரவியும் செஞ்சுருட்டியும் விருப்பமான ராகங்கள். 'சிந்துபைரவி' ராகத்தில் 'சிவகவி' படத்தில் எம்.கே.டி. பாடிய 'வதனமே சந்திர பிம்பமோ' பாடல் காதலின் வெளிப்பாடாகத் துரித நடையில் மனம் கவர்ந்திழுத்தது. 'அசோக்குமார்' படத்தில் 'பூமியில் மானிட ஜன்மமடைந்துமோர்' பாடலும் சிந்து பைரவியின் துரித நடையைச் சற்றுத் தளர்த்தி ஒரே ராகத்தில் வெவ்வேறு வேறுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்தி சங்கீத ரசிகர்களைக் கவர்ந்தது. 'செஞ்சுருட்டி' ராகத்தில் 'சிந்தாமணி' படத்தில் ஊடலை வெளிப்படுத்தும் காதல் பாடலான 'ராதே உனக்குக் கோபம்' பாடலைப் பாடியிருப்பது அவர் திறமைக்கு ஓர் சான்று.

எம்.கே.டியின் பெரும்பாலான பாடல்கள் பாபனாசம் சிவன் எழுதி அவரே இசை அமைத்தவை, சில பாடல்களுக்கு கே.வி.மஹாதேவனும் ஜி.ராமனாதனும் இசை அமைத்துள்ளனர். எம்.கே.டி பல ராகங்களில் அநேகப் பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் 'ரதிபதிப்ரியா', 'ரஸாலி' போன்ற சில அபூர்வ ராகங்களும் சேரும். கர்னாடக இசையுலகில் 'சாருகேசி' ராகத்தைப் பிரபலப்படுத்தியதற்காக இசையுலகே அவருக்குக் கடன் பட்டிருக்கிறது என்று கூறலாம். சாருகேசி ராகம் அந்நாளில் அதிகமாகப் பாடப்படவில்லை. 'ஹரிதாஸ்' படத்தில் எம்.கே.டி. பாடிய 'மன்மத லீலையை' பாட்டுக்குப் பின்னர் அந்த ராகம் பிர-பலமடைந்தது. எம்.கே.டி யின் பாடல்கள் பெரும்பாலும் இறைப்பற்றுடனும் தென்னிந்திய பாரம்பரிய இசையை சார்ந்தே இருக்கும்.



சுருதியின் உச்ச நிலையிலையிருந்து உடனே கீழே இறங்கிப்பாடும் வல்லமை பெற்றவர் பாகவதர். அதுபோல், வார்த்தைகளை உடைத்து உடைத்துப் பாடுவதிலும் வல்லவர்.

எம்.கே.டி., பெண் குரலுடன் இணைந்து பாடிய காதல் பாட்டுக்களான 'மாய பிரபஞ்சத்தில்', 'சந்திர சூரியர்', 'மானே நான், உன் அழகை', போன்ற பாடல்கள் ரசிகர்களைக் கவர்ந்து பெரும் புகழைப் பெற்றன. இசைக் கச்சேரிகளில் இப்பாடல்களை பாட வேண்டி, துண்டுச் சீட்டுகள் கனைக்கின்றி அனுப்பப்பட்டிருக்கின்றன. பாகவதர் பாடிய சினிமாப் பாடல்கள் சுத்தமான கர்நாடக

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

A1 கொழும்பு
டிஜிற்றல் போட்டோ ஸ்ருடியோ & வீடியோ
2 பாஸ்போட் OR 2 லான்டட் காட் 5 நிமிடத்தில் $10.00
2 சிற்றிசன் or அனைத்து ஐ. டி. 5 நிமிடத்தில் $10.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $30.00
From: அல்பத்துடன் முதல் தரமான போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் or முதன் நன்மை $125.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $250.00
75 - 5x7 திருமணவிழா or அரங்கேற்றம் $375.00
25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு $125.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, SCARBOROUGH 416-752-4444
E-Mail: WWW.TYP@GMAIL.COM 416-613-2818
Web: www.tamilsyellowpages.com

# இன்னொரு... 03

தொடர்கதை - இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே

## ◇ சி.வி. நாதன் ◇

"குறிப்பின்படி எல்லாம் நல்லதுதான். ஆனால்.." பீடிகையுடன் நீலகண்டர் ஆரம்பிக்க,

"என்ன ஆனால்,….. ஐயா" அவசரப்பட்டான் இராமலிங்கம்.

"அவசரப்படாதையும், உமக்கு தெளிவாகவும் ஆறுதலாகவும் சில விசயங்கள் சொல்லவேண்டி இருக்குது. கோள்கள், நட்சத்திரங்களின் நிலையளைக் கொண்டு ஒருவரின் எதிர்காலத்தினைக் கணிச்சுச் சொல்லுறதெண்டது லேசான விசயமில்லை. இந்தக் கணிப்புக் கூட ஒரு விஞ்ஞானம்தான். வானியல் விஞ்ஞானத்தில் சடப்பொருள்களைப் பற்றித்தான் சொல்லமுடியும். நாங்கள் உயிருள்ள மனிசர்களின் எதிர்காலத்தை எல்லோ கணிச்சுச் சொல்லுறோம்! இதுவும் விஞ்ஞானம்தான். ஆனால் ஏனென்டு தெரியாது சில மனிசரும், சில விஞ்ஞானிகளும் இதை ஏற்றுக் கொள்ளுறதில்லை."

"இதென்னடா பெரிய தொல்லையாய் இருக்குது. எது விஞ்ஞானம் எது விஞ்ஞானமில்லை என்பதா இப்ப எனக்குத்தேவை? இந்த மனிசன் என்ன, இப்படி இழுத்தடிக்குதே. ஏதோ திறமான சாத்திரி எண்டு வந்தால் அறுத்துத் துலைக்குதே மனிசன்" என இராமலிங்கம் அவ்வளவு எதிர்பார்ப்பிலும் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவனது முகத்தினைப் படித்துக் கொண்ட நீலகண்டர் சிரித்துக் கொண்டே "தம்பி அவசரப்படாதையும்.. கொஞ்சம் ஆறுதலாய் இரும். அப்பதான் நான் சொல்லுறது உமக்குத் தெளிவாக விளங்கும். இந்த இரண்டு குறிப்புகளும் மற்றைய குறிப்புகள் போன்றவை அன்று. முற்றிலும் வித்தியாசமானவை. நான் விபரமாகத்தான் சில விசயங்களை உமக்குச் சொல்லவேண்டி இருக்கு."

"ஓமோம். நீங்கள் சொல்லுங்கோ. எல்லாம் நல்லதாய் இருந்தால் சரி"

"தம்பி, பொதுவாகக் குறிப்புகள் கிரகங்கள், நட்சத்திரங்கள் என்பவற்றின் நிலைகளைக் கொண்டுதான் கணிக்கப்படுது. ஒரே நேரத்திலை பிறந்த பிள்ளையளின் குறிப்பிலை கூட சிற்சில வேறுபாடுகள் இருக்கும். அதுகளுக்கு கனக்கக் காரணங்கள் இருக்குது. ஆனால் உமது மருமக்களின் விசயம் கொஞ்சம் வித்தியாசமானது. ஒட்டிப் பிறந்தவை எண்டதையும் விட, அவையள் பிறந்த நேரத்தின் கிரக நிலையளைப் பாத்தால்" எழுதி வைத்திருந்த தாளினைப் பார்த்துக் கொண்டே சொல்லிக் கொண்டு வந்த நீலகண்டர் நிமிர்ந்து இராமலிங்கத்தைப் பார்த்தார்.

"அந்த நட்சத்திரநிலைகளுக்கு இந்தப் பூமியிலை மட்டுமில்ல, ஈரேழு உலகத்திலையும் ஒரே ஒரு உயிர்தான் பிறக்கலாம், பிறந்திருக்கும். நான் என்ன சொல்லுறேன் என்டால். வேற்றுக் கிரக மனிதர்கள் என்று கேள்விப்பட்டிருப்பீரே, அவைகளுக்கும் மனிசருக்குமாய் அந்தக் கணத்திலை ஒரேஒரு உயிர்தான் பிறந்திருக்கவேணும் என்று கிரக நிலைகள் சொல்லுது. ஆனால் எப்படியோ இரண்டு பேர் பிறந்திட்டினம். ஒருவேளை இரண்டு பேருக்கும் ஒரு உயிர்தானோ தெரியேல்லை. அல்லது ஒருவேளை ஒப்பரேசன் செய்த வைத்தியர்மாரின்ரை உபயமோவும் தெரியாது"

இராமலிங்கத்திற்கு கொஞ்சம் விளங்கியது போல் இருந்தது, கொஞ்சம் விளங்காதது போல் இருந்தது. கண்கள் கொஞ்சமாய் சுருக்கி நீலகண்டரைப் பார்த்தான்.

நீலகண்டர் தொடர்ந்தார்.

"ஒரு உயிர் என்றால், ஒரே ஒரு மனிதப் பிறவிதான் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் இரண்டு பேர் பிறந்திருக்கிறார்கள். இப்படிச் சில விதிவிலக்குகளும் வாறதுதான். அப்படியாக விதிவிலக்குகள் ஏற்படுகையில் என்ன நேரிடும் எண்டதையும் நம்முன்னவர்கள் சொல்லித்தான் இருக்கினம். நேரடியாக இல்லாட்டிலும் எங்கடை கணிப்புக்களிலை இருந்து நாங்கள் அதுகளை அறியலாம்."

இராமலிங்கம் நீலகண்டரைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"நான் எதையும் பூசி மொழுகிச் சொல்ல விரும்பேல்லை. நேரடியாயே சொல்லுறேன்" என்ற நீலகண்டர் கொஞ்சம் நிறுத்தி, பின் இராமலிங்கத்தைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து கூறினார். "இப்ப சிக்கல் என்னென்டால் அந்த இரண்டு உயிரிலை ஒண்டுக்கு ஆபத்து. அதுவும் உயிராபத்து வரலாம். அது எப்படி எண்டால் எட்டு வயசுக்குள்ளை எப்பவும் அந்த உயிராபத்து வரலாம். அப்பிடி எட்டு வயசை தாண்டிட்டால் இரண்டு பேருக்குமே ஆயுளுக்குப் பழுதில்லை. நீண்ட காலம் நல்ல சுக பெலத்தோடை சீவிப்பினம். ஆனால் 99 வீதம், எட்டு வயசுக்குள்ளை ஒருவருக்கு உயிராபத்துக்கு சாத்தியம் இருக்கு. 8 வயதுவரையும் இரண்டு பேரையும் கவனமாகப் பார்த்தியள் என்டால்,… இரண்டு பேரும் உலகம் மெச்சத்தக்கதாய் வாழுவினம்."

இராமலிங்கம் திகைத்து விட்டான். என்ன சொல்வதென்றே அவனுக்கு விளங்கவில்லை. நீலகண்டர் தொடர்ந்தார்.

"எனது கணிப்புக்களிலை, ஆய்வுகளிலை எதுவித பிழையுமில்லை. ஒண்டுக்கு ஒம்பது தடவை கணிச்சுப் பார்த்திட்டேன். பிள்ளையள் இரண்டு பேருக்கும் எட்டு வயசு முடியும் வரை உயிராபத்தான விசயங்களிலை, வேலையளிலை ஈடுபடுத்தாமல் இருக்கிறது நல்லது. இரண்டு பேரையும் பிரிக்கும் ஒப்பரேசனைக் கூட எட்டு வயசிக்கு பிறகு வைச்சால்தான் நல்லது எண்டு எனக்குப்படுது. டொக்டர்மாருடன் கதைச்சுப் பாருங்கோ. அவையளும் சரி எண்டு சொல்லுவினம். எண்டுதான் நினைக்கிறேன்."

இராமலிங்கம் திகைத்துப்போய் என்ன சொல்வதென்றே தெரியாமல் இருந்தான்.

"நான் இப்ப குறிப்பெண்டு ஏதும் எழுதேல்லை பிள்ளையளைக் கவனமாகப் பாருங்கோ. எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடிப் போட்டு வாரும், எல்லாம் வடிவாய் எழுதித்தாறேன்."

தொடர்ச்சி 38ஆம் பக்கம்




NOW OPEN

Halal

Nasi Goreng
Maggi Goreng
Singapore Rice
Noodles
Roti Sardin
Roti Canai
Soup Tomyam
Chicken Sambal
Chicken Kicap
Chili Chicken
Murtapa
Puri

Chappati
Kothu Roti
Mutton Varuval
Mutton Curry
Kari Pop
Kuih Udang
Kuih Lapis
Samosa
Rolls
Tosai
Masala Tosai

OPENING SPECIAL
April 1st - April 30th

Mee Goreng = $ ~~5.99~~ - $ 2.99
Nasi Lemak = $ ~~5.99~~ - $ 2.99
Rotii Rap = $ ~~2.99~~ - $1.99
Appam = $ ~~0.75~~ - $0.49

Open Hours:
11.00am - 10.00pm
Monday Closed

Tuesday - Masala Tosai / Tosai - ~~$3.50~~ - $2.50
Wednesday - Murtapa, Roti Sardin - ~~$3.99~~ - ~~$3.50~~ -$2.99
Thursday - Chicken Curry with 3 Roti canai - ~~$4.50~~ - $3.50
Friday - Rice and Veg with 10 item - ~~$4.99~~ - $3.99
Saturday & Sunday - Biryani - ~~$5.99~~ - $3.99
Tomyam - ~~$3.50~~ - $2.50
Kuih Lapis - Kari Pop

Rotti & Samosa Whole Salers
331 Glendower Cir. Unit #2
Scarborough, On (Birchmount and Finch)
416.754.8100

14

# உண்! உறங்கு! உழை!

**என் இனிய நண்பர்களே!**
**வாழ்த்துக்கள்.**

நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி வேறு ஒன்றும் அறியேன் பராபரமே! இந்தக் கோட்பாட்டு அமைவில் இளம் வயதிலிருந்தே வாழும் பேறு பெற்ற ஆசீர்வாதம் எனக்குண்டு. இதனை யார் தந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. சிலவேளை சிவபெருமானின் அருளாக இருக்கலாம். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற மனநிலை மனிதனாகப் பிறந்தவருக்கு முக்கியமான உணர்வாய் இருக்க வேண்டும். நலம் பெறப் பிரார்த்தித்ததில் இதுவும் அடங்கும். மனநலம், உடல்நலம் வாழ்க்கை நலம் அனைத்துக்கும் ஆதாரமானது. உங்களுக்கு இவை இருக்கலாம். பிறருக்கும் கூறுங்கள். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்று நம்மவர்கள் நமது தாயகத்தில் சொல்வார்களே. ஊட்டுதல் உணவை மட்டுமல்ல உன்னதமான உயரிய உணர்வுகளையும் தான். உணர்ச்சியில்லாமல் வாழ்ந்து என்ன பயன்? உணர்ச்சியோடு உடுப்பும் அலங்காரங்களும் சேர்ந்தால் அழகு, அருமை, பெருமை எல்லாம் கலந்து ஏற்றத்தை தருமல்லவா? இந்த அழகு அழகியலுக்குள் அடங்குமே.

ஆண்டவரே! 'அறியாமல் செய்கிறார்கள் அவர்களை மன்னித்துக் கொள்ளும்' என்ற யேசுபிரானின் வாக்கியம் மகாவாக்கியம்மல்லவா? நண்பா! நம்மவர்களில் பெருபான்மையோர் அறியாமலேயே செய்கிறார். தெரியாமல் தான் பிழைவிடுகிறார்கள். அவர்களுக்கு அறிவுறுத்துவதும் தெரியப்படுத்துவதும் புண்ணியமே. அறிவித்தல் ஆயிரம்கோடி புண்ணியத்தை தரும், என்று பாடி வைத்தான் பாரதி.

'அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னர் உள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல் அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற பாரதியின் கூற்றில் ஏழ்மை என்பது வறுமை மட்டுமல்ல அறியாமையும் தான். நாம் எல்லோரும் ஏதோ ஒரு விடயத்தில் ஏழைகள் தான். கொண்டும் கொடுத்தும் புண்ணியம் தேடுவோம். கிப்பிளிங்குக்குப் போக வேண்டியிருந்தது. வாடனில் ரயில் ஏறினேன். மூலை இருக்கையில் இருக்கும் பழக்கம் இன்னமும் என்னை விட்டுப் போகவில்லை. ஏன்? ஒருவர் 'Thanks' என்றால் 'You are well come' என்று சொல்ல வாய்வரமாட்டேன் என்கிறது. சட்டென்று 'Thanks' என்றே வாய் கூறுகிறது. சற்றுச் சென்றதும் 'Well Come' சொல்லியிருக்க வேண்டும் என்று மனம் நினைக்கிறது. பழக்க தோஷமோ தேசவிசுவாசமோ தெரியவில்லை. இதயத்தில் ஈழமும் சதையத்தில் கனடாவும் கட்டுப்பட்டுக் கிடக்கிறது.

யாழ்ப்பாணத்தான் என்பதற்குரிய அடையாளம் ரயிலில் கோணர் சீற்பிடிப்பதிலும் தெரியுமாக்கும். நான் மூலை இருக்கைக்குப் போய் இருக்க முன்பு ஒரு வெள்ளை வெடுக்கெனப் போய் இருந்து விட்டது. ஊரில் என்றால் அக்கா? இந்த இடத்தைத் தாறையா வெற்றிலை துப்ப வசதியாய் இருக்கும் என்று கேட்டிருப்பேன். இஞ்சை எச்சி துப்பிறவையை காண்பது அரிது. எல்லாவற்றையும் விழுங்கிறவை தான் அதிகம். உமிழ்நீர் உணவைச் செரிக்க உதவும் என்ற பரிகாரப் பக்குவம் தெரிந்த நாடு.

நான் நினைத்த இடத்தை வெள்ளை பிடித்ததும் மற்றப் பக்க மூலைக்கு ஓடினேன். எங்கிருந்தோ வந்த கறுப்பு விறுக்கென்று அதில் போய் இருந்துவிட்டது. ஒரு ரயில் பெட்டிக்கு ஒரு வாசல் என்றால் முந்திறவன் விரும்பிய இடத்தில் இருக்கலாம். இங்கு பலவாசல்கள் பிந்திறவனும் முந்தலாம். இங்கு முன்பின் என்பது பிரச்சினை இல்லை. வேகம் தான் பிரச்சினை. விரைபவன் வெல்வான். அரை-பவன் தோற்பான். வெள்ளைக்குப் பக்கத்தில் இருக்க வெட்கம். கறுப்புக்குப் பக்கத்தில் இருக்க பயம். அதுகள் நல்லதாய் இருந்தாலும் என் மண்வாசனை இப்படி யோசிக்க வைக்குது. வேறு ஒரு இருக்கையில் சீனத்திக்குப் பக்கத்தில் சிரித்தபடி போயிருந்தேன். பொய் சிரிப்பு. அவள் மாமி மகளா? குஞ்சியத்தை மகளா? அவளும் சிரித்து விட்டு பையில் வைத்திருந்த புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்து விரித்துப் படித்தாள். அவள் சிரிப்பும், புத்தக விரிப்பும் கடைக்கண்ணால் பார்த்தேன். கனடாவில் கடைக்கண்ணால் பார்ப்பது தான் நாகரிகமாம். எனக்குமுன் கனடாவுக்கு வந்தவர் சொன்னார். சீன மொழியில் எழுதப்பட்ட புத்தகம் அது. நானும் என்னை போன்றவர்களும் தமிழ் புத்தகங்களை ரயிலுக்குள்ளோ, பஸ்சுக்குள்ளோ வைத்துப் படிக்கக் கூசுவோம். வெள்ளைக்கார நாட்டில் தமிழ்ப் புத்தகங்களைப் படிப்பது வெக்கக் கேடான விடயம் என்பது எங்கள் மனப்பான்மை. மடமனப்பான்மை.

கொழும்புக்குப் போக யாழ்ப்பாணத்தில் ரயில் ஏறியதும் இங்கிலீசு பேசிய சனமல்லவா நாங்கள். தமிழைப் பேசியிருக்க வேண்டும். இல்லையென்றால் சிங்களத்தைப்

" யாழ்ப்பாணத்தான் என்பதற்குரிய அடை யாளம் ரயிலில் கோணர் சீற் பிடிப் பதிலும் தெரியுமாக்கும். நான் மூலை இருக்கைக்குப் போய் இருக்க முன்பு ஒரு வெள்ளை வெடுக்கெனப் போய் இருந்து விட்டது. ஊரில் என்றால் அக்கா? இந்த இடத்தைத் தாறையா வெற்றிலை துப்ப வசதியாய் இருக்கும் என்று கேட்டிருப்பேன். இஞ்சை எச்சி துப்பிறவையை காண்பது அரிது. எல்லா வற்றையும் விழுங்கிறவை தான் அதிகம். உமிழ்நீர் உணவைச் செரிக்க உதவும் என்ற பரிகாரப் பக்குவம் தெரிந்த நாடு. "

பேசியிருக்க வேண்டும். இப்போ இரண்டும் கெட்டான் நிலை. ரயில் பெட்டியை அண்ணாந்து பார்த்தேன். முகட்டு விளிம்பில் 'Eat Sleep Work' என்று ஒரு நீண்ட நீளக் கண்ணாடியில் எழுதியிருந்தது.

பஸ் கண்ணாடியில் நீ..ள..நாய். ரயில் கண்ணாடியால் நீ.ள. நளினம். ஆகா..கலை..கலை. 'உண், உறங்கு, உழை' என்று அதனைத் தமிழ்ப்படுத்தி உச்சரித்தேன். எனக்குப் பக்கத்தில் இருந்த சீனத்தி ஏதோ தலை சரியில்லாத கேஸ் என்று நினைத்தாளாக்கும். எழுந்து போய் எதிர் இருக்கையில் ஒரு தாடிக்காரப் பஞ்சாபிக்குப் பக்கத்தில் இருந்தாள். அவன் ஒரு ஞானிபோல் பொல்லு விழுங்கியவனாய் நிமிர்ந்தபடி இருந்தான். இவள் போய் பக்கத்தில் இருந்ததும் தனது தாடியை வருடியபடி கூனிக் குழைந்து புன்முறுவல் பூத்தான். இணை விழைச்சு! இணை விழைச்சு! என்று என் இதயம் கொக்கரித்தது.

நண்பா! உண், உறங்கு, உழை என்பதுதான் கனடாவின் வாழ்க்கைப் போக்கா? மனிதனுக்கு இங்கு வேறு ஒன்றும் தேவையில்லை. இந்த மூன்றும் தான் முக்கியம். இவற்றில் கவனம் செலுத்துங்கள் என்கிறதா? அந்த எழுத்துக்கள். இது ஒரு பல்கலாச்சார நாடு. பல நாட்டு மக்கள் வாழும் பூமி. கலை, பழக்கவழக்கங்கள், ஒழுங்குமுறைகள், விழுமியங்கள் முதலியன இனத்துக்கு இனம் வித்தியாசப்பட்டிருக்கின்றன. இந்த வித்தியாசங்கள் எப்படி இருப்பினும் மனிதன் வாழ வேண்டும் என்பதே கனடாவின் எண்ணமா? நீ வாழவேண்டுமானால் உண், உறங்கு, உழை. இவை இல்லையேல் நீ இங்கு இல்லை. இருப்பில் நிலைக்க முடியாது போனால் இல்லாமல் போவது தான் இங்கு நடக்கும் என்கிறதா?

உண்ண முடியாதவர்கள் சிலரும் உறங்க முடியாதவர்கள் பலரும், உழைக்க முடியாதவர்கள் சிலரும் இருக்கிறார்களே! அவர்கள் இருப்பில் நிலைக்க முடியாதவர்களா? அவர்கள் உடல்நல மருத்துவத்தையோ, உளநல மருத்துவத்தையோ நாட வேண்டியது தான். உழைக்க முடியாது போனால் கொடுப்பனவுகளை எடுக்க வேண்டியது தான். நல்ல நாடடா இது. முடிந்தால் செய், முடியாவிட்டால் சும்மாயிரு. சோறு தாறன் என்று சொல்லும் தேசம். கடவுள் தேசமல்லவா?

நண்பா! இதுமட்டுமா? உங்கள் அடையாளத்தை உருவாக்குங்கள் என்ற அறிவிப்புப் பலகையை ஒருநாள் நீ காட்டக் கண்டேனே! நினைவிருக்கிறதா? நமக்குரிய சுயங்களை, பழக்கவழக்கங்களை, ஆசாரங்களை, பண்பாடுகளை நாம் தொடர்ந்து பேணி நமது அடையாளத்தை வெளிக்காட்டி கணிப்புப் பெறவும் இந்த நாடு வாய்ப்பளித்திருக்கிறது. இங்கு நம்மவர்களில் சிலர் நம்முடைய பூப்புனித, கல்யாண வீடுகளில் நமது இனசனத்தோடு விருந்துண்ணும் போது இடியப்பத்தோடும் உறட்டிகளோடும் முள்ளுக்கரண்டிகளோடு மல்லுக்கட்டிக்கொண்டு ஊரிலே சொதியோடு இடியப்பத்தைக் கையால் பிசைந்து சாப்பிட்ட இன்ப அனுபவத்தைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள்.

பக்கத்து மேசையில் ஒரு வெள்ளையோ அல்லது சீனமோ இடியப்பத்தைக் கையால் குழைத்தும் உறட்டியை கையால் பிய்த்தும் சுவைத்துச் சாப்பிட்டபடி ஆசிய உணவுகளின் அருமைபற்றியும், கையால் உணவைத் தொட்டுப் பிசைந்து சாப்பிடுவது உணவைச் சுகமாக செரிக்க வைக்கும் என்றும் பேசிக் கொண்டிருப்பதும் இவர்கள் காதுகளுக்கு கேட்பதும் இல்லை. கண்களுக்குப் படுவதும் இல்லை. ஏன்? என்றா கேட்கிறாய்? அவதானம் என்பது நமக்கு மெல்ல மெல்லத் தேய்ந்து கொண்டு போகிறது. நாம் தேய்ந்து தேய்ந்து காணாமல் போய்விடுவோமோ என்ற பயம் உண்டாகிறது. நில், கவனி, நினை, நிமிர் என்று ஒரு குறும்படம் எடுத்து ஒரு கவன ஈர்ப்பு பிரகாரம் செய்வோமா? அந்தப்படம் எடுப்பதைவிட அதைப் பார்க்க வாருங்கள் என்று நமது மக்களை எழுப்புவது இமாலயப்பிரச்சினை என்று நீர் நினைப்பது புரிகிறது. அவர்களிலும் தவறில்லை. இன்றைய வாழ்க்கையில் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.



'எல்லாம் இன்பமயம்' என்று ஒரு காலத்தில் உருண்ட உலகம் இன்று எல்லாம் இராவணுமயம், குண்டுமயம், பயங்கரமயம், போர்மயம் என்று மாறித்திணறுகின்றது. இந்தச் சூழ்நிலை எப்பொழுது மாறுமோ? குண்டுத்தேசம்!

- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# உண்! ...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

தண்ணீர்தேசம்! கண்ணீர் தேசம்! என்பவற்றோடு கடவுள் தேசமான கனடாவையும் இணைத்து எண்ணினேன். ரயிலும் நின்று நின்று ஏற்றியும் இறக்கியும் ஓடிக்கொண்டிருந்து. இது தன் வேலையைச் செய்வது போல் நாமும் நமது வேலையைச் செய்தால் எவ்வளவு நல்லது. சிலர் தங்கள் வேலையையும் செய்வதில்லை. சும்மாயும் இருப்பதில்லை. சின்னஞ் சிறுகதைகள் பேசி பலர் வாடச் சிலர் செய்யும் வேடிக்கை மனிதர்களாய் உலவுவதை நினைத்துப் பெருமூச்சு விட்டேன். சேபோணில் ஏறி எனக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வெள்ளை உனக்கென்ன பிரச்சினை (What is wrong with you) என்று ஆங்கிலத்தில் கேட்டது. எனக்கொரு பிரச்சினையும் இல்லை என்னவர்கள் பற்றித்தான் எனக்குப் பிரச்சினை என்று புறுபுறுத்தபடி எழுந்து பக்கத்து இருக்கைக்குப் போனேன். அந்த வெள்ளை இன்னொரு வெள்ளைக்கு இப்போ இங்கு பலருக்கு தலைசரியில்லையென்றும், மன அழுத்தங்களும், வேலைப்பழுவும், வேலை இன்மையும், நேரமின்மையும் பலரைப் பலவீனப்படுத்தி விட்டது என்றும் சமூக இயல் அலசலில் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தது.

நண்பா! பல்கலாச்சாரத்தில் ஒருவரைப்பற்றி அவருடைய உடல் மொழியை வைத்துக் கொண்டு, தமது உரைமொழியால் வியாக்கியானம் செய்வது, விமர்சனம் செய்வது அவரவர் சுதந்திரம் போலும். வீட்டில் நமது உரைமொழியில் கவனமாயிருத்தல் போன்று. வீட்டுக்கு வெளியே நமது உடல்மொழியிலும் கவனமாய் இருத்தல் வேண்டும். பலருடைய உரைமொழியில் பண்பு நாகரிகம் இருந்தும், உடல்மொழி பதறல்களால், பிசகுகளால் தோல்விகளையும் பின்னடைவுகளையும் பெற்றிருக்கிறார்கள். 'நான் நன்றாக நடிப்பேன். தமிழை அழகாக உச்சரித்துப் பேசுவேன். எல்லாரோடும் மனம் கனிந்து பழகுவேன். படப்பிடிப்பு நேரத்துக்கு தவறாமல் போய் தளத்திலே நிற்பேன். இத்தனை இயல்புகள் எனக்கிருந்தும் புதுப்பட வாய்ப்புகள் எனக்கு வராததற்கு என் உடல் மொழிதான் காரணம். இப்பொழுது உடல் மொழியை எப்படி உபயோகிப்பது என்று கற்றுவருகிறேன்' என்று ஒருதிரைப்பட இளம் நடிகர் பேட்டி ஒன்றில் ஆதங்கப்பட்டுச் சொன்னது நினைவுக்கு வருகிறது.

உடல் மொழியில் கவனமாய் இருக்க வேண்டும். 'நுணலும் தன்வாயால் கெடும்.' மனிதமனமும் தன் உடலால் கெடும். உடல்மொழியே உலகப் பொதுமொழி. இந்த மொழிப்புலமையும் வாழ்க்கைக்குத் தேவை என்று முன்பு ஒருமுறை விளம்பரத்தில் விளம்பியிருந்தேனே? நினைவிருக்கிறதா? மறந்து போனால் அந்தக் கட்டுரையை எடுத்து மறுவாசிப்புச் செய்யுங்கள்.

வேறு என்ன? பிறபின்பு
அன்பு ஈழத்துச் சிவனாந்தன்.





அழைப்பிதழ்
சொற்கோவை
(இலவச) வெளியீடும்
செல்வா
இலங்கையன்
நினைவு நாளும்



**காலம்:** 2010 ஏப்பிறில் 18, ஞாயிறு மாலை 5:00 மணி

**இடம்:**3600 Kingston Road, Scarborough Village Community Centre
(Kingston & Markham)

சொற்கோவை வெளியீட்டுரை: **பேராசிரியர் செல்வா கனகநாயகம்** (ரொறன்ரோ பல்கலைக்கழகம்)
சொற்கோவை முயற்சிகளும் பயனும்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
செல்வா இலங்கையன் நினைவுரை: **பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி** (வின்சர் பல்கலைக்கழகம்)
இலக்கியமும் சமூகமும்: பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ்
அன்புடன் அழைக்கின்றோம்
(அனைவருக்கும் சொற்கோவை இலவசமாக வழங்கப்படும்)

சொற்கோவைக் குழாம்

http://www.sotkovai.tk/
GTA Square 5215 Finch Ave.E. Suite:201
Toronto ON M1S 0C2

பொ.கனகசபாபதி
சொற்கோவைக் குழாம்
416-283-1544
pkanex@hotmail.com



**Served Over 15 Years In Toronto**
**Now in Richmond Hill**



**NTE AUTO INC.**
**New Trade Engineering**
MS7 Quality Used Car Sales
**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575**
**416-399-6640**
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

Front Brake Service From . . . . . . . . $109. 95
Rear Brake Service From . . . . . . . . $109.95
Transmission Service From . . . . . . . $ 99.95
Lube & Oil Service From . . . . . . . . $ 29.95
Tire Change & Balancing From . . . . . $ 14.95
Engine Tune up from . . . . . . . . . . $159.95
Air Conditioning Service From . . . . . $ 49.95
Computer Scanning from . . . . . . . . $ 39.95

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.

# அங்காடித் தெரு - திரை விமர்சனம்

நடிகர்கள்: மகேஷ், அஞ்சலி, ஏ.வெங்கடேஷ், பழ.கருப்பையா, பிளாக் பாண்டி. ஒளிப்பதிவு: ரிச்சர்டு எம்.நாதன், வசனம்: ஜெயமோகன், இசை: விஜய் ஆண்டனி - ஜிவி பிரகாஷ், தயாரிப்பு: கே.கருணாமூர்த்தி - சி.அருண்பாண்டியன், எழுத்து - இயக்கம்: ஜி.வசந்தபாலன்



நாம் பலமுறை பார்த்த, நாமும் ஒரு பகுதியாக இருக்கும் வாழ்வுதான். ஆனால், நம் பார்வை படாத இருள் பகுதி. தமிழகத்தில் பிற பகுதிகளில் இருந்து சென்னைக்கு வருபவர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்து சென்னை வருபவர்களுக்கும் தி.நகர் ரங்கநாதன் தெரு என்பது ஒரு கனவுப் பகுதி. அந்த தெருவுக்குள் நுழைந்து, சில கடைகளுக்குள் ஏறியிறங்கி, சில பொருட்களை வாங்கினால்தான், சென்னைப் பயணம் நிறைவுபெறும். ரெங்கநாதன் தெருவில், கடைக-ளில் பலமுறை நாம் பல்வேறு முகங்களை பார்த்துத் திரும்பி இருக்கிறோம். ஆனால், அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது, இதயம் இருக்கிறது என்பதை பற்றி ஒருநாள்கூட சிந்தனை செய்திருக்க மாட்டோம். கடைகளின் வாசலை நின்றபடியே நம்மை வரவேற்கும், சிரித்துப் பேசி பொருட்களை விற்கும் பணியாளர்களை மட்டுமே நாம் அறிவோம். அந்தப் பணியில் அவர்கள் சந்திக்கும் துயரங்கள் எத்தனை, அவர்கள் துயரங்களை எப்படி எப்படி எல்லாமோ மறைத்துக்கொண்டு அவர்கள் நமக்கு சிரிப்பை மட்டுமே தருவது எப்படி, அவர்கள் சந்திக்கும் நடைமுறை சிக்கல்கள் என்ன... எதைப் பற்றியும் நாம் யோசித்தது கிடையாது. கணக்கற்ற தடவைகள் ரெங்கநாதன் தெருவுக்குள்ளும் அதன் பிரமாண்ட கட்டிடங்களுக்குள்ளும் ஏறி, இறங்கி இருந்தாலும் எத்தனை பேர் உணர்ந்திருக்க முடியும் அந்த நுட்பமான உலகத்தை. இப்படி நாம் அன்றாடம் பார்க்கும் மனிதர்களின் பார்த்திராத பக்கங்களை நமக்கு காட்டுகிறது, அங்காடித் தெரு. அந்த தெருவின், அங்குள்ள மக்களின் வாழ்வை, வலியை, நம்பிக்கையை, காதலை, நட்பை, துரோகத்தை... என்று அத்தெருவின் இருள் பகுதிக்குள் ஒளிபாய்ச்சி உண்மையை உணர்த்துகிறது.

வழக்கமான காட்சிகளுடன் விரிகிறது படம். மழையில் குளித்த 'அழகான' சென்னைத் தெருக்களில், பின்னிரவில் பாட்டுப் பாடும் ஜோதியும் சேர்மக்கனியும், அப்படியே உதயம் திரையரங்கம் நடைபாதையோரம் அன்று இரவுப் பொழுதை உறங்கிக் கழிக்க, இடம் தேடுகிறார்கள்...! வேறு போக்கிடமில்லாத ஜீவன்கள். நல்ல முறையில் விடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் படுக்க, அடுத்த சில மணி நேரங்களில் அவர்கள் வாழ்க்கையை சிதைத்துப் போடுகிறது அந்த கோர விபத்து! மருத்துவமனையில் கிழிந்த துணியாய் அந்த இருவரும் கிடக்கிறார்கள். தொடர்ந்து, ஜோதியின் பார்வையில் காட்சிகள் பின்னோக்கி செல்கிறது.

தமிழகத்தின் தென் எல்லைப் பகுதியான நெல்லை, தூத்துக்குடி பகுதிகளில் தேரிக் காடுகளில் விளையாடி மகிழும் அந்த பன்னிரெண்டாம் வகுப்பு மாணவனின் வாழ்க்கை, தந்தை ஒரு ஆளில்லா ரயில் 'லெவல் கிராஸ்' விபத்தில் அகால மரணமடைந்ததும், தடுமாறி வழிமாறிப் போகிறது. பள்ளியிலேயே முதலாவதாகத் தேறியும், சென்னை ரங்கநாதன் தெருவில் உள்ள ஒரு பெரிய்ய்ய கடையில் வேலைக்கு சேரத்தான் அவனுக்கு கொடுப்பினை இருக்கிறது. கூடவே அவனது நண்பனும் புறப்பட்டு வந்து அந்த உழைப்பாளர் சந்தையில் ஐக்கியமாகிறான். வாழ வழியற்ற அத்தனை மனிதர்களின் சங்கமமாகத் திகழ்கிறது அந்த கடையிருக்கும் அங்காடித் தெரு. பெரிய கடையில் வேலைக்குச் சேர்கிறோம் என்று கனவோடு வந்தவனுக்கு, கடையின் பிரமாண்டத்துக்குப் பின்னே இருக்கும் கோர முகம் திடுக்கிட வைக்கிறது. ஆடு மாடுகளிலும் கேவலமாக கடை முதலாளியும் அவனது எடுபிடி மேலாளரும் தொழிலாளர்களை நடத்தும் விதம் கோரமானது. ஒருவேளை சாப்பாட்டுக்காக கழிப்பறையை விட கேவலமான ஒரு கூடத்தில் அடித்துக் கொள்ளும் அவலம், இரவில் ஒருவர் மேல் ஒருவர் படுத்து உறங்க, வெளியில் கம்புடன் காவலாளி நிற்கும் சிறை வாழ்க்கை... விட்டுப் போய்விடலாம்தான்... ஆனாலும், கிராமத்தின் வறுமை, அம்மா தங்கைகளின் வாழ்க்கையை நினைத்து கொடுமைகளை ஜீரணிக்கப் பழகிக் கொள்கிறார்கள்.

அந்த சிறைச்சாலைக்குள் தட்டுத்தடுமாறி நடைபோட முயலும் ஜோதிக்கு சின்ன ஆறுதலாக வருகிறாள் சேர்மக்கனி. ஆரம்பத்தில் சின்னச்சின்ன சண்டை. அவள் படும் பாடுகளைப் புரிந்த பின் தன் தோளை ஆதரவாகத் தர முன்வருகிறான். இரண்டு ஆதரவில்லாத கொடிகள் ஒன்றையொன்று பற்றிக் கொள்வது போன்ற நிஜமான, வலிகள் புரிந்த நேசம். ஆனால் கடைக்கார அண்ணாச்சிக்கு இந்த காதல் தெரிந்துவிட, சித்திரவதையின் உச்சத்தை அனுபவிக்கிறார்கள், இருவரும். பிறகு போராடி வெளியேறுகிறார்கள். இனி சுய முயற்சியால் வாழலாம் என்ற முடிவோடு, முதல் நாளிரவை சென்னையின் நடைபாதையில் கழிக்க முயல, மாநகரின் கோர முகம் அவர்களை தூங்கவிடாமல் விரட்டுகிறது. மறுநாள்தான், படத்தின் ஆரம்பத்தில் வரும் அந்த கோர விபத்து. அதிலிருந்து மீண்டு, அங்காடித் தெருவுக்குள்ளேயே ஒரு நடைபாதை கடையைத் தொடங்கி வியாபாரம் செய்கிறார்கள். அப்பொழுது, கேமரா மேலே சென்று அங்காடித் தெருவினை முழுமையாகக் காட்ட, தேரிக்காட்டில் இருந்து புதிதாக வரும் இன்னொரு குழு மாணவர்கள், அந்த பிரமாண்டக் கடைக்குள் வேலைக்குச் சேர கனவுகளுடன் சென்று கொண்டிருக்கிறார்கள்.

நடிகர்கள் மகேஷ், அஞ்சலி, பிளாக் பாண்டி, ஏ.வெங்கடேஷ், பழ.கருப்பையா என அனைவருமே பிரமாதப் படுத்தியிருக்கிறார்கள். கருங்காலி சூப்பர்வைசராக நடித்திருக்கிறார் இயக்குநர் வெங்கடேசன். பார்வையாளனிடம் நிறைய வெறுப்பைச் சம்பாதிக்கும் பாத்திரம். 'அண்ணாச்சியாக' பழ.கருப்பையா. சர்ச்சையான அந்த பாத்திரத்திற்குள் தைரியமாகப் பொருந்தியிருக்கிறார். பழ.கருப்பையா உண்மையிலே கடை முதலாளியோ என்று கேட்கும் அளவு மகா எதார்த்தமான நடிப்பு. நடிகை சிநேகா, நடிகையாகவே வருகிறார். சம்பந்தப்பட்ட நிறுவனம் எது என்பது பல காட்சிகளில் நிறுவப்பட்டாலும் சிநேகா, "எடுத்துக்கோ.. எடுத்துக்கோ" என்று விளம்பர மாடலாக நடிப்பதின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி அது நிரூபணமாகிறது. இவர்களைத் தவிர, பெரும்பாலானவர்கள் புதுமுகங்கள். அவர்களும் அருமையான பங்களிப்பைச் செய்துள்ளனர். இறுதிப் பகுதியில் நாயகியின் தந்தையாக வரும் கவிஞர் விக்கிரமாதித்யன் சொற்ப நேரமே வந்தாலும் நெகிழ்ச்சியடைய வைத்திருக்கிறார்.

சேர்மக்கனியாக வரும் அஞ்சலி அத்தனை தத்ரூபமாகச் செய்துள்ளார். சொந்தக் குரலில் 'டப்பிங்' பேசியிருப்பது அவருக்கு இன்னும் அழகு சேர்த்துள்ளது. சந்தோஷம், கோபம், துயரம் எல்லாம் வாழ்வின் தருணங்களாய் அப்படியே அவரிடம் வெளிப்பட்டு இருக்கின்றன. உதடுகளைப் பிதுக்கியபடி, கண்களில் வழிந்தோடும் மென்சோகத்தோடு, 'நெசமாத்தான் சொல்றியா' என்று 'கற்றது தமிழ்' படத்திலேயே உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர் அஞ்சலி. அடுத்ததாக, அவர் தவறான படங்களை தெரிவு செய்தபோது பலரும் ரொம்பவே வருத்தப்பட்டிருக்கிறார்கள்... இத்தனை அருமையான நடிகை வீணாகப் போகிறாரே என்று. அதை இந்தப் படத்தில் நிவர்த்தி செய்து விட்டார், அஞ்சலி. ஜோதியோடு வம்பிழுப்பது, காதலில் பொய்க்கோபம் காட்டுவது, காதலன் தன் மீது நம்பிக்கை இழந்து விட்டானே என்று கோபம் கொள்வது, அடுத்து நாம் என்ன செய்வது என்று குழம்பி தவிக்கும் இறுதி காட்சி என.. இது அஞ்சலிக்கான படம்.

ஜோதியாக வரும் மகேஷை புதுமுகம் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். பக்கத்து வீட்டுப் பையன் போல மனதில் ஒட்டிக் கொள்கிறார். ரொம்ப மிகையான நடிப்பு என்றில்லாமல் பாத்திரத்தை உள்வாங்கி செய்துள்ளார். தனது வேலை போய் விடுமோ என்ற பயத்தில் மேலாளரின் காலை கட்டிக்கொண்டு அழும் காட்சி... ஒரு சோறு பதம்.

ரிச்சர்டின் ஒளிப்பதிவு, ஸ்ரீகர்பிரசாத்தின் எடிட்டிங் அனைத்துமே சிறப்பாக உள்ளது. எழுத்தாளர் ஜெயமோகனின் திருநெல்வேலி வட்டாரவழக்கு வசனங்கள் இன்னொரு பலம். ஜி.வி.பிரகாஷும் விஜய் ஆண்டனியும் இயக்குநருக்கு வலதுகரம் மாதிரி கைகொடுத்துள்ளார். 'அவள் அப்படி ஒன்றும் அழகில்லை', 'உயிர் உன்னோடுதான்' ஆகிய இரண்டு பாடல்களும் அவை படமாக்கப் பட்டு இருக்கும் விதமும் அருமை. விஜய் ஆண்டனியின் பின்னணி இசை மற்றொரு பலம்.

இயக்குநர் வசந்தபாலன் பற்றி பேசத் தொடங்குவதற்கு முன்னால், முதலில் அவருக்கு ஓர் அழுத்தமான கை குலுக்கள். ஒரு புலனாய்வு பத்திரிகையாளன் செய்யும் வேலையை, இப்படத்தில் செய்திருக்கிறார் வசந்தபாலன். முதலாளித்துவமும் அதிகாரமும் அதன் பரிவாரங்களும் கைகோர்த்துக் கொண்டு எளிய மனிதர்களின் உழைப்பையும் வாழ்க்கையையும் சுரண்டிக் கொழுப்பதை தைரியமாக அப்பட்டமாக சித்தரித்திருக்கிறார். பல நுட்பமான காட்சிகள்... சென்னை கடைக்கு வேலைக்கு ஆள் சேர்க்க நெல்லைப் பகுதிக்கு வருகிறார்கள். அங்கே இருப்பவர் சொல்கிறார்: "நம்ம சாதிப் பயலா... அதுவும் அப்பா அம்மா இல்லாதவனா எடுங்கப்பா... அப்பத்தான் நாம என்ன பண்ணினாலும் சரி சரின்னுட்டு நாம்ம சொல்றதக் கேட்டுக்கிட்டு இருப்பான்...", வேலையில் தவறு செய்த பெண்ணை மறைவான இடத்தில் வைத்து அடிக்கிறான் மேலாளர். திரும்பி வரும் நாயக-யிடம், "என்ன பண்ணின... உன்னைய வேலைய விட்டுத் தூக்காம இருக்கிறான்?" என்கிற நாயகன-ின் எகத்தாளமான கேள்விக்கு, அவள் சொல்கிறாள்: "அவசியம் தெரியணுமா? என் மாரப் புடிச்சு பெசஞ்சான்... ஒண்ணும் சொல்லாம இருந்தேன்... விட்டுட்டான்." வேலைக்குப் போகும் பெண்களின் மீதான பாலியல் வன்முறையை அப்பட்டமாக சொல்லும் காட்சி இது. இரவு நேரங்களில் காட்டப்படும் ரங்கநாதன் தெருவில், பணியாளர்களைப் போலவே அட்டைக்குப்பைகளும் அதன் உபயோகம் முடிந்தவுடன் வெளியே எறியப்படுகின்றன. சில சொற்ப காட்சிகளே வந்து போகும் நாயகனின் தந்தையிலிருந்து துணிக்கடையில் பணிபுரியும் பலரின் முகங்கள் அசலான கிராமிய மணத்துடன் பொருந்திப் போவது நிறைவாக இருக்கிறது.



**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

சில குறைகள் இல்லாமல் இல்லை... படத்தில் முக்கிய இடங்களில் சித்தரிப்புகளும் நடிப்பும் ஒருவித நாடகத்தன்மையோடு வந்திருக்கின்றன என்பதையும் சொல்லத்தான் வேண்டும். எல்லோரும் கத்தி கத்திப் பேசுகிறார்கள். வார்த்தைகளின் அழுத்தம் அடர்த்தியாக இருக்கவில்லை. நாயகன் - வில்லன் இரட்டை எதிர்மறையாகப் பார்க்கும் காட்சிகள். படத்தில் வரும் அத்தனை ஏழைகளும் நல்லவர்களாகவும் பணக்காரர்கள் அத்தனை பேரும் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இடைவேளைக்குப் பிறகு, படம் மிக நிதானமாக நகர்கிறது. ஆனாலும், குறைவான சமரசங்களுடன் ஒரு நிறைவான படத்தைத் தந்ததற்கான இயக்குநர் வசந்தபாலனை பாரட்டத்தான் வேண்டும். சவாலான ஒரு கதைக் களனை மிகுந்த அக்கறையோடும் கலை உணர்வோடும் அனைவரும் உணரும் வண்ணமும் சாதனையாக்கி இருக்கிறார். 'அங்காடித் தெரு' பார்த்த பிறகு, அதுபோன்ற ஒரு தெருவுக்குள் அல்லது பிரமாண்ட கடைக்குள் நுழையும் மனிதன் முழுக்க முழுக்க தனது முந்தைய மனநிலையில் இருந்து முற்றிலும் மாறான மாறுதலோடே நடந்து கொள்ள முடியும். அதுதான் இப்படத்தின் வெற்றியும்கூட.

அங்காடித் தெரு - தமிழ் திரைப்பட உலகில் அபூர்வமாக மலரும் குறிஞ்சி மலர்.

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# மே 02, 2010 இல் நாடு கடந்த...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

| | |
|---|---|
| Downtown | Willowdale |
| Markham | Aurora |
| York | Woodbridge |
| Unionville | Newmarket |
| Beaches | Concord |
| Stouffville | Northen Parts of Ontario |
| Toronto North | Thornhill |
| Richmondhill | Downsview |
| Maple | Oakridges |

**கிழக்கு ஒன்ராறியோ பின்வரும் இடங்களை உள்ளடக்கியுள்ளது.**

| | |
|---|---|
| Scarborough | Pickering |
| Ajax | Whitby |
| Oshawa | |

Eastern Parts of Ontario up to Cornwall

**மேற்கு ஒன்ராறியோ பின்வரும் இடங்களை உள்ளடக்கியுள்ளது.**

| | |
|---|---|
| Etobicoke | Rexdale |
| Brampton | Mississauga |
| Hamilton | Niagara Region |

Western Parts of Ontario up to Windsor

கிழக்கு கனடா பின்வரும் இடங்களை உள்ளடக்கியுள்ளது. இங்கு தெரிவு செய்யப்படும் 5 உறுப்பினர்களும் பின்வரும் இடங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

Cornwall மற்றும் Ottawa 1 உறுப்பினர். கியூபெக் மாகாணம் 3 உறுப்பினர்கள், Newfoundland, New Brunswick மற்றும் Nova Scotia உட்பட கியூபெக் மாகணத்திற்கு கிழக்கில் உள்ள எல்லா மாகாணங்களும் 1 உறுப்பினர்.

மேற்கு கனடா பின்வரும் இடங்களை உள்ளடக்கியுள்ளது. இங்கு தெரிவு செய்யப்படும் 5 உறுப்பினர்களும் பின்வரும் இடங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். British Colombia மாகாணம் - 2 உறுப்பினர்கள், Alberta மாகாணமும் North West Territories - 1 உறுப்பினர், Saskatchewan மாகாணம் - 1 உறுப்பினர், Manitoba மாகாணம் - 1 உறுப்பினர்.

கனடாவில் நடைபெறும் தேர்தலில் முதன்மைத்தேர்தல் ஆணையாளர் Dr. Aseleigh Molloy Ph.D. இருக்கிறார். இவருக்கு துணைத்தேர்தல் ஆணையாளர்களாக Mr. Spiros Papathanskis உம் Dr. சிவநாயகமூர்த்தியும் இருக்கிறார்கள். இதைவிட மேற்கூறிய 5 தேர்தல் தொகுதிகளுக்கும் ஐவர் துணை தேர்தல் அதிகாரிகளாக பணியாற்றுகிறார்கள்.

| தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் | | நியமிக்கப்படும் உறுப்பினர்கள் | |
|---|---|---|---|
| கனடா | 25 | இந்தியா | 5 |
| பிரித்தானியா | 20 | மலேசியா | 3 |
| பிரான்ஸ் | 10 | மத்தியகிழக்கு | 2 |
| சுவிற்சலாந்து | 10 | தென்னாபிரிக்கா | 2 |
| ஜேர்மனி | 10 | சிங்கப்பூர் | 2 |
| அமெரிக்கா | 10 | மொறிசியஸ் | 1 |
| அவுஸ்ரேலியா | 10 | ஏனைய ஆசிய நாடுகள் | 1 |
| நோர்வே | 3 | பசுபிக் தீவுகள் | 1 |
| டென்மார்க் | 3 | கரிபியன் உட்பட தென்னமெரிக்கா | 1 |
| இத்தாலி | 3 | ஏனையஆபிரிக்ககண்டநாடுகள் | 1 |
| தென்னாபிரிக்கா | 3 | ஏனையஐரோப்பியகண்டநாடுகள் | 1 |
| நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பேக் | 3 | **மொத்தம்** | **20** |
| நியூசிலாந்து | 2 | | |
| சுவீடன் | 1 | | |
| பின்லாந்து | 1 | | |
| அயர்லாந்து | 1 | | |
| **மொத்தம்** | **115** | | |

# புகை பிடித்தலை நிறுத்த வேண்டுமென அமெரிக்க அதிபருக்கு குடும்ப வைத்தியர் எச்சரிக்கை

கடந்த யூலை மாதம் வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு தாம் புகைபிடிக்கும் பழக்கம் ஏற்கனவே இருப்பதாக ஏற்றுகொண்ட அமெரிக்க அதிபர் திரு. பராக் ஒபாமா அவர்களுக்கு அவரது புகைபிடிக்கும் பழக்கத்தினை உடனடியாக நிறுத்த வேண்டுமென அவரை பரிசோதித்த அவரது குடும்ப வைத்தியர் டாக்டர் ஜெவ்ரி குக்ல்மண் (Dr. Jeffery Kuhlman) அறிவுறுத்தியிருந்ததாக தெரிவித்திருந்தார்.

# மறுக்கப்பட்ட...

14ஆம் பக்கத்தொடர்ச்சி



கொடுத்திருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி' என்னும் சொல்வழக்கு தமிழகத்தில் உண்டு. நளினி விவகாரத்தில், நீதி என்பதே தாமதிக்கப்பட்டதாயும் மறுக்கப்பட்டதாயும்தான் உள்ளது என்பது கொடும்நிஜம்.

# நீரிழிவும்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

கிழங்கு வகைகளை தவிர்ப்பது நன்மையாகும். உ + ம் (உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளிக்கிழங்கு)
மேல்கூறிய மணிச்சம்பா பச்சை அரிசியை சாதம் ஆக்கும்பொழுது ஓரளவு நீர்விட்டு அவிந்தபின் நீரை வடிக்காமல் பாவிப்பதே சிறந்தாகும். மற்றும் கைக்குத்தரிசியும் (தவிடு நீக்காதது) சிறப்புடையதாகும்.

உடல் வலிமை பெற்று இருப்பதற்கு புரோட்டின், காபோகைதிரேட், கொழுப்பு பொருட்களும் பாவனையில் இருக்க வேண்டும். அவற்றை பின்வருமாறு கவனிக்கவும்.

| காபோகைதிரரேட் (மாச்சத்து) | கொழுப்பு | புரதம் |
|---|---|---|
| கோதுமை | தாவர எண்ணெய் | பால் (அடை நீங்கியது) |
| கைத்தரிசி | சோயா எண்ணெய் | மோர் |
| உழுந்து சம்பா | பால் | முட்டை |
| பயறு கேழ்வரகு | நெய் | மீன் |
| துவரை (நார்ச்சத்துள்ளவை) | கோழி இறைச்சி | இறைச்சி |

உப்பு அதிகம் சேர்ப்பதை தவிர்க்கவும். இனிப்புச்சுவையும், இனிப்புச்சக்தியும் பெற சீனி சர்க்கரை சேர்க்காமல் தற்காலத்தில் நீரழிவு நோய்க்கு பாவிப்பதற்கு சுவையுடன் தீங்கை விளைவிக்காமல் பாவிக்கக்கூடியவை தயாரிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. எனவே, நமது உடம்பிற்கு சீனிச்சத்து தீங்கை விளைவிக்கும். ஆனால், செயற்கை இனிப்பாகத் தயாரிக்கப்பட்டவை தீங்கை விளைவிக்காது ஆரம்பத்தில் திருப்தியடை யாமல் இருந்தாலும் நாளடைவில் நற்பயன் தரும். மருந்துக்கடைகளில் தாரளமாகப் பெற முடியும். எதற்கும் தங்கள் வைத்தியர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் அல்லது அதைப்பற்றிய விபரம் கூறிக்கொள்வார்கள்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் நாளாந்தம் பாவிக்கக்கூடிய உணவுகளின் விபரம்.
காலையில்: தேனீர் அல்லது ஆடை நீங்கிய பால் சீனி தவிர்க்கவும். சோயாப்பால் நன்மை பயக்கும். காலை உணவாக கீழ் குறிப்பிடுவதில் ஒரு வகை, 1. தவிட்டுப்பாண்.
2. தவிட்டு அரிசிமா, குரக்கன் மா, ஆட்டா மா என்பவற்றில் தயாரிக்கப்பட்ட இடியப்பம், அல்லது அப்பம், பிட்டு, ரொட்டி, ஆடை நீங்கிய பால் சொதி, கொலஸ்ரோல் அற்ற மாஜரீன்.
3. பயறு, கௌப்பி, கடலை
4. புரத வகையில் முட்டை ஒரு கிழமைக்கு ஒன்று மஞ்சள் கருவுடன் பாவிக்கலாம். ஆனால், வெள்ளைக்கரு வேண்டியளவு எடுக்கலாம். மீன் வகையிரல் திரளி, விளை, சுறா, இறைச்சியில் தோல் நீங்கிய கோழி, சூப்பு, அல்லது கறி பாவிக்கலாம். சோயாவும் கறியாக்கிப் பாவிக்கலாம். பழங்களில் கதலி வாழைப்பழம், பப்பாப்பழம், தோல் நீக்காமல் அப்பிள், அன்னாசி போன்றவற்றில் ஏதாவது ஒன்று நன்மை பயக்கும்.

மதியத்திற்கு முன் தாகம் இருப்பின் மோர், அல்லது தேசிப்புளிச்சாற்றில் நீர் கலந்து பாவித்தல் உத்தமம்.
மதிய உணவை எடுத்துக் கொண்டால் மணிச்சம்பா அரிசியில் கஞ்சி வடிக்காமல் சாதம். அடுத்து கைகுத்தரிசி தவிடு நீங்காததாக இருக்க வேண்டும் அல்லது நூாடில்ஸ், சப்பாத்தி முன்கூறியபடி கறிவகை, கீரை, காய்கறி வகை போன்றவற்றையும் உணவுடன் எடுத்தல் வேண்டும். இடையிடையே வாழைத்தண்டுக்கறியும் பாவித்துக் கொள்ளலாம். இது உறுப்பில் கற்கள் காணப்படின் அதன் வலுவைக் குறைக்கும். தேங்காய் பால் எடுக்க விரும்பினால் முதல் பாலை நீக்கி இரண்டாம் முறையுள்ள பாலைப் பாவிக்கலாம். அல்லது சோயாப் பால், ஆடை நீக்கிய பால் நன்று.
இரவு உணவு காலையில் எடுக்கும் உணவைப் பாவிக்கலாம். பால் பாவிக்க விரும்பினால் சோயாப்பால், ஆடை நீக்கிய பசும்பால், கொழுப்பு நீக்கிய அங்கர் மா போன்றவை கெடுதலற்றவையாகும்.

மூலிகை வர்க்கத்தில் சாலச்சிறந்தவையாக கீழ் வருபவை நன்கு பயனளிக்க வல்லவை யாகும். ஏதாவதொன்றைப் பாவித்தல்.
1. அறுகம்புல்லை வேருடன் எடுத்து நன்கு சுத்தம் செய்து சாறு பிளிந்து காலை மாலை ஒரு மேசைக்கரண்டி வீதம் பாவித்து வரலாம்.
2. குறிஞ்சாயிலையை துாய்மைப்படுத்தி அதன் சாற்றையும் காலை மாலை ஒரு மேசைக்கரண்டி வீதம் பாவிக்கலாம் அல்லது பிட்டு ஆக்கும்போது மாவுடன் இலையைச் சேர்த்து பாவிக்கலாம்.
3. வேப்பம்பட்டைச் சாயமும் பயன் தரும். காலை மாலை ஒரு மேசைக்கரண்டி வீதம் பாவிக்கலாம்.
4. வெந்தயத்தை ஊற வைத்து அருந்துவதுடன் வெந்தயத்தையும் நன்கு மென்று அத்துடன் ஊறிய நீரையும் பாவிக்கலாம்.
5. கடுக்காய் குடிநீர் செய்து பாவிக்கலாம்.
6. வில்வை இலைச்சாறு, அகத்திச்சாறு, வல்லாரைச்சாறு இதில் ஏதாவது ஒன்றை எடுத்து வரலாம்.
7. அருள் நெல்லிச்சாறும் நன்மை பயக்கும்.
8. மோருடன் கருவேப்பிலை, மல்லி, புதினா, இஞ்சி, சின்ன வெங்காயம் இவற்றை துப்பரவு செய்து கழுவி நன்கு துவைத்துக் கலந்து பாவித்து வரலாம். உப்பு குறைவாக பாவிக்கவும். மற்றும் யோகாசனம், தேகப்பயிற்சி, நடைப்பயிற்சி, துவிச்சக்கர வண்டி ஓட்டம் என்பவற்றை வயதிற்கும் உடல் நிலைக்கும் ஏற்ப குறிக்கப்பட்ட நேரம் கையாண்டு வரவேண்டும். யோகாசன முறைகளுக்கு உரியவர்களைக் கண்டு அவர்களின் செயல்படி செய்வது மிக நன்று.
இதில் கூறியவை பாவிக்குமுன் உரிய வைத்தியர்களின் ஆலோசனை பெற்று கைக்கொள்வது மிக நன்மை பயக்கும்.

"நெல்லிக்காய்க்குப் பித்தம் நீங்கும் அதன் புளிப்பால்
செல்லுமே வாதம் அதிற்சேர்துவரால்-சொல்லும் ஐயம்
ஓடும் இதைச்சித்தத்தில் உண்ண அனலுடனே
கூடு பிரமேகமும் போங்கூறு"
என தேரையாரும் வர்ணிக்கின்றார்.


Niru
நிரு
பிராண்ட்
Niru BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
Niru BRAND®

# அந்தச் சில கணங்கள்...

"வசந்தம் பாடி வர, வைகை ஓடி வர, இளமை கூடி வர, இனிமை தேடி வர, ஆராதனை செய்யட்டுமா? நீரோடையில் (Beach?) நீந்தட்டுமா?" ("ரயில் பயணங்களில்" வரும் பாடல்!) என்று பல பேர் "இலை துளிர் காலப் பாடல்" ஒன்றுடன், சந்தோசமாக வலம் வர ஆரம்பித்திருப்பீர்கள்! கனடாவில் குளிர் காலம் முடிந்து விட்டாலே, ஏதோ வாழ்க்கையே சுலபமாகி விட்டது போன்ற ஒரு மாயை ஏற்படுவது வழக்கமாகி விட்டது. இதைச் சிலரிடம் சொன்னால் "இதோ, பார்த்துக் கொண்டிருக்க இப்ப வந்திடும் குளிர் காலம்", என்று "எதிர்காலத்தை முன் மொழிவார்கள்!" (அவர்களோடு இப்போதைக்குப் பேச்சுக் கொடுக்காதீர்கள்!)



'Remember Me' என்ற ஆங்கிலப் படம் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் போஸ்டரில் அழகான வரிகள் - 'Live in the Moments', (கிடைக்கும்) கணங்களில் வாழ்ந்திடுங்கள்! - அத்தோடு எப்போதோ, எங்கேயோ பார்த்த ஒரு புகைப்படமும் ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே.... ஒரு குட்டிப் பாலஸ்தீனியப் பையன் ஒருவன் "கொடூரமும், வன்முறையும்" நிரம்பிய ஒரு இஸ்ரேலிய டாங்கி மீது "நின்று, நிமிர்ந்து" கல் விட்டெறி கிறான்!
அது "அவனுடைய கணம்!"
இன்னுமொரு அழகான வரி -'This Moment is Your Life!" - "இந்தக் கணம் தான் உங்கள் வாழ்க்கை!" இப்படியான "அனுபவங்கள்" நம் வாழ்கையில் நடந்து இருக்கிறதா? இனி நடக்குமா, இல்லை நாம் தான் அந்தக் கணங்களைத் தேடிப் போக வேண்டுமா? (அதற்காக உங்களுக்கு "ரொம்பப் பிடித்த(!?) நபர்" மேல் கல் எல்லாம் எடுத்து வீசாதீர்கள்!)

ஒரு குற்றத்திற்காக, 6 வருட சிறை வாசம் இருக்கும் இளம் குற்றவாளி (வயது 18) மலிக், தனக்குச் சிறைக்குள்ளேயே கிடைக்கும் "கணங்களைப்" பற்றிக் கொண்டு சட, சடவென்று "தாதா லெவெலுக்கு" வளர்ந்து வரும் படம் தான் "The Prophet' என்ற French மொழிப் படம். 2010 Oscar, Foreign Film Category இல், France நாட்டிலிருந்து போட்டியிட்ட படம். "செய் அல்லது செத்து மடி" என்று, புதிய குற்றவாளியான மலிக்குக்கு, சிறைக்குள்ளேயே இயங்கி வரும் "தாதா" உலகம் கட்டளை இட, அவன் செய்கிறான், கொலை கூட! ஜெயில் உள்ளேயே இயங்கும் "குற்றவாளிகளின் இன்னொரு உலகம்", அவர்களின் வித்தியாசமான சட்டங்கள், விந்தையான தண்டனைகள் என படம் முழுவதும் நிறைய ரத்தம், நிறைய வன்முறை! சில வருடங்களுக்கு முன்னர் படித்த ஷோபாசக்தியின் "ம்" நாவல், நம்மூரில் சிறைகளில் அநியாயமாக வாடிய எம் மக்கள் பற்றிய ரத்தப் பதிவு. (ஒரு கட்டாய வாசிப்பு!) அதிலிருந்து சில வரிகள் நன்றிகளுடன்....

"நாங்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஊர் பகுதியில் நாகபடையைச் சேர்ந்த ஏழெட்டு இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சொல்லி வைத்துத் தோள் வரை முடி வளர்த்திருந்தார்கள். அவர்களுக்கு சிறையும் சிறைக் காவலர்களும் சிறை விதிகளும் ஒரு பொருட்டேயல்ல. அவர்களில் எவரும் சிரித்துக் கூட நான் பார்த்ததில்லை. நான் அவர்களில் ஒருவனை ஒரு தடவை பார்த்துச் சிரித்த போது "கொக்கட்டிச் சோலையில் 200 பேர் செத்ததன் பின்பாகவும் உன்னால் சிரிக்க முடிகிறதா?" என்று அவன் என்னை வெறித்துப் பார்த்தான். அவர்கள் தாங்கள் விறைப்பாக இருப்பதாக நாடகம் ஆடினார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. இந்த விறைப்புக்காக அவர்கள் சிறைக்காவலர்களிடம் "நேவிள்" அடி வாங்கினார்கள். பத்தடி வாங்கினால் ஒரு அடியாவது திருப்பி அடித்தார்கள்."

The Prophet திரைப்படத்தின் இறுதிக்காட்சி - நாயகன் மலிக் விடுதலை ஆகி வெளியே வர, (கதைப் படி இப்போது அவன் ஒரு முற்று முழுதான Mafia Leader!) சர், சர்... என்று விலை உயர்ந்த கார்களும் SUV களும் அவனை ஏற்றிக் கொள்ள வந்து நிற்க, நாசூக்காக அவற்றைத் தவிர்த்து நேராக அவனுக்காக வெளியே காத்திருக்கும் இறந்து போன அவன் உற்ற நண்பனின் மனைவி, குழந்தை நோக்கி நடந்து போய் (வருங்கால காதலி/மனைவி?), "எப்படி வந்தீர்கள், பஸ் மூலமா?", என்று அன்புடன் விசாரித்து, "கொஞ்சம் காலாற நடக்கலாம்" என்று நடக்க, பின்னே ஒரு "மரியாதையான" தொலைவில் அந்த விலை உயர்ந்த கார்களும் SUV களும் அவர்களைப் பின் தொடர, "கொஞ்சம் எங்களைத் தனியே விடுங்களேன்", என்று கையால் நண்பனின் மனைவிக்குத் தெரியாமல் மலிக் அந்த வாகனங்களை நோக்கி Signal செய்வதில், நிறையக் "கவிதை" தொக்கி நிற்கிறது!

**- கிறிஸ்ரி-**

2010 Oscar Foreign Film Category இல், German நாட்டிலிருந்து போட்டியிட்ட படம் "The White Ribbon". பிரான்ஸ் நாட்டின் Cannes Film Festival விருது, மற்றும் Golden Globe விருதுகளைத் தட்டிக்கொண்டு, Oscar விருதைக் கோட்டை விட்ட "கருப்பு வெள்ளைப்" படம். ஆனால், அது படத்தின் Mood இக்கு அற்புதமாகப் பொருந்தி வருகிறது. முதலாவது உலக போர் ஆரம்பிக்கும் முன் நடப்பதாகக் கதை செல்கிறது. ஒரே ஒரு கிராமம் அங்கு வாழும் சில குடும்பங்கள். மெதுவாக, மிக மெதுவாக ஆரம்பிக்கும் வன்முறைகள்! திரும்ப எதிர்க்க முடியாத அப்பாவிகள், மற்றும் கொடியவர்கள் என வன்முறை பலரையும் பதம் பார்க்கிறது, கிராமத்துக்குள்!

மீண்டும் ஷோபாசக்தியின் "ம்" நாவலில் இருந்து சில வரிகள்....
"ஆனையிறவிலும் பனாகொடையிலும் பெரிய வன் தான் அடிப்பான். இங்கே வருகிறவன் போகிறவன் எல்லாம் என்னில் நொட்டி விட்டுப் போகிறான். இதைத்தான் சுவாமி அதிகாரத்தைப் பரவலாக் குவது என்று சொல்லுவது", இப்படி பக்கிரி என்னிடம் அந்த நரகத்தில் (சிறையில்) நின்றும் பகிடி விட்டார். அவர்கள் திடீரென்று இரவில் வந்து ஒரு கைதியை நடத்திக் கூட்டிச் செல்வார்கள். அப்படிக் கூட்டிச் சென்ற எந்தக் கைதியும் திரும்பி வரும்போது நடந்து வருவது கிடையாது. தவழ்ந்து வருவான். அல்லது அவனைக் கூட்டி அள்ளிக் கொண்டு வந்து கொட்டுவார்கள்.

The White Ribbon படத்தில், நடக்கும் எல்லா சம்பவங்களும், இதைத் தொடர்ந்து வேறு ஏதோ நடக்கப் போகிறதோ என அச்சமூட்டும்! வன்முறை, அன்பான அமைதியான மக்களைத் தலை கீழாக மாற்றிப்போடுகிறது. எல்லோருமே மற்றவர்கள் மேல் சந்தேகப்படுகிறார்கள்! வன்முறைகளின் வேர்கள் குழப்பமாகத் தெரிய ஆரம்பிக்கிறது.

"இவர்கள் கூட இப்படிச் செய்வார்களா? இவர்கள் தானா? என்ற பல்வேறு கேள்விகளுடன் படம் முடிகிறது.

மேலே நான் குறிப்பிட்ட ஷோபாசக்தியின் "ம்" நாவலின் முதல் பதிப்பு வெளியானது, அக்டோபர் 2004. அதில் அவர் நாவல் ஆரம்பிக்கும் முன் பின்வரும் வரிகளை மேற்கோள் காட்டி இருந்தார்....

"எகிப்திலே பிரேதக் குழிகள் இல்லை என்றா வனாந்தரத்திலே
சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்?"
- யாத்திராகமம் - 14:11

சில தினங்களுக்கு முன் மீண்டும் இதைப் படித்த போது, பல "கணங்களுக்கு" ரத்தம் சில்லிட்டது!

## வன்னி எலி



"தமிழியம் சுபாஸ்", இவர் பெயரை இப்போது எல்லோரும் உச்சரிக்கிறார்கள்! இவர் இணையத்தின் 'You Tube" களில் பேசுவதை விட, (மிகக் குறைவாகவே இவர் பேசுகிறார்!) மற்றவர்கள் இவரைப் பற்றி, இவர் எடுத்துள்ள 10 நிமிடக் குறும்படம் பற்றி நிறையப் பேசுகிறார்கள்!

"வன்னி எலி" இவர் எடுத்த 10 நிமிடக் குறும் படம். இது பல "மணிக்கணக்காக" நடக்கும் சர்வதேச திரைப்பட விழாக்களில் விருதுகளை அள்ளிக்கொள்கிறது.

வன்னிக் காட்டிலிருந்து பயணிக்கும் ஒரு ஜோடி எலிகள், இடம் பெயர்ந்த மக்களுக்கான முகாம் ஒன்றில் வந்து மாட்டிக்கொள்கின்றன. அங்கு எல்லோரதும் "ஆடுகளமாகிப்" போன அந்த "ஊமை ஜனங்களின்" மீது, தொடரும் துன்பங்களின் "வாய் பேச முடியாத சாட்சிகள்" ஆக அவை மாறுகின்றன. முடிவில் அந்த இணை பிரியா ஜோடி எலிக்கு என்ன நடந்தது?

The Journey of two Mice, from the wood of Vanni to the IDP camp, witness the unspoken Truth! What happened to the inseparable couple?

எங்கு தேடியும் Trailer மட்டுமே பார்க்கக் கிடைத்தது. ஆனால், அந்த இரண்டு சொச்ச நிமிடங்களுக்குள்ளேயே இதயம் தொடுகிறது குறும்படம் (Trailer!) போர்ச் சூழல் மனிதர்களையே மிருகங்களாக மாற்றிவிடும் காலத்தில், பிராணிகளை வைத்து மனிதர்களின் கதை (வதை!) சொல்ல வந்திருப்பது "மாத்தி யோசி" technique!

கனடாவில் எட்டாவது சர்வதேசத் தமிழ்த் திரைப்பட விழா, June 12, 2010 என்று விளம்பரத்தில் "விளம்பரப்படுத்தப்படுகிறது"! எலிகளைக் கனடாப் பக்கம் அனுப்புவீர்களா, சுபாஸ்?




எட்டாவது
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

INDEPENDENT ART FILM SOCIETY

June 12, 2010
Scarborough Civic Ctr.
11a.m – 6p.m

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, அமெரிக்கா, கனடா

416-450-6833, 416-804-3433, www.iafstamil.com

# புதிய தலைமுறைக்கு...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இசையில் அமைந்திருந்தாலும் அவைகளை பொருட்காட்சி சாலை கச்சேரிகளுக்கு மட்டும் பாடி வந்தார். கோவில் கச்சேரிகளில் சுத்தமான கர்நாடக இசைதான் பாடி வந்தார். இப்படி இருந்தும் பாகவதருக்கு மற்ற சங்கீத சபாக்களில் வாய்ப்பு வராதது வியப்பான ஒன்று. இத்தனைக்கும் 'பாகவதரின் சங்கீதத்தை கேட்ட பிறகு வேறு எவருடைய சங்கீதமும் எனக்குப் பிடிக்கவில்லை' என்றார் கல்கி. ஒருமுறை உடல் நலமில்லாமல் இருந்தும், பாகவதர் கச்சேரிக்கு வந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாகவதரின் கச்சேரியைக் கேட்டவுடன், பாகவதரின் சங்கீதம் நோய்க்குக் கூட அருமருந்து. அப்படிப்பட்ட உயர்ந்த சங்கீதம் அவருடையது என்றாராம்.

சங்கீத உலகினரின் புறக்கணிப்பையும் கடந்து அனைத்துத் தரப்பினரையும் பாகவதரின் பாடல்கள் கவர்ந்து வெற்றி அடைந்தது. ஜாதிமத பேதமின்றி, பணக்காரர் ஏழை என்ற வித்யாசமின்றி சங்கீதம் தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடின்றி ரசித்துக் கேட்டனர். அதற்குக் காரணம் கேட்கும்படி பாடினார் பாகவதர். தெளிவாக வார்த்தைகளை உச்சரித்தார். பாடல் இயற்றியவரின் மனோநிலையை நன்கு மனதில் கொண்டு ராக லக்ஷணங்களை மிக நேர்த்தியாக எல்லோரும் எளிதில் பாடக்கூடிய வகையில் அவரது இனிமையான குரலில் பாடியது தான். அந்தக் கால இளம் தம்பதியினர்களுக்கு, பாகவதர் பாடிய, 'பேசும் தரமோ காதல் மாயப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை', 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி', 'உலகினில் இன்பம்', 'மானே நான் உன்னை', 'சந்திர சூரியர் போங்கதிர் மாறினும்', 'சற்றேசரிந்தகுழலே', 'உன்னழகைக் காண இரு', 'மாநிட வாழ்வு', 'உன்னைக் கண்டு மயங்காத', 'வதனமே சந்திரபிம்மமோ', 'மன்மத லீலையை' போன்ற பாடல்கள் மிக விருப்பமான பாடல்கள். தம்பதியர்கள் தனிமையில் பாடி இன்புறும் வகையில் அப்பாடல்கள் இருந்தது. இன்றும் இப்பாடல்கள் அதே வசீகரத்துடன் இசை ரசிகர்களை கவர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கால பக்திமான்களின் விருப்பமான பாகவதர் பாடல்கள்: 'சிவபெருமான் கிருபை வேண்டும்', 'பதிபதம் பணிவது', 'பஜனை செய்வாய் மனமே', 'சிதம்பரநாத ஒருநாள் ஒருபொழுதாகிலும்', 'தீனகருணாகரனே', 'மனமே நீ ஈசன் நாமத்தை', 'அம்பா மனம் கனிந்து', 'அன்னையும் தந்தையும் தானே', 'கிருஷ்ணா முகுந்தா முராரே' போன்ற பாகவதரின் பாடல்கள் மேல் இருந்தது. 'ஞானக்கண்', 'சராசரங்கள் வரும் சுழன்றே', 'பூமியில் மானிட', 'சொப்பன வாழ்வில் உனையல்லாமல்', 'மானிட ஜென்மம் மீண்டும் வந்திடுமோ' போன்ற பாடல்கள் வாழ்க்கையின் நிலையில்லாத தன்மையை உணர்த்தி ஞானிகளின் வரவேற்பைப் பெற்றது.

சாதாரண ரசிகர்கள் மட்டுமல்ல பிரபல வித்வான்களும் பாகவதரின் பாடல்களுக்கு விசிறியாக இருந்திருக்கிறார்கள். சாருகேசி ராகத்தில் பாகவதர் பாடிய விதமும் ராகத்தைக் கையாண்ட விதமும் அரியக்குடி, செம்மாங்குடி இவர்களிடம் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. தர்பார் ராகத்தில பாகவதர் பாடிய 'மறைவாய்ப் புதைத்த' என்ற பாட்டு மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் பாராட்டைப் பெற்றது. பாகவதரின் கச்சேரிகளில் அவர் உச்சஸ்தாயியில் பிடிக்கும் பிடிகளுக்கு முசிறி சுப்பிரமண்ய ஐயர் அடிமை. பாகவதரின் பாடல் சிறப்பினைக் கண்ட மதுரை மணிஐயர், "பாகவதர் பாட்டில் மரியாதையும் கௌரமுவம் இருக்கிறது. இவரை இதர சபாக்கள் புறக்கணித்து வருவது வருந்தத்தக்க விஷயம்" என்றார். பாகவதரும் ஜி.என்.பி.யும் பரஸ்பரம் அவர்கள் உதிற்கும் பிர்காக்களுக்கு அடிமை. பாகவதர் ஜி.என்.பி.யையும் ஜி.என்.பி. பாகவதர் கச்சேரியில் முன்வரிசையில் அமர்ந்து தனக்கு விருப்பமான பாடல்களை கச்சேரியில் பாடும் படி சீட்டுக் கொடுத்து கேட்டு அனுப்புவார். ஒரு சிலர் மட்டுமே கேட்டு அனுபவித்து வந்த கர்நாடக சங்கீதத்தை அனைவரும் கேட்டு அனுபவிக்கச் செய்தவர் பாகவதர் தான் என்றார் சித்தூர் சுப்ரமண்யம் பிள்ளை. நாடக, சினிமா, சங்கீத உலகில் பாகவதருக்கு இருந்த முதன்மையை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது என்றார் திருவாட்டி கே.பி.சுந்தரம்பாள்.

பாகவதர் தன்னுடைய இசை குருக்கள் ஆன ஆலந்தூர் வெங்கடேச ஐயர், ஆந்தூர் சகோதரர்கள், பாபநாசம் சிவன் மற்றும் சில இசை வித்வான்கள் இடம் வைத்திருந்த குருபக்தி அளப்பரியது. பாபநாசம் சிவன் உட்காரச் சொன்னால் ஒழிய அவர் முன் பாகவதர் உட்கார்ந்ததுக் கூட இல்லை. பாகவதர் உன்னதமான நிலையில் இருந்த போது நலிந்த நாடக் கம்பெனிகளுக்கு நாடகத்தில் தலைமை தாங்கி பெரிய வசூல் வருவதற்கு உதவியாக இருந்திருக்கிறார். தனக்காக என்று தனியாக பணம் ஏதும் வாங்காமல் இலவசமாக அவர் நடத்திய நாடகம் ஏராளம். பாகவதர் செய்நன்றி மறவாதவர். சிறு வயதில் தான் ஏழ்மையாக இருந்த போது உதவிய பிரமுகர் இல்லங்களில் பிற்காலத்தில் அவர்கள் வீட்டு விசேஷங்களுக்கு இலவசமாக கச்சேரி நடத்தி இருக்கிறார். என்.எஸ்.கே. வீட்டின் புதுமனை புகு விழாவில் மிக அற்புதமாக வயலின் வாசித்த இளம் வித்வானுக்கு தான் போட்டிருந்த வைர மோதிரத்தை அன்பளிப்பாக அளித்தார் பாகவதர். ஆலங்குடி ராமச்சந்திரன் என்ற கடம் வித்வானுக்கு அவர் அளித்த பொருளுதவி மிகப்பெரியது. பழைய நடிகர் டி.ஆர்.மகாலிங்கம் மகன் சுகுமார் திருமணத்தில் பாகவதர் இசைக் கச்சேரி செய்ததற்காக கொடுத்த ரூபாய் ஆயிரமும் ஒரு தங்க பேனாவும் சுகுமாருக்கே கொடுத்து விட்டுப் போனவர் பாகவதர். ஒரு சமயம் கன்னியாகுமரியில் உள்ள மண்டைக்காடு என்னும் இடத்தில் பாகவதரின் கச்சேரி ஏற்பாடாகி இருந்தது. கூட்டம் அலைமோதியதை உத்தேசித்து, கச்சேரி ஏற்பாடு செய்திருந்தவர்களிடம் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு அன்றைய கச்சேரியை இலவசமாகவே செய்தார். வசூல் செய்திருந்தால் பாகவதர் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அன்று பார்த்திருக்கலாம். தர்ம நியாயங்களை பாகவதர் பெரிதும் மதித்தார் என்பதற்கு இது சான்று.

பாகவதரின் இசையால் அவருக்கு மிகவும் நெருங்கிய முஸ்லீம் நண்பர் ஒருவர் தனது இரண்டு மகன்கள் மேல் எழுந்த கோபத்தில் தன்னுடைய சொத்து முழுவதும் பாகவதருக்கு எழுதி விட்டார். இதை அறிந்த பாகவதர், அந்த முஸ்லீம் நண்பர் இறந்ததும் அவருடைய மகன்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு சேர வேண்டிய சொத்துக்களை அவரிடமே கொடுத்து விட்டார். அதுபோல், பாகவதரின் சேவையைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்த கிராமத்தை மறுபடியும் கிராமத்தினரிடமே கொடுத்து விட்ட பெருமை அவரிடம் இருந்தது. பாகவதர் பால் உயிரையே வைத்திருந்த, திருநெல்வேலி சொக்கலால் பீடி சக்ரவர்த்தி செய்ய முன் வந்த பல உதவிகளை நிராகரித்து விட்டார்.

அவரின் கர்நாடக இசைக்கு சான்றாக தஞ்சை அருகே நடந்த நிகழ்வை சான்றாக கூறுவர். தஞ்சாவூர் அருகே உள்ள மாவூரில் இசைக் கச்சேரி செய்யும் பொழுது இரவு அங்கிருக்கும் அரவை இயந்திர நிறுவனத்தின் வழக்கமான அறிவிப்புச் சங்கொலி முழங்கியது, அப்பொழுதும் பாடுவதை நிறுத்தாமல், அந்த சங்கொலிக்கு நிகராக தன் குரலை இழுத்து அது முடியும் வரை பாடினார். மக்களின் கவனம் முழுவதும் அவரின் குரலின் மீதுதான் இருந்தது. அக்காலத்தில் எம்.கே.டி. பயணம் செய்யும் புகை வண்டிகள், பெரும்பாலும் குறித்த நேரத்திற்கு நான்கு அல்லது ஐந்து மணி நேரம் தாமதமாகவே இலக்கை அடைவது வழக்கம். இடையில் இருக்கும் நிறுத்தங்களின் 'பிளாட்பாரம்' சீட்டுக்கள் நிறைய விற்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு நிறுத்தத்திலும் மக்கள் தம் நாயகனைக் கீழே இறங்கச் செய்து அவரின் நடையுடை பாவனைகளையும், ஒளி பொருந்திய விழிகளையும், இனிய தெய்வீகக் குரலையும் கண்டு, கேட்டுப் புளகாங்கிதமடைவார்கள். ஒருமுறை அவர் காரில் திருச்சியிலிருந்து புதுக்கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். வழியில் லெவல் கிராஸிங்'கில் கார் நின்ற பொழுது மக்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஆச்சரியம்... பாகவதர் நிற்கும் செய்தி அறிந்த புகைவண்டி ஓட்டுனர் புகைவண்டியையும் நிறுத்திவிட்டார். பாகவதரின் 'மன்மத லீலையை' பாடலை பாடிக் கேட்ட பின்னரே புகைவண்டியை ஓட்டிச் சென்றாராம். ஒரு முறை அவர் ஒரு இசை நிகழ்ச்சிக்காக தேவகோட்டைக்கு சென்ற பொழுது, தேவகோட்டை புகை வண்டி நிலையத்தில் அவரை வரவேற்று, ஒரு அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அமர்த்தி ஒரு அரசரைப் போன்று நாதஸ்வரக் கலைஞர்கள் முன்னே வாசித்துக்கொண்டு புகை வண்டி நிலையத்திலிருந்து இரண்டு மைல் தூரம் சென்று மரியாதை செலுத்தினார்களாம். பாகவதர் ரசிகர்கள் அவருடைய நிகழ்ச்சி நடைபெறும் இடங்களையும், பொருட்காட்சி அரங்குகளையும் பூரணமாக ஆக்கிரமித்துக் கொள்வது வழக்கம். மின் கம்பங்களையும் விட்டு வைப்பதில்லை. சேலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ஒரு மின் கம்பத்தில் ஏறி மின்சாரம் தாக்கி இறந்த ஒரு சிறுவனுக்கு நஷ்ட ஈடாக 5000 ரூபாயை (அக்காலத்தில் அது மிகப்பெரிய தொகை) அந்தப் பையனுடைய வீட்டைத் தேடிச் சென்று எம்.கே.டி. கொடுத்த சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது. ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார்கள், அரசர்கள் போன்றோர் தனிப்பட்ட முறையில் அவருடைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தால் அவரை மதிய உணவிற்கோ அல்லது இரவு விருந்திற்கோ அழைத்து வகை வகையான இனிப்புகளுடன் அறுசுவை உணவு அளிப்பது வழக்கம்.

நமது வீட்டுக்கு பாகவதரை அழைத்து விருந்து அளிக்க இன்று அவர் இல்லை. ஆனால், அவரது பாடல்கள் இருக்கின்றன. அனேகமாக எல்லாமே இணையதளங்களில் கிடைக்கின்றன. கேட்டு மகிழுங்கள், பாகவதர் நூற்றாண்டைக் கொண்டாடுங்கள்.

# முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது எங்களின் பழமொழிகளில் ஒன்று. பல பெரியோர்கள் தங்களின் விடாமுயற்சியால் பல வெற்றிகளைப் பெற்றதை நாம் அறிவோம். இன்றும் கூட விடாமுயற்சி செய்தால் நாம் வெற்றிகளைப் பெறலாம்.

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு உதாரணமாக இம்முறை நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் பல சம்பவங்கள் நடந்தன. அதில் ஒன்று, கனடாவுக்காக விளையாடிய ஜேசி ஜே அன்டர்சன் (Jasey Jay Anderson) என்ற தோட்டக்காரர் பெற்ற வெற்றியைக் கூறலாம். இவர் சினோபோர்டிங் விளையாட்டில் பங்குபற்றியவர். இப்போது இவருக்கு 34 வயது. 2006 ஒலிம்பிக் போட்டிகளில் கடைசியாய் முடித்தவர்.

**- சங்கவை -**

**தரம் 8**

இவர் 2002 ஒலிம்பிக் போட்டிகளிலும் கடைசியாக முடித்தவர். 1998 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் இவர் முதலாவதாக வந்துகொண்டிருந்தவர், ஆனால் கடைசி நேரத்தில் அவரது உபகரணம் பழுதானது. இதனால் ஜேசி ஜே அன்டர்சனுக்கு பரிசு கிடைக்கவில்லை. இம்முறை தனது விடாத முயற்சியினாலே அவர் தங்கப்பதக்கம் பெற்றுக் கனடாவுக்குப் புகழ் தந்தார்.




இவர் அவருடைய பிள்ளைகளுக்கு ஒரு போதும் முயற்சியை கைவிடக் கூடாது என்பதைக் காட்டுவதற்காக நாலாவது தடவையும் மனம் தளராது பங்குபற்றி தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் காட்டினார். இது போலவே நாங்களும் எங்களது முயற்சிகளில் மனம் தளரக் கூடாது. அப்படிச் செய்தால் நாங்களும் வெற்றிகளைப் பெறலாம்.

# இன்னொரு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

இராமலிங்கம் ஏதேதோ கேள்விகள் கேட்க, நீலகண்டரும் அவனுக்கு தக்கதான பதில்களைக் கூற,....

இராமலிங்கத்திற்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனாலும் ஒட்டிப் பிறந்த உனது மருமக்களில் ஒருவனைப் பறிகொடுக்கப்போகின்றாய் என நீலகண்டர் கூறுவது போல இருந்தது. சுமாராக 2 மணியளவில் சோர்வுடன் தனது வீடு நோக்கிப் புறப்பட்டான் இராமலிங்கம்.

திகைத்த முகத்துடன் தன்னையே பார்த்துக் கொண்டு நின்ற தமக்கை அகிலாண்டம்மாளைப் பார்த்து "விதி வலியது. அதனை யாரால் வெல்ல முடியும்" என்றார் நீலகண்டர்.

"எப்படியென்றாலும், நீ தம்பி இப்படி நேரடியாச் சொல்லி இருக்கப்பிடாது. அந்தப் பொடியன்ரை முகம் எப்படி மாறிவிட்டது பாத்தியே!"

"ஓமக்கா, நீங்கள் சொல்லுறது சரிதான். ஆனால் சொல்லாமல் மழுப்பிச் சொல்லப் போக, அது வேறுவிதமாக விளங்கிக் கொள்ளப்பட, பிறகு என்னுடைய கணிப்புக்கெல்லே பிழை வந்து விடும். எதையும் நேராகவே சொல்லிவிடுவதுதான் எனது வழக்கம், நல்லதும் கூட." நீலகண்டர் பதில் சொல்ல, ஒரு பெருமூச்சுடன் அகிலாண்டம்மாள் வீட்டுக்குள் சென்றாள். இனித்தான் சமையல் செய்து முடிக்க வேண்டும் என்ற அவசரமும் அவளிடம் தெரிந்தது, - இன்னமும் வரும்

# Ashok Travels Ltd.

## 416-298-4500

## Please call us now to take the advantage of our special offer

To Sri Lanka

From: $715* +Tax

To India

From: $620* +Tax




Ashok Travels (அசோக் டிரவல்ஸ்) உங்கள் தேவைகளை கண்காணிக்கிறது.

உங்கள் பணத்தை சேமிக்க நாம் உதவுகின்றோம்.

உங்கள் மொழியில் உரையாடும் எங்களை ஒருமுறை அழைத்துப் பார்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பயணத்தை சௌகரியமாக்குவதோடு பணத்தையும் மீதப்படுத்த உதவுகின்றோம். அத்துடன் உங்கள் சுற்று வட்டாரத்தில் 5215 Finch Ave. East ல் உள்ளோம்.

416-298-4500 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து தமிழில் சரளமாக உரையாடும் ரமேஸ் அல்லது மேரியுடன் பேசுங்கள்.

சிக்கனமான கட்டணத்தை நாங்கள் உத்தரவாதம் செய்கின்றோம். ஒருமுறை எங்களுக்கு ஊடாகப் பயணம் மேற்கொண்டால் நீங்கள் எங்களை மறக்கவே மாட்டீர்கள்.

உங்கள் ஆதரவுக்கு நன்றி. தயவு செய்து அழையுங்கள் அசோக் டிரவல்ஸ் **416-298-4500**

**Please call Ashok Travels for lower air fare 416-298-4500**

* Above fares are for special seats availability. Certain conditions and restrictions apply. Prices are subject to availablity of the seats. Taxes vary from airlines to airlines. Above fares are for Jetairways. Seats are very limited. Call right now for our specials. The taxes are between $400-$600.

TICO 50018127 IATA

info@ashoktravel.com
www.ashoktravel.com

# 'நான் தான் சரி' என்ற ஆணவம்

நான் சொல்வது, செய்வதுதான் சரி எனப் பிடிவாதமாயிருக்க வேண்டிய தேவை என்னிடமிருப்பதற்காக என்னை மன்னித்திட இன்று நான் உடன்படுகின்றேன்.

'இருந்தாற் பிழை, நின்றாற் பிழை' என நீ என்ன செய்தாலும் சிலருக்கு அது ஒரு போதும் சரிவராது. எதைச் சொன்னாலும் செய்தாலும், என்னமாதிரிச் சொன்னாலும் செய்தாலும் சகலதிலும் சிலர் பிழை கண்டுபிடிக்கத்தான் செய்வார்கள். அதில் நீயும் நிச்சயம் அகப்படுவாய். தம்மைச் சரி என நிருபித்திட சிலர் நீ சொல்லாததை யெல்லாம் சொன்னதாகத் திரித்து வேறு அர்த்தத்தையே உருவாக்கி விடுவார்கள். உனது பேச்சு எடுபடாது என்பதை நீ உணருமுன், நீ பிழை, அவர்தான் சரி என விபரீதமாக முடிந்து விடும். 'நான் தான் சரி' என அடம்பிடிப்பவர்கள் உன்னை எதிர்க்கும் போது, உன்னிடத்திலும் கூட 'நான் தான் சரி' எனும் அந்த அகங்கார உணர்வைத் தலைதூக்கப் பண்ணிவிடுவார்கள்.

'நான் தான் சரி' எனும் இறுமாப்பு உன்னிடம் கொஞ்சம் இருந்தாற் கூட அது பிறருக்குத் தெரிந்து விடும். உனக்கு உண்மையாகத் தேவையானதைப் போலி அக்கறை, பரிவு எனும் போர்வைகளால் மூடி மறைத்தாலும் தம்மைப்பற்றிய உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் அது உன்னிடத்திலும் இருப்பதாக கண்டுபிடித்து விடுவார்கள். இதன் பிரதிபலிப்பாக ஜாடிக்கு மூடியாக அவர்கள் உனக்கும் மேலதிகமாக வைராக்கியமாயிருப்பார்கள். தாங்கள் தான் சரி என்பதை நிருபிக்க வேண்டிய கட்டாயத்திற்காக உன்னைப் பலிக்கடா-வாக்கிட அவர்கள் தயங்கமாட்டார்கள். இதுதான் உனக்கு வேண்டும் என தேர்ந்தெடுத்தால் நிச்சயம் நீ தோல்வியுற்று



துன்பப்படத்தான் போகிறாய்? எனது ஆளுமை சிறப்பானது எனப் பிறர் முன் வெளிப்புறமாக உறுதிப்படுத்தலின் தேவைதான் 'நான் தான் சரி' என நிருபிக்க விளையும் உனது உந்துதல். 'நான் தான் சரி' என நினைக்கும் பேர்வழி அதேபோன்ற இன்னொரு நபருடன் பிரச்சனைப்படுவது தவறு போலத் தென்பட்டாலும் உண்மையில் அது நன்மைதான் செய்கிறது. இப்படிப் பிரச்சனைப்படுவதால் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்து யார் முதலில் பின்வாங்குகிறாரோ அவரின் ஆளுமை, சுயஅங்கீகாரம், சுயமன்னிப்பு, சுயஅன்பு என்பவற்றால் மேன்மையடைந்து சிறப்புறும்.

உனது சுயமதிப்பை உயர்த்திட உனது உறவுகளின் வெளிப்புற ஆதரவு உனக்கு அத்தியாவசியமாயிருப்பதை இதுவரை நீ உணராது இருந்திருக்கலாம். ஆனால் இன்று உனது மமதையைக் கைவிட்டு இறைவனிடம் சரணாகதியடைந்து விடு. சற்று நிதானித்து ஆழ்ந்து சுவாசித்து, உடலைத் தளர்த்தி, உன்னையே நீ கேட்டுக்கொள். என்னிடத்திலோ என்னைப் பற்றியோ என்ன குறை இருக்கிறது. அந்தக் கேள்விக்கு நீயே பதிலையும் சொல். குறை ஒன்றும் இல்லாதவர் இல்லை. அதன்பின் 'நான் தான் சரி' என ஒருபோதும் நீ பிடிவாதம் பிடிக்க மாட்டாய். அப்போது முழுக்க முழுக்க நீ சரியில்லை என்பது உனக்குத் தெரியும். வேறொன்றும் முக்கியமில்லை.

**'நான் தான் சரி' என அடம்பிடிக்கும் எனது தேவையைக் குணப்படுத்தும் முயற்சியில் இன்று முதல் விசுவாசத்துடன் நான் ஈடுபடுகின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 168



மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX
For Sale
$950,000

• Warden/Lawrence
• Commercial Condo Factory/ Manufacturing
• All Existing Light Fixtures, Some Chattels Included.
Houdr for Sale
$379,900

• Portunion / 401
• 3+1 bedroom
• 4 washrooms
• Detached house 2-Storey
• Stove ,Fridge ,Washer ,Dryer ,Dishwasher ,All Elf ,All Window Coverings.
House FOR SALE
$294,900

• Finch/Markham/Tapscott
• 2-Storey detached
• 3 +1 bedroom • 3 Washrooms
• 2 Fridges , 2 Fridges , Washer, Dryer , Cac
FOR SALE
$139,900

• Woodbine / Hwy 7
• Restaurant Business for sale • Prime Location • Low Rent • All The Chattels Including All Granite Tables ,Equipments And Signage And More. • Motivated Vendor
Sale Of Business

$99,800
Simcoe/Beatrice, Oshawa, ON. Busy Convienience Store In A Busy Intersection ,Very Affordable Rent Of $1650/ Month (Incl Tmi), Income From Lottery Can Pay Off Your Rent ,Opportunity To Improve Your Business , Movie Rental Brings Extra Money , Very Rarefind , Price Includes Business And Goodwill Only , Stock (Approximately 20K) Comes Extra , Lease Term Is 5+5Years.
House for Sale
$409,900

• Taunton/Baycliffe, Whitby, Ontario
• 4 bedrooms • 3 washrooms
• Stove ,Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.
Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E, Unit 250
(GTA Square Mall)
Toronto, ON M1S 0C2
For More Information Please Contact Paddy at
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
www.avmmax2000.ca
Atlantic City Tours
July (16th - 21st)
August (13th - 18th)
5 Days Trip Starting From: $450.00 /Person
• New York City - Statue of Liberty, Empire State Building, Ground Zero
• Atlantic City - Casinos
• Washington D.C. - White House, Museums
• Pittsburgh, Pennsylvania - Sri Venkateswara Temple
• Grove City, Pennsylvania - Prime Outlets (Shopping)
These prices include bus far, 4 nights hotel accommodations, and continental breakfast for 4 days
Individuals are responsible for entrance fees for all attractions, all lunches, dinners, gratuity, and any other expenses

PRIME OUTLETS